
# சூறாவளி




A.K.வேலன்

# சூறாவளி

ஆசிரியர் A. K. வேலன்

செந்தமிழ்ப் பாசறை,

கரந்தை - தஞ்சாவூர்.

முதற்பதிப்பு : மார்ச் 1949

விலை ரூபாய் ஒன்று

உரிமைப்பதிவு

தஞ்சை கதிரேசன் அச்சுக்கூடத்தில் பதிப்பிக்கப்பட்டது.

# முன் மொழிகள்.

•

சூறாவளி—ஒரு கற்பனைக்கதையல்ல. நடை முறை—லட்சியம் ஆகியவற்றின் கலைப்பின்னல். இன்றைய சூழ்நிலையில் சமுதாய சீர்திருத்தத்திற்குத் தேவை யான சாடுதல்! நடைமுறையில் எடுக்க வேண்டிய நடவடிக்கைகள்!! ஆனால் நாடகமாக மெருகிடப்பட்டிருக்கிறது.

இதனை அரங்கில் சித்தரித்துக் காட்டும் தேவி நாடக சபையாருக்கும், அச்சியற்றிக் கொடுத்த தஞ்சை, கதிரேசன் பதிப்பகத்தாருக்கும் எனது நன்றி.

அட்டைப்படம் வரைந்துதவிய ஓவியர், C. G. ராசன், இசைப்பாடல்கள் அமைத்துக்கொடுத்த புலவர்-பாலு, கவிஓவியன், மற்றும், புத்தகம் உருப்பெற பெரிதும் பங்கெடுத்துக்கொண்ட தோழர்கள்; ஒத்துழைப்பை நல்கிய அன்பர்கள், யாவருக்கும் கடமைப்பட்டிருக்கிறேன்.

வாழிய தமிழ்! வளர்க கலை!!

கரந்தை
5—3—49

அன்பன்,
**A. K. வேலன்**

# நாடக மாந்தர்.

★

| | | | |
|---|---|---|---|
| 1 | அமரன் | ... | வீரத்தியாகி, கட்டிளங்காளை |
| 2 | கன்னி | ... | வீரங்கனை, வடிவழகி, அமரனின் [காதலி |
| 3 | சூருவளி | ... | புரட்சித்தந்தை, அரசியல் ஞானி [அஞ்சாநெஞ்சன் |
| 4 | நரித்தலையன் ... | ... | மறவர் தளபதி |
| 5 | புலிக்கண்ணன் | ... | ஒற்றர் தலைவன் |
| 6 | சிங்கன் | ... ... | வீர மறவன் |
| 7 | வீரப்பன் | ... ... | கன்னியின் தந்தை |
| 8 | பொன்னி | ... ... | கன்னியின் அக்காள் |
| 9 | வேதியர் | .... .... | அமரனை ஆதரித்தவர் |
| 10 | கமலா | | வேதியரின் மகள், அமரபவனத்தலைவி |
| 11 | சிம்மசேனன் .... | ... | சந்திரவதி அரசன் |
| 12 | மதிவாணன் | .... .... | நல்லமைச்சன் |
| 13 | கலைவாணன் ... | ... | கலையமைச்சன் |
| 14 | தளபதி | .... | சந்திரவதி அரசாங்க தளபதி |
| 15 | மதனசேகரன் .... | .... | எமகிரி ஜமீன் |
| 16 | மோகனதாஸ் .... | ... | ஜமீன் தோழன் |
| 17 | சாவடி அய்யர் ... | .... | ஜமீன் கையாள் |
| 18 | சன்னிதானம் | .... .... | இந்தூர் மடாதிபதி |
| 19 | பெருமக்கள் | ... | ஜமீன், செல்வந்தர், மதத்தலைவர் |

மற்றும், உழவர்கள், போலீஸ், தம்பிரான் திருக் கூட்டம், நாட்டியக்காரர்கள், வீரர்கள், குடுகுடுப்பைக் காரன், கோயிலார் முதலியோர்.

# சூறாவளி

★

வாழ்க! வாழ்க! வாழ்கவே!! (வாழ்)

வாழ்க தமிழ்மொழி வளமார் இன்பம்
சூழ்க திராவிட சுதந்தர நாடு (வாழ்)

வளர்கலை கைத்தொழில் வாணிபம் வாழ்க
வறுமையும் சூழ்ச்சியும் மடமையும் வீழ்க
வளர்தமிழ் மாதர்கள் அடிமையின் நீங்க
வண்டமிழ் அரசியல் வாழ்வுமிக் கோங்க (வாழ்)

●

## களம் 1.

இடம் :— மரகத மலைச்சாரல்

காலம் :— மாலை

மாந்தர் :— மலைவாணர்கள்

● **கா**ர்முகில் தவழும் கொடுமுடிகள்; பசுங்காடு அடர்ந்த நெடும் சாரல்கள்; 'சல சல' வென வழிந்தோடும் வெள்ளிய அருவிகள்; ஆழம் தெரியாத கொடும் பிலங்கள்; இருள் செறிந்த குகைகள்; பெருங்குரல் எடுத்து முழங்கும் வன விலங்குகள்; அச்சம் தரும் நச்சுப் பாம்புகள்; எண்ணமுடியா வண்ணப் பறவைகள்; மறம் செறிந்த மலைவாணர்கள்; காட்சிக்கினியத் தோற்றங்கள்; எழுத ஒண்ணு இயற்கை வனப்பு மலிந்த மரகத மலை.

● செங்கதிர் சாயும் வேளை; அந்தி வந்து அணையும் நேரம்; மஞ்சள் வெயில் கொஞ்சும் காலம்; தென்றல் தவழ்கிறது.

● புரட்சித் தலைவன் சூருவளியின் ஆணைக்கொம்பு பூம்! பூம்! என ஒலிப்பதை குன்றுகள் எதிரொலிக்கின்றன.

● வட்டுடை உடுத்தி, வாளேந்தி, பறை முழக்கி, பள்ளு பாடி சாரிசாரியாக மலைவாணர்கள் கல்லால மரத்தடியில் ஒன்றுகூடுகின்றனர். சிறிது நேரத்தில், அகன்ற மார்பும், திரண்ட தோள்களும், நீண்ட கைகளும், திண்ணிய தாள்களும், தடித்த உடலும், கறுத்த மேனியும், முறுக்கேறிய மீசையும், கனல் பொறி பறக்கும் கண்களும் கொண்ட மிக உயரமான ஓர் உருவம் புலித்தோலுடுத்தி, மின்னும் சிறகால் வண்ண முடிதரித்து, இடையில் கொடுவாளும், கையில் குத்துக்கோலும் எடுத்து, எழுந்தருளுகின்றது.

ஆம்! இவ்வீரப் பெருமகன்தான் புரட்சித்தந்தை சூருவளி!

மெய்க்காவலன்:— எம் தலைவன்.

யாவரும்:— வாழ்க! வாழ்க!!

மெய்:— மறவர் வீரம்......

யாவ:— ஓங்குக! ஓங்குக!!

மெய்:— புரட்சிக் கனல்......

யாவ:— வெல்க! வெல்க!!

(தலைவன் புன்சிரிப்போடு கையமர்த்தி பெருமிதத்தோடு பளிங்குப் பாறையில் அமர்கின்றான். மலைக்கூத்து நிகழ்கின்றது)

தூரு :— வீரப் பழங்குடி மக்களே! கடமையே நமது உடைமை. நன்மையே நமது வன்மை. மானமே நமது கானம். உரிமையே நமது வாழ்வு. உண்மைக்காக உழைப்போம். உலகின் செம்மைக்காகப் பாடுபடுவோம். கொடியோர் செயல் கெடவே கொலை வாளினை எடுப்போம். பாடுபடாது பங்கெடுக்கும் பாதகர்கள், உழைக்காது பிழைக்கும் உன்மத்தர்கள், ஏழைகளைக் கோழைகளாக மதிக்கும் இறுமாப்பாளர்கள், ஊரை ஏய்த்து வாழும் உலுத்தர்கள், பகற்கொள்ளையிடும் பழிகாரர்கள், பிறப்பில் உயர்வுபேசும் பேதைகள், செருக்கினால் தருக்கித் திரியும் தான்தோன்றிகள், ஒழுக்கம் கெட்ட சழக்கர்கள் உங்கள் வேலுக்கு இலக்கு, வாளுக்கு இரை. நெற்றி வியர்வை நிலத்தில் சொட்டச் சொட்ட பட்டப்பகலில் மூட்டை தூக்குவோன், வண்டியிழுப்போன், கல் உடைப்போன், மரம் அறுப்போன், மண் வெட்டுவோன், சேற்றிலே நின்று சிதையும் உழவன், சுரங்கம்தோண்டும் தொழிலாளி, தரங்கம் மூழ்கும் உழைப்பாளி, நம் அன்பிற்குரியர்; ஆதரவிற்குரியோர். இருக்க இடமின்றி நிற்க நிழலின்றி படுக்கப் பாயின்றி, கட்டக் கந்தையின்றி, குடிக்கக் கூழின்றி தன்னிலைபற்றி நினைக்க நேரமின்றி, உழைத்துக் களைத்து, சலித்துத் துடிக்கும் ஏழையர்க்குத் தோழராவோம். பாட்டாளிகட்குக் கூட்டாளிகளாவோம். ஓங்குக புரட்சி! வெல்க நம் சக்தி!!

(அதுசமயம் ஒற்றன் புலிக்கண்ணன் ஓடோடியும் வந்து அடிபணிதல்)

தூரு :— புலிக்கண்ணா! இன்றைய லக்கு எங்கே?

புலிக்கண்ணன் :— ஐயே! வணக்கம். இன்றைய லக்கு ராணிவாடி சத்திரம். இந்தூர் மடாதிபதி தம் பரிவாரங்

களுடன் தண்டு இறங்கியுள்ளார். பக்தகோடிகள் பாத காணிக்கை செலுத்தி செய்த பாதகங்களுக்கு பரிகாரம் தேடிக்கொண்டிருக்கின்றனர்.

சூரு :— [எள்ளி நகைத்தல்] மக்களை மடமையின்பாற் படுத்தி ஆதிக்கம் செலுத்தும் மதோன்மத்தர்கள். மதத்தின் பெயரால் மக்களின் இதத்தைக் கெடுத்து வாழும் அதமர்கள். காவிப் போர்வையில் உறையும் காம வெறியர்கள். தெய்வீகத்தின் பெயரால் தீச்செயல் புரியும் திருடர்கள். [நகைத்தல்] நரித்தலையா! பண்டாரக் கோலத்தில் பஜனை நடத்திச் செல்க; நம் திருவிளையாடல் சிறப்பாக நடந்தேறட்டும்.

நரி :— தலைவ! வணக்கம். தங்கள் ஆணை.

யாவரும் செல்கின்றனர்.



## களம் 2.

இடம் :— ஜமீன் பூங்கா

காலம் :— மாலை

மாந்தர் :— அமரன், கன்னி

● தெளிபுனல் ஓடை; ஒளிமணி மாடம்; அருங்கனி மரங்கள்; நறும் துணர்க்கொடிகள்; மணமலர்ச் செடிகள்; மலி பூங்கா.

● பூஞ்சோலைச் சிற்பி அமரன் தாயினும் சாலப்பரிந்து வளம் செய்து வருகின்றான்.

● மேல்வானம் சிவந்து செங்கால் வாங்கும் அந்திப் போது. மின்னல் எழில் கன்னல் மொழி கன்னியவள் கக்கத்தில் கலயம் வைத்து, தலையிற் சுள்ளி சுமந்து, கையில் துள்ளிவரும் வெள்ளாட்டு மறி பிடித்து சாலை வழியாக அன்ன நடை பயின்று தெம்மாங்குபாடி வருகிறாள்.

மாலைவெய்யில் மறைந்துபகலும் மங்கிப் போவுது
வானமெங்கும் நட்சத்திரம் மின்னிக் காணுது — தூ தூ
சாலைமரக் குருவிக்குஞ்சும் தாயை கூவுது
சலசலன்னு ஓடையில்மீன் தாளம்போடுது —டிரியோ தூ தூ
அரைவயிற்றுக் கஞ்சியுண்ட அடிமைக் கூலிகள்
அசந்துறங்க வீடுசேரும் அந்தி சூழுது — தூ சூ
திரைமறவில் நேசம்செய்யும் வேசப் போலிகள்
தீங்குசெய்யப் பாங்குசெய்யும் சந்திசூழுது —டிரியோ தூ தூ
உழைத்தலுத்து ஓடிப்போனர் உடையுமில்லாமே
ஒடுங்கிக்கையை பொத்தித்தூங்க ஓடுதே பகல் — சூ சூ
கொழுத்தபணக் காரவுங்கக் கூத்து பாட்டோடே
கொஞ்சிகுலவ தஞ்சமாக கூடுதே நிலா. —டிரியோ தூ தூ

● இளந்தென்றல் செய்த குறும்பால், முன்தானை நழுவுகின்றது. அதனை இழுத்துப் போர்த்த முனைந்தபோது, வெடுக்கெனத் துள்ளிப் பாய்ந்தோடிய ஆடு சோலையினுள் புகுந்து, இளம் துளிர்களைச் சுவைத்தது.

கன்:—(கெஞ்சுங் குரல்) ஐயா! மன்னிக்கவும். வாயில்லா ஜீவன், தெரியாமல் வந்திடுச்சு.

அம:—பெற்றவளுக்குத் தெரியும் பிள்ளை அருமை. நட்டவனுக்குத் தெரியும் பயிர் அருமை.

கன்:—பெரிய மனதுபண்ணி விட்டிடுங்க.

அம:—எஜமானர் கேட்டால் பதில் என்ன சொல்வது?

கன்;—ஏழைக்கு ஏழை இறங்க மனமில்லையா?

அம—புதுவிதச் செடியென்று போற்றி வளர்க்கச் சொன்னார்கள்.

(அந்த சமயத்தில் மோகனும், மதனனும் சோலையின் மறுபுறத்தில் உலாவிவருகின்றனர். மோகன் சிட்டி அடிக்கின்றான். அவ்வொலிகேட்டு கன்னிதிடுக்கிடுகின்றாள்)

கன்:— ஐயோ!

அம:— என்ன புலியா? கிலி அடையிறியே!

கன்:— காட்டுப் புலியானால் கறிக்காக வேட்டையாடும்; இந்நாட்டுப் புலியோ மானத்தையே தின்னும்.

அம:— ம்......என்ன நிஜமா......?

கன் :— ஆம்! தன்னந்தனியாக அவன் கண்ணில் சிக்கி ஞல் தப்ப வழியில்லே. மானம் கப்பலேறிவிடும். ஐயோ! எப்படியாவது காப்பாற்று. (கலங்கல்)

அம :— உஸ்...... அழாதே! அப்படி அந்த செடிமறை வில் களேஎடுப்பது போலிரு. நான் பார்த்துக்கொள் கிறேன். (தனக்குள்) ஏழை அழுத கண்ணீர் கூரிய வாளொக்கும்.

(ஜமீன் மதனனும், மோகனும் அவ்விடத்திற்கு வந்துசேரு கின்றனர். கன்னி செடிமறைவில் ஒதுங்கி நிற் கின்ருள்)

மோகன் :— அமரா! இங்கே ஆடு, அங்கே குட்டி! (கிண்டலாக)

அம :— ஆமாங்க, நம்பக் கிழவன் பேத்தி கஞ்சிகொண் டாந்திருக்கு.

மோ :— ரொம்ப இளங்குட்டி, பதம் சரியில்லே, பின்னுக் காகும்.

ஜமீ :— கிழவன் ஆடு கூட வைத்திருக்காஞ...?

மோ :— பேத்தி கூட இருக்கான்ஞ!

ஜமீ :— எங்கே அவன்?

அம :— ஏரிக்கரைக்கு போயிருக்கு...

ஜமீ :— ஏன்...?

மோக:— நண்டு கிண்டு பிடிக்கப்போயிருப்பான்.

ஜமீ :— சரி நாம் போவோம்.

மோ :— டேய்! ஆட்டுக் குட்டிய, நம்ம பட்டியில கொண் டாந்து விட்டிடுடா. (இருவரும் போதல்.)

கன் :— அப்பாடா ! போனஉயிர் வந்தது. இந்த உதவியை மறக்க மாட்டேன்.

அம :— உதவியா ...... மனித இதயம் கொண்டவனின் கடமை. வேலியே பயிரை மேய்வதா ...?

கன் :— ஊருக்கு புதிசுபோலிருக்கு ...

அம :— ஆம் ! சந்தையிலே வாங்கிவந்த யந்திரம்.

கன் :— அப்படி என்றால் ?

அம :— (பெருமூச்சு) அது வேறு விஷயம். நீ ஆட்டை ஓட்டிச் செல்.

கன் :— ஏனோ இம்மாஞ் சலிப்பு. என்னமோ மனசு ... ன்னியே... அது எங்களுக்குக் கிடையாதா...?

அம :— உண்டு. ஆனால், நரிதின்னக் கோழி கூவுமா ?

கன் :— அப்படி என்ன ரகஸ்யம், வெளியில் தெரியக் கூடாதா...?

அம :— இல்லை. தாயை இழந்தேன். தந்தையைப் பறி கொடுத்தேன் ; சந்தையில் விற்கப்பட்டேன் ; நல்ல சிந்தையில்லை. தந்தைதைத் தின்று யந்திரம்போல் உழைத்து, நாய் போல் இச்சோலையைக் காத்திருக்கின்றேன்.

கன் :— ஐயோ ! நீயும் அப்படித்தானா ! பெரிய இடத்துக் காரியக்காரன், சௌகரியத்துக்கு என்ன குறைச்சல் என்றல்லவோ நினைச்சேன். எங்களுக்கு ஜமீன் கொடுமை தாங்க முடியவில்லை. மாடாய் உழைக்கின்றோம் ; பாடாய்ப் படுத்துகின்றான்.

அம :— காலம் மாறும், கவலையை மறப்போம். சற்றுமுன் நீ பாடிவந்தாயே தெம்மாங்கு, அது என் நொந்த உள்ளத்திற்கு மருந்து. எங்கே இன்னொரு முறை......

கன் :— [தலை கவிழ்ந்து மௌனம்சாதித்து, பிறகு பாடிக்கொண்டே திரும்பிச் செல்லுதல்]

●

## களம் 3.

இடம் :— ராணிவாடிச் சத்திரம்.

காலம் :— முன்னிலா.

மாந்தர் :— ஆதீனத்தார், மறவர்கள்.

● *நீலவானில் வெண்ணிலா தண்ணொளி வீசுகிறது. விண்மீன்கள் கண்ணிற்கினிதாய் உலவுகின்றன; மென் காற்று இளந்தளிர்களை அசைத்துக்கொண்டிருக்கிறது; நிழலும், நிலவும் வழியில் பின்னிக் கிடக்கின்றன; பட்சி ஜாலங்கள் நித்திரா தேவியின் ஆட்சிக்குட்பட்டுவிட்டன; பூரண அமைதி நிலவுகின்றது. அது போது......*

(மலைவாணர்கள் காவியுடுத்தி, கண்டிகை தரித்து, தாடி உருவி, தண்டு கமண்டலம் தாங்கி, திருவோடேந்தி, முழு நீறு பூசி, சிவநேசச் செல்வர்களாக 'அரகர சிவ சிவ சம்போ' என பஜனைபாடி வருகின்றனர்.

*பஜனை :—*

கோயில்பள்ளி ஏதடா! குறித்துநின்ற தேதடா!
வாயினால் தொழுதுநின்ற மந்திரங்க ளேதடா!
இட்டகுண்ட மேதடா! இருக்குவேத மேதடா!
சுட்டமட் கலத்திற்கு சுற்றிநூல்க ளேனடா!

நட்டகல்லை தெய்வமென்று நாலுபுட்பம் சாத்தியே
சுற்றிவந்து மொணமொணென்று தொழுதுநிற்ப தேனடா!
சட்டையிட்டு மணியடிக்கும் சாத்திரச் சழக்கரே!
திட்டையேது ஞானமேது பட்டையேது சொல்லுவீர்!

(சத்திரத்தில் சந்நிதானம் உபதேச காண்டம் நடத்துகிறது. பக்தகோடிகள் பாதகாணிக்கை செலுத்துகின்றனர்)

தம்பிரான் :— சுவாமி! எமகிரி ஜமீன் மதனசேகரர் சந்நிதானத்தின் பாதசேவைக்குக் காத்திருக்கிறார்.

சந்நிதானம் :— சிவோகம்!

(ஜமீன் பாதகாணிக்கை செலுத்தி வணங்கி நிற்றல்)

தம் :— ஜமீன்தார்வாள் மகாபுண்ணிய சீலர். தெய்வபக்தி ரொம்ப உண்டு. தர்மத்திலே இவாளுக்கு ஈடே கிடையாது.

சந் :— சிவோகம்! சர்வ மங்களம். (திருநீறு அளித்தல்)

(ஜமீன்தார் வெளியேறுதல். வெளியிலிருந்து பஜனை ஒலி கேட்கிறது)

தம் :— சிவநேசச் செல்வர்காள்! வருக!! வருக!!!

பண்டாரம் :— சிவ சிவ சம்போ மகாதேவ!

தம் :— நீண்ட வழிப்பிரயாணம் போலும்......

பண் :— ஆம், துறவிமங்கலம். மடாலயத் திருத்தொண்டர் குழாம். காசி யாத்திரை மேற்கொண்டுள்ளோம்.

தம் :— அரகர! அரகர!! புனித யாத்திரை......புனித யாத்திரை.

பண் :— எல்லாம் வல்ல எம்பெருமான் திருவுள்ளம் இருந்தவாறு.

தம் :— எழுந்தருளியிருப்பது இந்தூர் மகா சந்நிதானம். நடைபெறுவது உபதேசக் காண்டம். கலந்துகொள்ளலாமே......

பண் :— கிருதார்த்த ரானேம். சிவானுபூதி...சிவானுபூதி

(மகா சந்நிதானத்திற்குத் தலைவணங்கி பண்டாரக் கூட்டம் பிரசங்கத்தில் கலந்துகொள்கிறது.)

சந் :— மெய்யன்பர்களே! சிவஞானம் கைவந்த தவஞான யோகிகள் கூறுவது என்ன? எவ்வளவு பெரிய உண்மைகள். 'வாழ்வாவது மாயம், மண்ணாவது திண்ணம்' அட்சரம் ஒன்று லட்சம் பெறும்; வாழ்வின் ரகசியம் அப்படியே அலசிக் காட்டப்பட்டுள்ளது. இன்னும் கேளுங்கள்! காயமே இது பொய்யடா, காற்றடைத்த பையடா எவ்வளவு அழுத்தமாக இடித்துக் கூறுகின்றார். அவ்வளவும் சத்ய மொழிகள்; வேதவாக்கு; உண்மையை உணருங்கள்! ஆசையை ஒழியுங்கள்! பாசத்தை அறுங்கள்! சிவன் நேசத்தைப் பெறலாம். பரம சிஷ்யர்களே! மண்ணாசை மகா பாதகம்; பொன்னாசை மிக மிகப் பொல்லாதது; பெண்ணாசையோ பெரும்பழி, பெரும்பழி; உலக மாயையில் சிக்கிச் சிதையாதீர்கள்; அழியாத செல்வத்தை, நிலையானப் பேற்றை அடைய முயற்சியுங்கள். நம் லட்சியம் என்ன? முக்தி இன்பம்! நித்தியானந்தம்! சிஷ்ய கோடிகளே! பக்குவிகள் ஆத்மசாந்திபெற யோகமார்க்கத்தில் செல்லத் தடையில்லை; பக்குவம் பெற மனோதிடம் வேண்டும்; ஊக்கம் குன்றக் கூடாது; உள்ளம் தளரக் கூடாது; யோக மார்க்கத்திற்கு முதற்படி பக்தி மார்க்கம். சிவோகம், சிவோகம், சந்நிதானம் சமாதிகூட விரும்புகிறது. எல்லாம் அவன் செயல். சம்போ மகாதேவ!

(தம்பிரான் கற்பூர ஆலத்தி செய்தல்)

தம் :— நமப் பார்வதி பதயே!

யாவரும் :— அரகர மகாதேவ!

(யாவரும் கலைகின்றனர்.)

# திருப்புக் காட்சி.

•

(தம்பிரான் திருக்கூட்டம் துயிலுகிறது. பண்டாரக்கூட்டம் சமயம் பார்த்திருக்கின்றது. திடீரென வேடங் கலைத்து ஆயுதபாணிகளாகச் சூழ்ந்து தாக்குகின்றது.)

**நரித்தலையன் :—** (சவுக்காலடித்தல்)

**தம்பிரான்கள் :—** (சிவோகம், சிவோகம் என அலறுகின்றனர்.

**நரி ;—** தண்டச் சோற்றுப் பண்டாரப் பயலுகளே! தங்க ருத்ராட்சம், பொற் குண்டலம், வெள்ளித் தண்டு, வெல்வெட் மெத்தை......ம்...கழற்றுங்கள். (சவுக்கடி)

**தம் :—** (அலறல்)

**நரி :—** ஏழைகளை நசுக்கி வாழும் எத்தர்கள் செலுத்திய சொத்துக்கள் எங்கே? (சவுக்கடி)

**தம் :—** (அலறல்)

**நரி :—** பொன்னை வெறுத்த புனிதக் கரத்திலே மின்னும் வைரங்களா? என்னே துறவு! என்னே துறவு! (சவுக்கடி)

**தம் :—** (அலறல்)

**நரி :—** தவயோகிகளுக்கு சுகபோக சாதனங்கள் எதற்கோ? (சவுக்கடி)

**தம் :—** (அலறல்)

**நரி :—** மக்களின் மதியைக் கெடுத்து நிதிதிரட்டும் சதிகாரர்களே! (சவுக்கடி)

தம் :— (அலறல்)

நரி :— கயமையை மறைக்கக் காவிபோர்த்திய பாவிகளே!
(சவுக்கடி)

தம் :— (அலறல்)

நரி :— மண்ணை வெறுத்த புண்ணியாத்மாக்களே! உங்கள் ஆதிக்கத்தால் பாதிக்கப்படும் கிராமங்கள் எத்தனை?
(சவுக்கடி)

தம் :— (அலறல்)

நரி :— பெண்ணை வெறுத்துப் பேசும் பேயர்களே! உங்கள் காமவெறிக்கு இரையாகும் கன்னியர்கள் எவ்வளவோ?
(சவுக்கடி)

தம் :— (அலறல்)

**( வேடங் கலைந்த துறவிகளிற் சிலர் பெண்களாக இருத்தல் )**

நரி :— மறவர்காள்! அறநெறி பேசும் இக்குறு நரிகளை கம்பத்திற்குக் கம்பம் சேர்த்திருக்குங்கள்; சூறைப் பொருள்களை வாரிச் செல்வோம்.

**மறவர்கள் மீளல்.**

# களம் 4.

இடம் :— ஜமீன் எஸ்டேட்

காலம் :— காலை.

மாந்தர் :— மதன சேகரன், மோகன்தாஸ், கார்ப்பார், பரிவாரம், குடிகள்.

● வர்ண வேலைப்பாடமைந்த உன்னத மாளிகை; சுற்றிலும் நெடுமதில்; இடையில் பூஞ்சோலை; காவலுக்குக் கோம்பைகள்: ஏவலுக்கு மனித யந்திரங்கள்; இன்பவெறி நடனமிடும் பொன்னரங்கு, ஜமீன் மதனசேகரரின் பாரம்பரைச் செல்வம்.

● அதைச்சுற்றி பனை வேய்ந்த கூரைக் குடில்கள் பல, வரவு வேய்ந்தனவும் உள. சுரை படர்ந்த மனைகளும் உண்டு. திண்ணைப் புறங்களில் ஆடுமாடு கட்ட வசதியான கொட்டகை, கொல்லைப்புறத்தில் குப்பைமேடு. எங்கும் கொசுக்காடு. தரித்திர நாராயணனின் தாண்டவபுரியாக உள்ளது.

(ஜமீன் கட்டளை, தண்டோராமூலம் அறிவிக்கப்படுகிறது)

**தலையாரி**:— (டும்! டும்! டும்!) வாரம், குத்தகை, பாக்கி சாக்கி உள்ளவங்க ... இன்னய ஜமாபந்தியில் ஆஜராகி சரியான முகாந்தரம் கொடுக்கவேண்டும்...... தவறினால் எஸ்டேட் மாமூல்படி நடவடிக்கை எடுக்கப்படும்......

(ஜமீன் மாளிகையில் ஜமாபந்தி நடைபெறுகிறது. வெண் பட்டு உடுத்தி, வெள்ளித் தடிபிடித்து, வெல்வெட் திண்டில் சாய்ந்திருக்கிறார் ஜமீன் மதனசேகரர். அவர் சகா

மோகன்தாஸ், தாம்பூலம்மடித்துக் கொடுத்துக்கொண் டிருக்கிறார். கார்வார் நிர்வாகம் நடத்துகிறார். குடி மக்கள் அஞ்சி ஒடுங்கி நிற்கின்றனர்)

கார்வார் :— கர்ணம்! பாக்கி ஜாப்தா படி.

கர்னம் :— பட்டா 437. பொன்னுத்தேவன், தாவாரி, பயிர்வாரி பாக்கி, முப்பத்தி எழு கலனே, முக்குறுணி.

கார் :— பொன்னுத் தேவா! என்ன சொல்றே.

பொன் :— மேலேக்கு சேர்த்து அளந்திடுறேனுங்க.

கார் :— வாரங்கட்ட வழியத்த பயலுக்கு பட்டா ஒரு கேடு. தலேயாரி! கொண்டா புளியமிலார். மயிலே மயி லேன்னு இறகு போடுமா...? மிதிச்சுப் பிடுங்கணும் ம்...அடுத்த ஆள்?...

கர் :— ராமு மூப்பன்! போன பசலி பாக்கி அறுபத்தி ஏழே காருவா......

கார் :— முழுமாடு சுருட்டிப் பயலுக ... செலுத்தனுங்கர நெனேப்பே கிடையாது. தலேயாரி! மூப்பன் மடிய பிடிச்சு காச கரந்துகிட்டு ஆள விடு.

கர்ன :— அப்பு படையாச்சி! நஞ்சையில் கோடை வெள் ளாமை இட்டதற்குக் கூட்டுவரி, பதினெட்டே அரைக்கால்.

படை :— எஜமான்! ஒருபலனும் இல்லிங்க; எஸ்டேட் மாட்டு மந்தை பூந்து மேஞ்சுடுச்சுங்க...

மோக :— பார்த்துக்கிட்டா இருந்தே......அந்த மாட்டுக் காரப் பயல பட்டியிலே அடைப்பதற் கென்ன?

கார் :— மாடு மேஞ்சா என்ன? மண்ணுப்போனு என்ன? சாகுபடி கணக்கிற்கு வாகுவழி பண்ணு.

கர் :— முத்து முதலி! பத்துக்கட்டு வகையில் பாக்கி இருபத்தெட்டு ரூபாய்...

முத் :— பாக்கியா? ஏது? எல்லாம் செலுத்தியாச்சுங்க...

கார் :— இல்லாமலா கர்ணம் சொல்லுகிறுர் ...?

முத் :— வரவு வைக்க விட்டுப் போயிருக்கலாங்க......

கர் :— கணக்கே பொய்யிங்கிற அளவுக்கு வந்திட்டியளா!

மோக :— பின்ன நிஜங்கூட இருக்கா...?

கார் :—கணக்கிலிருக்குடா...செலுத்தித்தான் ஆகணும்... வாய் பேசாதே......

முத் :— சர்தாங்க...

கார் :— தலையாரி! அவன் வண்டிமாட்டை ஓட்டிக்கட்டு... அடே அடிச்சேரிப் பசங்களா! தொலச்சிடுவேன் ஜாக்கிரதை... இன்னும் எட்டுநாள் தவணே......கணக்கை நேர் செய்திடனும். இல்லே! கூரையைப் பிரிச்சுடுவேன்.

●

## திருப்புக் காட்சி.

(பாதையில்)

குடியானவன் 1 :—என்ன அண்ணே! செட்டிக்கடையில் வட்டிக்கு வாங்கித் தொலேச்சேன்.

குடி 2 :— அட தம்பி! வெதமொதல் அதோகதியாச்சு...

குடி 3 :—அந்தக் கண்ருவிய ஏன் கேக்கிற...ஓழவுமாட்டை ஒண்ணுக்குப் பாதியா வித்தழுதேன்...

குடி 4 :— என் வீட்டுக்காரி போட்டிருந்த நகை நட்டு நன்னி பின்னி எல்லாம் சேட்டுக்கடையைச் சேந்திடுச்சு.

குடி 5 :— குந்தியிருந்த குச்ச ஒத்திவச்சேன்.

குடி 6 :— மஞ்ச காணிய நட்ட பயிரோடு விட்டுக்கொடுத்தேன்...

குடி 1 :— இதுக்கெல்லாம் ஒரு வழி பொறக்காதா? ம்... பார்ப்போம்.

## உழவர்கள் துன்பப் பாடல்.

(ஐயா சிறுபெண் • என்ற சந்தம்)

குடி 1 :—

களந்திருத்தி வளம்பெருக்கிக் கதிருங் கண்டோமே
கடும்பசிதான் குறையவொரு பொழுது முண்டோமா
ஒருபொழுது முண்டோமா

குடி 2 :— உழவனுக்கு உணவா? (உரைநடை)

குடி 3 :—

உளமகிழ்ந்து உறையஒரு குடிசை யுண்டாமோ
உடையுமொரு முழந்தவிர உடுத்திக் கண்டோமா
நாம் உடுத்திக் கண்டோமா

குடி 4 :— உழைப்பவனுக்கு உடையும், வீடுமா? (உரை)

குடி 5 :—

படுமுழைப்புக் கூட்டமிங்கே பஞ்சத்தில் வாடி
பரலோகந் தேடுதையோ பட்டினிக் கூடி
ஐயோ பட்டினிக் கூடி

குடி 6 :—

கேடுகெட்ட வஞ்சருக்கோ கௌரவங் கோடி
கேட்டுவிட்டால் தண்டனைகள் ஆயிரங் கோடி
நமக் காயிரங் கோடி (கள)

●

## களம் 5.

இடம் : சோளக்கொல்லை

காலம் : மாலை

மாந்தர் : கன்னி, பொன்னி, மதனன், உழவர், மோகன்

(சாலை யோரம் உள்ள ஒரு சோளக்கொல்லையில் பொன்னியும், கன்னியும் வேலை செய்து கொண்டிருக்கின்றனர். சாலை வழியாக மாலை உலாவந்த மதனசேகரன்-மோகன் பார்வை பாவையர் மீது விழுகிறது. குறு நரிபோல் குனிந்துப் பதுங்கி, கொல்லையினுள் நுழைகின்றனர். சருகசைந்த சலசலப்புக் கேட்டு மருண்டு நோக்கிய கன்னியைப் பொன்னி ஓடிவிடச் செய்து தானும் மறைந்து கொள்ளுகிருள். ஆனல் மோகன் கன்னியைப் பின் தொடர்கிருன். மதனன் பொன்னியைப் பலவந்தப்படுத்துகிருன்)

### கன்னி — மோகன்

கன் :— ஐயய்யோ! யாருமில்லியா......

மோக :— நானிருக்கேன்... நில் நில்...

கன் :— போடா பேடி.

மோக :— உஸ் கத்தாதே......

கன் :— நீ நாசமாய்ப் போக.

மோக :— ஒரே ஒரு முத்தம்...

கன் :— முறத்தால் மொத்துவேன்.

மோக :— ரொம்ப புண்ணியம்.

கன் :— அட கண்ணியமற்ற கழுதை!

மோக :— என் கட்டாணி முத்தே!

கன் :— ஏ! குட்டிச் சுவரே.

மோக :— பட்டித்தனம் வேண்டாம்.

கன் :— வெட்டிப் பயலே போடா...

மோக :— உன்னை விட்டிடுவேனு ...? (பாய்தல்)

கன் :— ஐயய்யோ படுபாபி... (அலறி ஓடும் போது இடறி விழுகிருள்.)

மோக :— சிக்கிக் கொண்டாயா ... ? (ஏளனம்)

(உழவர்கள் கூடிவிடல்)

உழ 1 :— அட வடுவாப்பயலே நில்லு நில்லு தொடாதே!

மோக :— யாரது?

உழ 2 :— ஏரடிக்கும் ஏறுகள் (மோகனை அடித்தல்)

உழ 3 :— பணக்காரனுக்கு வால்பிடிக்கும் போக்கிரிப் பயலே!......மாட்டினியா... (அடி)

உழ 4 :— பெண்டுக பிள்ளைய தனியா வந்தா வெறட்டிப் பிடிக்கிற அளவுக்கு வந்திடுச்சா. (உதை)

**உழ 1 :—** ஏழைய நெஞ்சம் குமுறும் எரிமலையடா...

**உழ 2 :—** காசுக்குக் கால்பிடிக்கும் காலிக்கழுத...சொரணை கெட்ட சோற்றுப் பிண்டமே (அடி)

**மோக :—** ஐயோ ! அப்பாடா !! அம்மாடா !!! இல்ல! இல்ல!!

**உழ 3 :—** நல்லிய முறிச்சுடுவேன்...... பாசங்கா அடிக்கிற பாசாங்கு...

**கன் :—** அண்ணே ! ஓடியாங்க ஓடியாங்க ! அங்கே ஒரு காமாட்டிக் கழுதை பூந்திருக்கு...

**மோக :—** பார்வை பழுதுபோலிருக்கு... எஸ்டேட் மகாப் பிரபு மதனசேகரரைப் பார்த்தா கழுதமா திரியா தெரியுது ? மாரியாத்தாளுக்கு கண்ணடக்கம் வாங்கிப் போடு...

**உழ 1 :—** அட தம்பி ! இந்த நாயை காலில பிரியக் கட்டி இழுத்து வா...

**மோக :—** தெய்வமே...போதும்...போதும்...புத்திவந்தது

**உழ :—** அது கோயில்லேடா...உங்களுக் கேதுடா... ?

# திருப்புக் காட்சி.

•

## பொன்னி — மதனன்

மதனன் :— ஏ புள்ளே! இந்தா இத புடி……ஏன் கைய பிசையிறே....

பொன் :— ஐயோ! வேண்டாம். உங்க பிள்ளைக்குட்டிக்கு ரொம்ப தருமமய்யா…

மத :— சத்திரம் சாவடி, கோயில், குளம் எத்தனையோ தருமமாச்சு.

பொன் :— ஏழைப் பாவமய்யா…

மத :— கொஞ்சம் புண்ணியத்தை செய்தா போவுது.

பொ :— அட தெய்வமே!

மத :— அத யாரு கண்டா…

பொ .— உங்களுக்கு அக்கா தங்கச்சி இல்லியா?

மத .— அந்தக் கதையெல்லாம் யார் கேட்டா…

பொ :— உன் காசு யாருக்கு வேணும். (ஓடப் பார்த்தல்)

மத :— எங்கே ஓடப் பார்க்கிறே.

பொ :— கன்னி என்னு ஆனளோ!

மத :— கன்னியும் மோகனும் பின்னிக் கிடப்பாங்க…

பொ :— சீ! வாயை மூடு…

மத :— என்னு ரொம்பப் பேசுறே.

பொ :— சரிதான் போய்யா

மத :— நான் யார் தெரியுமா?

பொ :— தெரியும், மானங்கெட்ட மிருகமென்று.

மத :— வலிய வருகிற சீதேவிய காலாலுதைக்கலாமா ?

பொ :— பாதகம் நினைக்கும் மூதேவியே எட்டநில் !

மத :— கைக்கெட்டியதை விட்டிடுவேனு ...?

பொ :— போடா மட்டிப் பயலே (மண்ணாங் கட்டியால் அடித்தல்)

மத :— அரட்டை படிக்காதே

பொ :— முரட்டுப் பேயே.

மத :— அட என் சொக்கி.

பொ :— போடா பொக்கி.

மத :— ரொம்ப எடக்குப் பண்ணுதே.

பொ :— நடக்காதடா மூடா...

மத :— முடிக்காது போகமாட்டேன்.

பொ :— சொட்டு ரத்தம் உள்ளவரைத் தொட்டுப் பார்க்க விடமாட்டேன்.

மத :— ம்...ஹும்... (எட்டிப் பிடித்தல்)

பொ :— பட்டி மகனே! நீ வெட்டுண்டு போக...

(பின்வாங்கும்போது தவறி கிணற்றில் விழல். ஜமீன் ஓடி விடுகிறுன். குடியானவர்கள் பிணத்தை எடுக்க கன்னி அலறுகிருள்)

கன் :— ஐயய்யோ அக்கா......அக்கா...என்ன செய்வேன் ......என்ன விட்டுட்டு போயிட்டியே! அக்கா ... அப்பா வந்தா என்ன சொல்லுவேன்......

## களம் 6.

இடம் : ஊர்ச்சாவடி

காலம் : விளக்கேற்றும் நேரம்

மாந்தர் : சாவடி ஐயர், வீரம்மை.

(பொன்னியின் தந்தை வீரப்பன் வஞ்சினங் கொண்டு வனிதாமணி வேடத்தில் சாவடி அடைகிறான்)

ஐயர் :— யாரம்மா...? இந்நேரத்தில்...

வீரம்மை :— அசலூருங்க...

ஐய :— எங்கிருந்து எது வரையிலோ...?

வீர :— பூந்த இடத்திலே யிருந்து பொறந்த எடத்துக்கு

ஐய :— என்ன! தனியாகவா...?

வீர :— ஆமாங்க

ஐய :— ஏன்?

வீர:— அந்த வயிற்றெரிச்சலை ஏன் கிளப்பனும்...

ஐய :— ஐயோ பாவம் நல்லவளா இருக்கே... சும்மா சொல்... என்னாலானதைச் செய்றேன்.

வீர :— ஆமா... ரொம்பப்பேரு ... ஐயோ பாவமின்னுட்டு வாயாலே சொல்லுவாங்க காரியத்திலே... (சைகை — ஒன்றுமில்லே)

ஐய :— என்னை அப்படி ஒண்ணும் சாதாரணமா நெனைக்காதே... நான் பெரிய ஆள்......அதிலும் பிர்மகுலம்...... தெரிஞ்சுகோ. இந்தக்கரத்திலே (வலது) அக்னி தேவன். இந்தக் கரத்திலே (இடது) இந்த ஊர் ஜமீன். கூசாமச் சொல்லு. வேணதைச் செய்யறேன்.

வீர :— என்னத்தச் சொல்லுவேன்... என்னப் பெத்தாங்களே அந்தப் பாவிய... ஒரு வெறிகொண்ட குடிகாரப் பய கழுத்திலே என்னைக் கட்டிவிட்டாங்க. அவன் குடிக்கிறதும், என்னை அடிக்கிறதும், கூத்தியா வீடே கதியா கெடக்கிறதும்...நெனச்சா நெஞ்சு பகீறுங்குது...

ஐய :— த்சு, த்சு,......

வீர :— எரவுலே வூடு தங்காமெ செவுர் தாண்டக் போயிடுவான். சுண்ணும்புக்கு, போயல காம்புக்கு ஏடக் குறுக்க எயித்த வூட்டு மச்சான் வந்து போவும் நான் தனியாக் கெடந்து ஏங்கிறது பொறுக்காம வரப்போவ இருந்துச்சு. அத ரொம்பப் பிரமாதமா ஏசிக்காட்டி தொந்தரவு பண்ண ஆரம்பிச்சான்...

ஐய :— ம்... அப்புறம்...

வீர :— எனக்குத் தாழல... என்னு வீசுறிய ரோசக்கார ஆம்பளையாட்டம். நீமட்டும் ரொம்ப ஒளுங்கோ, நித்தம் ஒரு குட்டியா நோட்டம் பார்க்கலாம் ... நான் என்ன எந்தரமா ...? எனக்கு ஆச கீச இருக்காதா ....? ரொம்ப மெரட்றியே...நீங்க செய்றது பத்னித்தனமா..?ன்னு கேட்டேன். என்னை உசுரோட வைக்க மாட்டேன்னு துள்ளினன். எனக்கும் வேகம் வந்திடுச்சு. இந்தாடா நீ கட்டின தாலின்னு அறுத்து எறிஞ்சுட்டு வந்துட்டேன்.

ஐய :— அப்படியா சமாச்சாரம்! (தலையைச் சொறிந்து கொண்டு இளித்தல்)

வீர :— என்னைப் பெத்தவளும் செத்து சிவலோகம் போயிட்டாங்க. அங்கே போனாலும் பாடுபட்டுத்தான் வயித்தக் கழுவணும்.

ஐய :— அதெல்லாம் பிர்ம்ம லெபின்னு... எண்ணையைத் தேய்ச்சாலும் எழுத்த அழிக்க முடியுமா...? வந்த களைப்பு தீர ஏதாவது பசியாறேன்......

வீர :— எனக்குப் பசிவேறையா இருக்கு... !

ஐய :— அங்கே போய் கஷ்டப் படுறதே இங்கேதான் இருந்துடேன் (பல்லைக் காட்டல்)

வீர :— என்ன பல்லு வெளிய தெரியுது

ஐய :— இல்ல... நானும் தனியா இருக்கேன் நீயும் ஒண்டியா வந்திருக்கியேன்னு நெனைச்சேன். (நெருங்குதல்)

வீர :— அதுக்கா...! மெள்ள கிட்ட வந்திட்டியே!

ஐய :— ஒருத்தொருக் கொருத்தர் துணையா இருக்கலாம் (இளித்தல்)

வீர :— தொந்தியும் நீயும்...... கொஞ்சங்கூடப் பொருத்த மில்ல, நரச்சு வேறப் போச்சு... (தொந்தியில் அடித்தல்) ம்...அந்தக் கையாலத் தொடாதே சுடும்...

ஐய :— (வலது கையைக்காட்டி) அதுவா! அது பழங் காலப் பஞ்சாங்கப் பேச்சுல்ல......என்னை லேசா நெனைக் காதே...அந்தக் காலத்திலே ... எத்தனையோ கதை... ம் ...

வீர :— சரி ஆசைக்கு நீதான். காசுக்கு ஒரு நல்ல புள்ளியா பாரு என்னமோ ஜமீன்தாரன்னியே......பார்த்து சரிக் கட்டேன்...

ஐய :— என்னை மறந்துடாதே...

வீர :— பட்டா ஒன்பேருக்குத்தான் பயப்படாதே...

ஐய :— சரி நீ இங்கேயே இரு...நான் போயி வசதிபண்ணி கிண்டு வர்றேன்.

●

# களம் 7.

இடம் : ஜமீன் பூங்கா மாளிகை

காலம் : நள்ளிரவு

மாந்தர் : ஜமீன், வீரம்மை (யோகா) ஐயர்

(வருகையை எதிர்பார்த்திருக்கும் ஜமீனை யோகாவிற்கு ஐயர் அறிமுகப்படுத்தல்)

ஐய :— யோகா! இவாதான். உன் இஷ்டத்தை பூர்த்தி பண்ணிட்டேன்... நீ கொடுத்து வச்சவ ...ம்... சங்கோசம் இல்லாம போ...சமத்தா நடந்துகோ...

யோ ;— வெட்கமா இருக்கே...

ஜமீ :— பிறத்தியார் யாருமில்லே... தாராளமா வரலாம்...

( ஐயர் தலையைச் சொறிந்து கொண்டு நிற்க, ஜமீன் பணங் கொடுத்தனுப்பல்)

ஐய :— யோகாம்பிகே ! வர்ரேன்...

ஜமீ :— இன்னும் என்ன கூச்சம் ...? இனி இது உன் சொந்த மாளிகை தானே......வா இப்படி...

யோ :— (நாணுதல்)

ஜமீ :— இதோ பார் யோகா ! இந்த மன்மத மாளிகைக்குள் நுழைந்துவிட்டால் நம்மையே மறந்துவிடுவோம். ஏன் மௌனம்...எல்லாம் திருப்திதானே...

யோ ;— (புன் சிரிப்பு)

ஜமீ :— ம்... பெயரென்ன? சுந்தராங்கி... இல்ல... இல்ல... இன்பவல்லி... இப்படி வாயேன். (இழுத்தல்)

யோ :— வெட்கமாயிருக்கு... ம்ஹூம்... (நகர்தல்)

ஜமீ :— இந்தா இதிலே ஒரு கிளாஸ் உள்ளே அனுப்பு... எல்லாம் பறந்திடும்... என்பக்கத்திலே வாயேன்... சொர்க்கத்துக்குப் போக சிறகு முளைச்சுடும்... (இழுத்தல்)

யோ :— ம்... சொர்க்கத்துக்கா... நான் மாட்டேன்.

ஜமீ :— வேண்டாம் நீ ரெக்கை... .. நான் பறவை, பறக்கட்டுமா...?

யோ: — ம்...

ஜமீ :— இப்படி உட்கார் (இழுத்து உட்கார வைத்தல்)

யோ :— நான் கொஞ்சம் தாரேன்... அதையும்... ம்...

ஜமீ :— கொஞ்சமா...? உன்கையால் ஜாடி ஜாடியா ... பீப்பாய் பீப்பாயா கொடு...... எல்லாம் எங்கே போகுதுன்னு பாரு... நான் என்ன? ருசி தெரியாத பயித்தியக்காரனா...?

யோ :— இன்னுங் கொஞ்சம்...

ஜமீ :— இப்ப நான் எங்கே இருக்கேன்...

யோ :—சொர்க்கத்துக்குத்தான் போயிக்கிட்டு இருக்கீங்க.

ஜமீ :— என் இன்ப போகா... இல்ல... இல்ல... யோகா.... இப்படிவா... ஒரு முத்தந்தா... (கட்டித்தழுவ முயலுதல்)

( வீரப்பன் தன் வேடத்தைக் கலைத்து வாளேந்தி நிற்றல்... அவனது வெறிகொண்ட தோற்றத்தைக் கண்டு ஜமீன் தார் மிரளல் )

ஜமீ :— வீரப்பா !

வீரப் :— ஏண்டாப்பா !... வீரப்பனில்லை.... உன் உயிரைக் குடிக்க வந்த எமன்...

ஜமீ :— ஐயோ ! உனக்கு என்னடா செய்தேன்...? ஏண்டா இப்படி....?

வீர :— இன்னும் என்னடா செய்யனும் ... ?

ஜமீ :— வீரப்பா ! என்னமோ தவறுதலா நடந்துட்டேன்.. மறந்திடுடா...

வீர :— மறக்கத்தான் போகிறேன் ... உன் மரணத்திற்குப் பிறகு......

ஜமீ:— கொலைபாதகம் வேணுண்டா......! இதில உனக்கு என்னடா லாபம்...?

வீர :— லாப நஷ்டத்தை இப்ப நெனைச்சு என்னப்பா பண்றது ?

ஜமீ :— வேணுண்டா...... நீ யோக்யனுச்சே ! உன் பாக்கியெல்லாங்கூட நேர் பண்ணி விடுகிறேன்... உள்ளாத்துப் படுகையை உன்பேருக்குப் பட்டாபோடச்சொல்லிடுறேன்.

வீர :— மொதல்ல உன் கணக்க நேர்பண்ணிக்கொள். என்ன காசுத் திமிர்... அந்த காசுத் திமிரல்லவா அக்ரமத்தை வளர்த்தது...?

ஜமீ;— நானு அக்ரமம் செய்கிறேன்...பணத்தைப் பறிக்க வலிய வந்தால் யாருக்குத்தான் சபலந்தட்டாது. என்னை சும்மா விட்டால்தானே. கடைசீல உன்னைப்போல நல்லவன் கிட்டெல்லாம் அக்கிரமக்காரன்னு பேரெடுக்க

வேண்டியதாயிருக்கு...நீதான் பாத்தியே... இந்த சாவடி ஐயன் போன்றவங்கதான் என்னைக் கெடுக்கிறாங்க...

வீர :— அட அறிவுகெட்ட நாயே! சோளக் கொல்லைக்கு இழுத்துச் சென்றது சாவடி ஐயனா...?

ஜமீ :— மன்னித்திடு...உன் காலைப்பிடிக்கிறேன்...

(காலைப்பிடிக்கவருதல்)

வீர :— ஏ! காமாந்தகாரப் பேயே! விட்டுவிடவா...... வெட்டிக் குவிக்கின்றேன்... (உதைத்துத் தள்ளல்) இந்த நெஞ்சுதானே என் பொன்னியை நினைத்தது. இந்தக் கொள்ளிக் கண்தானே கள்ளப்பார்வை பார்த்தது. இந்தக் கைதானே கட்டிப்பிடிக்க முயன்றது. இந்தக் கால்தானே கொல்லைக்குள் நுழைந்தது. காரணம் உன் காசுத்திமிர். ஏ வஞ்சகா! அயோக்யப் பதரே! இந்தா இந்தக் குத்தை வாங்கிக்கொள். (கத்தியால் குத்துதல்) — நகைத்தல் — இன்பரசங் குடித்தாய் — என் கத்தி உன் உயிரைக் குடித்தது; காதல் பாட்டு படித்தாய்—என் கை பழிமுடித்தது; சற்றுமுன் ஜமீன்தாரனாக இருந்தாய் — இப்போ பிண மானாய்...பழிதீர என் வெறியும் அடங்கியது.......

(தனியே)

தலைமறைவாகத்தான் ஓடவேண்டும்; அதற்கு ஆண்டி வேடமே பொருத்தம்; இனி இங்கிருப்பது ஆபத்து; உலகம் ரொம்பப் பெரியது. மனிதக் கடலில், பரதேசிக் கோலத்தில் கலந்துவிட்டால்... ஏ வீரா! உன்னை எப்படி கண்டுபிடிக்கமுடியும்? நீ பெரிய துறவியாக விளங்கலாம்... பெயர் வீராச் சாமியார்....சரி....போவோம்........

# களம் 8.

இடம் :— போலீஸ் ஸ்டேஷன்

காலம் :— காலை

மாந்தர் :— அமரன், கிழவன், போலீஸ்காரர்கள்

● அடக்குமுறையின் கலைக்கூடம். நல்லவர், கெட்டவர் என்ற வித்யாசமின்றி சேர்த்துப் பிணிக்கும் இரும்புச் சங்கிலிகள், சுவற்றை அலங்கரித்துக் கொண்டிருக்கின்றன. ஈட்டி, பாலா, துப்பாக்கி ஆகிய ஆயுதங்கள் வரிசைப் படுத்தப் பட்டுள்ளன. பயங்கரமான சிறைச்சாலை ஒரு புறம் காட்சி அளிக்கிறது. ஒழுங்கை நிலைநிறுத்தும் உத்தம போலீஸ் நிர்வாகம் நடைபெறுகிறது.

(சப்-இன்ஸ்பெக்டர் முன்னிலையில்)

**போலீ 144** :— (அடிபோட்டு நிற்றல்) சமூகம் உத்தரவு. சந்தேகப் பேர்வழிகள் இருவரைக் கைதுசெய்து வந்திருக்கிறோம்.

**சப்-இன்** :— எந்த வழக்கு சம்பந்தமாக...?

**போ 144** :— எமகிரி எஸ்டேட் ஜமீன் மதனசேகரர் கொலை சம்பந்தமாக...

**சப்-இன்** :— (கைதிகளைக் காட்டி) இந்தப் பேமானிப் பயகளா!

**போ 300** :— திட்டமாக இதுவரையில் ஒன்றும் புலப்பட வில்லையே!

ச-இ :— சரி... ரைட்டன்! வழக்குப் புத்தகத்தில் வாக்கு மூலம் பதிவுசெய்.

ரைட்டர் :— டேய் கிழவா! பேரென்ன?

கிழ :— முத்துக் கருப்பனுங்க...

ரைட் :— வயது என்ன?

கிழ :— சரியாத் தெரியாதுங்க...

ரைட் :— சுமாராக...?

கிழ :— அஞ்சு மாமாங்கம் நல்லாத் தெரியும்! அதுக்கு முந்தின மாமாங்க வருசத்திலே பொறந்தேன்னு எங்க ஆயி சொல்லிகிட்டு இருந்துச்சு.

ரைட் :— புள்ள குட்டி உண்டா?

கிழ :— மொட்ட மரங்க...

ரைட் :— காணி பூமி காசு பணம்?

கிழ :— ஒன்றுங் கிடையாதுங்க...

ரைட் :— வேலை...?

கிழ :— எஸ்டேட் தோட்டக் காவலுங்க...

ரைட் :— அது சரி, ஜமீனைப்பற்றி என்னடா தெரியும்?

கிழ :— அது ரொம்ப தெரியுங்க, இருபத்தேழு கிராமம். ஏழுமந்தை மாடு, ஆயிரம் ஏர் பண்ணை, ஆள் மாகாணம்... ரொம்ப ரொம்பங்க... இன்னம்...

ரைட் :— டேய்! நிறுத்துடா உன் அளப்பெ. அவர் செத் தாரே அத கேட்டேன்.

கிழ :— ஐயோ! நல்ல மவராசருங்க. ம்......அவருக்கும் இந்த காலம் வந்துதே...

ரைட் :— கிழவா! கேட்கிறதுக்கு பதில்சொல்லு...அந்தக் கொலையைப்பத்தி என்னடா தெரியும்?

கிழ :— அதுவா எனக்குத் தெரியாதுங்க...

ரைட் :— அடே! அடிவாங்காதே...நிஜமா சொல்லு?

கிழ :— சத்தியமா சொல்றேனுங்க. அஞ்சு பஞ்ச பூதமும் சாக்கி. அதோ எரிச்சுக்கிட்டுப் போருனே சூரிய நாரா யணன், அவனுக்குத் தெரியும்.

ரைட் :— நீதானே தோட்டக் காவல்காரன்?

கிழ :— ஆமாங்க...

ரைட் :— அன்றிரவும் தோட்டத்தில் தானே இருந்தாய்?

கிழ :— இருந்தேனுங்க...

ரைட் :— அவர் அங்கே தானே இறந்தார்...?

கிழ :— ஆமாங்க...

ரைட் :— பின்ன தெரியாதுங்கிறியே....

கிழ :— நான் பார்க்கலிங்க...

ரைட் :— 300! கிழவனை கொட்டடிக்குக் கொண்டுபோய் கூனலை நிமிர்த்திக் கொண்டுவா......

(கிழவனை உள்ளே இழுத்துச் செல்லல்)

ரைட் :— டேய்! உன் பெயரென்ன?

அம:— அமரன்.

ரைட் :— பார்த்தால் இந்தப் பக்கத்து ஆளாத் தெரிய வில்லையே!

அம :— ஆமாம்...நாடோடி. ஜமீன் அடிமை.

ரைட் :— வயது?

அம:— இருபது.

ரைட் : படிப்பு?

அம :— உண்டு.

ரைட் : எதுவரையில்...?

அம :— எடுத்த புத்தகம் படிப்பேன்.

ரைட் :— ம்... உனக்கு இந்தக் கொலையைப் பற்றி என்ன தெரியும்...?

அம :— ஒன்றும் தெரியாது.

ரைட் :— ஒன்றும் தெரியாமலா இங்கு வந்திருக்கிறாய்?

அம :— இழுத்துவந்தார்கள்.

ரைட் :— ஜமீன்தார் தினம் பூங்காவிற்கு வருவதுண்டா?

அம :—உண்டு.

ரைட் :— எப்பொழுது வருவார்? எப்பொழுது போவார்?

அம :— மாலைநேரத்தில் வருவார்; கொஞ்சநேரம் உலாத்தி விட்டுப் போவார். சில நாளைக்கு ஊரடங்கியும் வருவார். பூங்கா மாளிகையில் தங்குவார்; விடியற்காலம் திரும்புவார்.

ரைட் :— கூட யாரும் வருவதுண்டா?

அம :-- சில சமயங்களில் அவர் சகா மோகன் வருவார்,

ரைட் :— அந்த மாளிகையில் என்ன செய்வார்கள்?

அம :— அது எனக்குத் தெரியாது.

ரைட் :— டேய் மறைக்காதே...அங்கே என்ன நடக்கும்?

அம :— பாட்டுக் கச்சேரி நடக்கும்.

ரைட் :— முதலில் தெரியாது என்றாயே...!

அம :— ஆமாம், நேரில் பார்த்ததில்லை ... சங்கீதம் காதில் விழும்.

ரைட் :— அவரே பாடுவாரோ...?

அம :— புதுப் புது குரலாக இருக்கும்.

ரைட் :— அன்று ஏதாவது நடந்ததா...?

அம :— தெரியாது...

ரைட் :— ஜமீன்தார் வந்தாரா....?

அம ;— வந்தார்.

ரைட் :— எந்நேரத்திற்கு ?

அம :— நிலா பாடுசாயும் நேரத்திற்கு...

ரைட் :— கூட யாரும் வந்தார்களா...?

அம :— இல்லை.

ரைட் :— தனியாகவா வந்தார் ?

அம :— ஆமாம்.

ரைட் :— நீ எங்கிருந்தாய் ?

அம :— தோட்ட வாயிலில்.

ரைட் :— என்ன நடந்தது ..?

அம :— ஜமீன்தார் வந்தார்; மாளிகைக்குச் சென்றார்.

ரைட் :— டேய்! மழுப்பாதே. ஜமீன் என்ன ஆனார் ?

அம .— இறந்து கிடந்தார்.

ரைட் :—எப்படி ?

அம :— கொல்லப்பட்டு...

ரைட் :— யாரால் ?

அம :— தெரியாது...

ரைட் :— இல்லை பொய் சொல்லாதே... நீதான்...

அம :— கிடையவே கிடையாது. நான் எதற்காகக் கொல்ல வேண்டும்.

ரைட் :— நான் சொல்லுகிறேன் நீதான் கொலை செய்தாய் என்று. உன்னால் இல்லையென்று ருசுப்படுத்த முடியுமா ?

அம :— முடியாது...

ரைட் :— அப்படியானால் குற்றத்தை ஒப்புக்கொள்.

அம :— செய்யாத குற்றத்தையா...?

ரைட் :— 144 ! என்ன திருப்பிக் கேட்கிறான்...? ஆள் வாட்ட சாட்டமா இருக்கான். தட்டி நீட்டிக் கொண்டுவா

(இழுத்துச் சென்று அடித்தல்)

போலீஸ் 247 :— டேய் அமரா ! ஒப்புக்கொள். இல்லையானால் உன்கறி இரவல் தான். பின்னி வாங்கிடுவேன் ம்......

அம :— எனக்கு ஒன்றும் தெரியாது.

போ 247: –தெரியாதா...இப்ப தெரியும்பார் (அடித்தல்)

அம :—இல்லை...இல்லை......

போ 247 :— (அடிமேலடி) ம்...ஒப்புக்கொள்.,

அம ;—கிடையவே கிடையாது.

144 ;— ஆமா ஆமான்னு சொல்... (அடி)

அம ;— (தீனக்குரலில்) இல்லவே இல்லை......

144 ;— கை சலித்துப்போச்சு இன்னும் மசியல......

300 :— ஊசியை நகக்கண்ணில ஏத்து.

அம :— ஐயய்யோ உயிர் போகுதே !

300 ;— அப்படிக்கேட்டா சொல்லமாட்டான். கொஞ்சம் சாணிப்பால் போடு.

அம :— ஏ தெய்வமே !

**247** :— பரம பக்தண்டா...தெய்வத்தைக் கூப்பிடுகிறான். டேய்! வருமாடா அது. வராவிட்டால், நீதான். ஒப்புக் கொள். (அடி)

அம :— (அடிதாங்காமல்) ஆமாம் நான்தான். (சோர்ந்து) விழுகிறான்.

**300** :— வழிக்கி வந்தியா......

**144** :— அடிமேல் அடிவச்சா அம்மியும் நகரும் !

ச-இ :— ம்...கொண்டுபோ கொட்டடிக்கு ... கொலைகார நாயை...டேய் கிழவா ! இப்ப நீ என்ன சொல்றே.

கிழ :— ஒண்ணுமில்லிங்க...

ரைட் :— டேய் ! (ரைட்டன்பக்கம் திருப்புதல்) நீ பார்க்கல

கிழ :— அவன் இல்லிங்க அடிக்கி பயந்து ஒளர்றான்.

ரைட் :— நீ பெரிய ஆள்டா... அவன் ஒப்புக்கொள்கிறான். நீ தில்லுமுல்லு பேசுறியே ! நடக்குமா...?

கிழ :— அட கடவுளே ! ஒரு பாவமும் தெரியாதவன்மேல அபாண்டமா சொல்ல வாயில்லியே.

ரைட் :— அவன்கொன்றான் ; நீ பார்த்தாய் ; உனக்குத் தெரியும் ஒப்புக்கொள் ; விட்டுவிடுகிறோம். சாட்சி சொன்னால் போதும். இல்லாவிட்டால் உன்னையும் சேர்த்து மாட்டிவிடுவோம்,

கிழ :— ஐயய்யோ தெரியாதே...

ச-இ :— இந்தக் கிழப்பயலையும் சேர்த்து உள்ளே தள். இரண்டு நாள் போனா வழிக்கு வந்திடுவான்.

(கிழவனையும் சிறையில் தள்ளல்)

## களம் 9.

இடம் :— நீர்த்துறை

காலம் :— காலை

மாந்தர் :— பெண்டிர்

● இளங்கதிர் எழுந்தது; உறக்கம் கலைந்தது; ஏழை எளியவர் வேலைமேற் செல்கின்றனர்; ஊர்ப்பெண்டிர் நீர்த் துறையில் கூடுகின்றனர். சிலர் நீராட, சிலர் துவையல் கல்லோடு மல்லாட, வேறு சிலர் சொல்லாடுகின்றனர்.

**சீதை :—** மீனாட்சி! தெரியுமா சேதி.

**மீனாட்சி :—** என்னக்கா...?

**சீ :—** வாழாது வாழ்ந்து பாதியிலே போனாரே ஜமீன்தார் நினைத்தால் நெஞ்சு பகீரென்குது...

**மீனா :—** என்னா! நீ சொல்றது ஒண்ணும் புரியவில்லையே...

**சீ :—** உண்ட வீட்டுக்கு ரெண்டகம் நினைக்கலாமா?

**சொர்ணம் :—** யார் என்ன நெனைச்சா? சுத்தி வளைச்சு பேசாம விஷயத்தைச் சொல்லு.

**சீதை :—** அவர் கதை இப்படியா முடியணும்...

**சொ :—** ஜமீன் ரெண்டகம் நினைச்சாரா...யாருக்கு?

**சீதை :—** நீ கொஞ்சம் துடுக்குக் காரி... நாவை அடக்கிப் பேசணும்.

காமாட்சி :- அவ எப்போதுமே இப்படித்தான். எதுக்கும் முந்தி முந்தி பேசறது.

மீனு :- நீ சும்மா இரு, அக்கா சொல்லட்டுமே...?

சீதை :- ஜமீன் பூங்காவில் ரெண்டு நாய்கள் கிடந்ததல்ல...

காமா :- அதுக்கென்ன... ஓடிப்போச்சா...

சீதை :— இல்ல... அந்த நாடோடிப் பய அமரன், சாக சுடு காடு தெரியாத கிழப்பயல் ஆக ரெண்டுபேருமா சேர்ந்து தான் இந்த அக்ரமத்தை செய்திருக்காங்க.

(கன்னி உற்றுக் கேட்டல்)

சொர் :— என்ன அக்ரமம் ?

கா :— அதாண்டி ஜமீன் கொலே...

சொர் :— ஒழிஞ்சுதா...? ஊருக்கு க்ஷேமந்தான்.

மீனு :— பல குடியக்கெடுத்த பாவி !

சீதை :— செத்து தெய்வமா போனவளே தூஷிக்கலாமா ?

சொர் :— தெய்வமாவா ... அடியே அந்த சோலேப் பக்கம் போகாதிங்க...பேயாத்தான் பறப்பான்.

கா :— அது கிடக்கு, அப்புறம் சொல்லு.

சீதை :- அது சர்க்காருக்குத் தெரிஞ்சு அந்த நாய்களே சிறையில் அடைச்சிட்டாங்க...

( கன்னி திடுக்கிடல் )

சொர் :- ஏண்டி நடுக்கம்...

மீனு :— ஜமீன் பேயை நினைச்சிட்டா போலிருக்கு...

கன் :— இல்ல...குளிர் தாங்கல......

## திருப்புக் காட்சி.

●

(கன்னி தன் வீட்டில் - தனிமையில்)

கன்னி :— அம்மா ! அம்மா !! இது ஞாயமா ?...பாவம் ஓர் பக்கம், பழி ஓர் பக்கமா ? நிரபராதி சிறையில் சிக்கி வதை வதா...? என்ன உலகம்...! அவ்வஞ்சகன் நெருப்போடு விளையாடினான் ; தீ பொசுக்கிவிட்டது. அதற்கு யார் பொறுப்பு ? எம் அப்பன் நெஞ்சார வஞ்சந்தீர்த்தார். அதற்காக பஞ்சைக் கிழவனும் அமரனுமா பலி ... தாயே ! என்னைத் தனியே தவிக்கவிட்டு அக்காளைப் பலித்துக் கொண்டாயே ! உனக்கு இறக்கமில்லையா ...? மானத்திற் காகப் போராடி மடிந்த பத்தினித் தெய்வமே ! என்ன செய்வேன்...ஏழை ! அதிலும் சிறுமி. எப்படி உதவுவேன் நீயே கதி. கற்புக்கடவுளே காப்பதுன்கடமை ; நான் வீர மகளானால் எனக்கு ஆற்றலைத்தா ; வழிகாட்டு...... பழியை நீக்கு......!



# களம் 10.

இடம் :— சிறைச்சாலை.

காலம் :— மாலை

மாந்தர் :— சிறைக்காவலர்,
அங்காடிக்காரன்

(அங்காடிக்காரனுக மாறுவேடமிட்டு, கன்னி அமரனை மீட்டல்.)

## பாட்டு.

பீடா வாங்கலையோ—சுகந்த
பீடா வாங்கலையோ

தேடாது வந்தால் கூடாது என்று
போடாது போனுல் வாராது என்றும் (பீடா)

மேலானபாக்கு மெருகு வெற்றிலை
ஜோரான சுண்ணம் சொகுசு வாசனை
சீரான பீடி சிகரெட் வகைகள்
மாருது தருவேன் மகிழ்ச்சி பொங்கவே (பீ)

வசனம் :— தம்பிகளா—இங்கே வாங்க! வாங்க!!

சின்ன சின்ன மிட்டாய்—நெய்யில்
செய்தநல்ல மிட்டாய்

பையன்களுக்கேற்ற பலத்தையும் குணத்தையும்
ஐயமில்லாமலே அளித்திடும் அளித்திடும் -சின்

பையில் காசிருந்தால்—தம்பிகளா
கையிலே கொடுங்கள்
அய்யா இதிலொரு அதிசயமிருக்குது
மெய்யாய் இனிக்கும் மென்று தின்னுபார் —சின்

வசனம் :— தாத்தா வாங்க உங்க அதிஷ்டமே அதிஷ்டம் !!

நல்ல பொடியிருக்கு—தாத்தா
நயமா சுருட்டிருக்கு

சொல்ல முடியாது காரம்-குணம்-மணம்
வெல்ல இதற்கு நிகர் வேறுகிடையாது —நல்ல

மூக்கில் சிமிட்டா பொடி போட்டு—தாத்தா
வாயில் சுருட்டு ஒன்றை நீட்டு—அப்போ
இருட்டில் ஒய்பி எஞ்சின் ஏகுவதைப்போல்
மருட்டுமே புகையும் மணக்குமே சுருட்டு—நல்ல

\+ + +

அங் :— பழம் பாக்கு வெத்திலே பீடா...மிட்டாய் !

காவ 1 :— டேய் தட்டு ! இங்கே வாடா...

காவ 2 :— என்னடா இருக்கு...?

அங் :— என்ன வேணுங்க...?

காவ 2 :— எனக்கு வேண்டியதெல்லாம் தருவியோ... ?

அங் :— திங்கத் திங்கத் தெவிட்டாத மைசூர் லட்டு, சிறு மலைப்பழம், பெங்களூர் வெத்திலே, ஜில் ஜில் பீடா.

கா 1 :— டேய் ! பீடாவில சுண்ணாம்பு சீரா இருக்குமா ?

அங் :— அதெல்லாம் ரொம்பக் கணக்கா வச்சிருக்கு... பீடாவின் நேர்த்தி போட்டுப்பார்த்தா தெரியும்.

கா 1 :— எங்கே எடு பார்க்கலாம்...?

அங் :— துட்டு ...?

கா 2 :— எலே ஓடியா போயிடுவோம்... கடைசீல கணக்கு சேர்த்துக்கிட்டா போவுது (பீடாவைப் போடுகின்றனர்)

கா-1 :— (கொட்டாவி விடுதல்) வெற்றிலே ரொம்ப ஜிலு ஜிலுப்பாதான் இருக்கு. இன்னம் ஒண்ணு எடுடா...

கா 2 :— ரெண்டு கொட்டாப்புளி ஏத்ற இருக்கிற குஷி ஒரே பீடாவிலே இருக்கே! எங்கே இன்னம் ஒண்ணு.

(காவலர் இருவரும் மயங்கிவிழுகின்றனர்; அங்காடிக்காரன் சிறைச்சாவியை எடுத்து, கதவைத்திறந்து அமரனையும் கிழவனையும் வெளிப்படுத்தல்)

## திருப்புக் காட்சி.

●

(சிறைக்கு வெளியில்)

கிழ :— தம்பி! நீயார்? எங்கள் விஷயத்தில் இவ்வளவு அக்கரை?

அம :— பார்த்த முகமா தெரியுது...

அங் :— யாரா இருந்தா என்ன? நின்னுப் பேச நேரமா இது! ரொம்ப எட்டி ஓடியாக வேண்டும்......ம்...போங்க ...போங்க... (ஓடுதல்)



# களம் 11.

இடம் :— சந்திரவதி

காலம் :— உச்சிப்பொழுது

மாந்தர் :— அமரன், வேதியர்

(சந்தரவதிநகரத்துத் தாமரைக் குளத்தின் கரையில் ஆலமர நிழலில், அமரன் அயர்ந்து கிடக்கின்ருன். அங்கு வந்த விருத்த வேதியர் கவனித்து பரிவுகாட்டுகிருர்)

**வேதி :—** ஐயோ ! பாவம் யாரோ ஒருஇளேஞன் களேத்துக் கிடக்கிருன்... எழுப்பி விசாரிப்போம்...

(தட்டி எழுப்பல்)

**அம :—** (திடுக்கிட்டு) யாரது ?

**வேதி :—** எழுந்திரு...

**அம :—** ஐயா ! வணக்கம்.

**வேதி :—** பையா ! நீ யார்...?

**அம :—** யாருமற்ற அனுதை.

**வேதி :—** பெயர்...?

**அம :—** அமரன்...

**வேதி :—** ஊர் ?

**அம :—** யாதும்......

**வேதி :—** உற்றூர் ?

**அம :—** யாவரும்......

**வேதி :—** ஏனிந்தக் கதி...?

**அம :—** அது என் தலைவிதி...

வேதி :— உன் மதி எங்கே?

அம :— அது உதவ வில்லே?

வேதி :— சரி வா என் பின்னுல்...

அம :— எங்கே...?

வேதி :— பிழைக்கத்தான்......சம்மதமா ...?

அம :— சம்மதம்.

வேதி :— என்ன வேலே தெரியும்?

அம:— காலாவிடுவதைத் தலேயால் செய்கிறேன்...

வேதி :— கன்று காலிகளேப் பார்க்கணும் ... எடுபிடிவேலே களேச் செய்யணும். வயிருரச் சாப்பிடலாம்...

அம :— ரொம்ப நன்றி ... கஞ்சிக்கலேயும் இப்பஞ்சைக்குத் தஞ்சமளித்த கருமதாதாவே! நெஞ்சாரத் துதிக்கின்றேன். வஞ்சனேயின்றி உழைப்பேன்.

வேதி :— சரி...வா போவோம்...

●

## திருப்புக் காட்சி.

(வேதியர் மனேயில் அமரன் சாப்பிடுதல்; அவர் மகள் கமலம் (விதவை) பரிமாறுகிருள், அவர் எதிரில் இருக்கிருர்)

வேதி :— தம்பி! கூச்சமில்லாமல்...சாப்பிடு...சரி உனக்கு ஏதாவது சாஸ்திரப் பயிற்சி உண்டா?

அம :— பெறவில்லே. (எழுந்து கையலம்பிவந்து பலகையில் அமர்தல்)

வேதி :— ஏன்...?

அம :— குலக்குறைவு...

வேதி :— த்சு...த்சு... அது பலரை அறியாமையில் மூழ்கடிக்க சிலர் செய்த சூது

அம :— அப்படியானுல் மறை என்பது?

வேதி :— மற்றவர் தெரிந்து கொள்ளாமல் மறைக்கப்பட்ட ஒன்று...

அம :— குலம், கோத்திரம், சாதி, மதம் என்பன?

**வேதி :—** மனித சமுதாயத்தின் ஒற்றுமையைக் குலேத்து, வேற்றுமையைப் பெருக்கி, அன்பு வாழ்வை அவதிக்குள்ளாக்கும் விஷ வித்துக்கள்.

**அம :—** விதி என்பது ?

**வேதி :—** ஒடுக்கப்பட்டவர்கள், மிதிக்கப்பட்டவர்கள் கொதித்தெழாதிருக்கச் செய்த சதி...

**அம :—** ஒழுக்கம், கட்டுப்பாடு என்பன ?

**வேதி :—** தலேமுறை தலேமுறையாகப் பின்பற்றி வரும் பழக்க வழக்கங்கள்.

**அம :—** முற்பிறப்பு என்பது ?

**வேதி :—** யூகம்...

**அம :—** நரகம், சொர்க்கம் என்பன ?

**வேதி :—** கற்பனே...

**அம :—** பக்தி என்பது ?

**வேதி :—** மனப் பிராந்தி...

**அம :—** தேர் திருவிழா...?

**வேதி :—** ஆடம்பரப் பொழுது போக்கு.

**அம :—** கோயில்...

**வேதி :—** சிற்பியின் கைத்திறம்.

**அம :—** ஆண்டவன் ?

**வேதி :—** நம் அறிவிற்கு அப்பாற்பட்டவன்.

**அம :—** ஐயா ! பல உண்மைகளேப் புரிந்துகொண்டேன். ஆனல் ஒரு சந்தேகம்...... தாங்கள்...

**வேதி :—** ஆம் ... ! வைதீகக் கோலத்திலிருக்கிறேன். இந்த சழக்குகளே ஒழிக்கும் சக்தி என்பாலில்லே ; சூழ்நிலேக்கு ஏற்ப பழக்கத்திற்கு அடிமைப்பட்டிருக்கிறேன். சமுதாயக் கொடுமைக்கு என் மகளேயே பலிகொடுத்தேன். ...காரணம்...என் வறுமை. என் உள்ளத்தில் தேங்கிக் கிடக்கும் உண்மை உணர்ச்சிகளில் சிலவே உன்னேக் கண்டதும் பொங்கிவந்தன. மகாத்மாக்களால் மனப்பாங்கு மாற்றி அமைக்கப்படவேண்டிய மனித சமுதாயம் இது......

●

## களம் 12.

இடம் :— புராதனபுரி

காலம் :— முன்னிரவு

மாந்தர் :— மலைவாணர், அர்ச்சகர், கன்னி

(புராதனபுரி ஆலயத்திற்கு விளக்குவைத்த நேரத்தில் புதிய யாத்ரீகர்கள் வந்துசேருகின்றனர்...)

**யாத்-1 :—** ஐயா! அர்ச்சகரே! யாங்கள் வெளியூர் வாசிகள்; புண்ணிய ஸ்தல யாத்திரை செய்து வருகிறோம். இப்புராதனபுரியின் கீர்த்தி எங்களை இழுத்து வந்தது.

**அர்ச் :—** நல்லது!...நல்லது...!! பூர்வ புண்ணியம்...! எல்லோருக்கும் கிடைக்குமா....?

**யாத்-2 :—** எங்களுக்கு இப்பழம்பதியின் முழுப் பெருமையும் அறிய ஆவல்...

**அர்ச் :—** கிரேதா யுகத்தில் தேவாதி தேவர்களுக்கு பாவ விமோசனம் செய்த புண்ணிய ஸ்தலம். அரியும் அரனும் ஒருருவாய் நின்று பேரருள் செய்து வருகின்ற புராதன ஸ்தலம். அந்தக் காலத்து மகாராஜாக்களால் கட்டப்பட்டது. சக்திதாச ரிஷி அடங்கியதும் இங்குதான். அப்பப்பா! இதன் பெருமையை ஆதிசேஷனும் சொல்ல முடியாது. இதன் பரம ரகசியங்களெல்லாம் தேவ பாஷையில் புதைந்து கிடக்கின்றன. தனிப் புராணமே உண்டு.

**யாத் 3 :—** சமீபத்தில் கும்பாபிஷேகம் ஆச்சோ...?

அர்ச் :— ஆமாம்...! ரொம்ப விமரிசையாய் நடந்தது... திருப்பணிச் செல்வர் ஸ்ரீமான் பஞ்சாட்சரம் செட்டியார் அவர்களின் சத்கைங்கரியம். ஐந்து லகாரம் செலவு; பிரம ஞார்த்தம் ரொம்ப ஜோர், தினம் ஆயிரம் பேருக்கு சம்ப் ரமா நடந்தது. நெனேச்சா நாக்கில் ஜலம் ஊர்றது.

யாத்-1 :— பூஸ்திதி எல்லாம் எப்படியோ?

அர்ச் :- அதற்கு எல்லேயே இல்லே...! ஏராள ஐவேஜி... சுவாமிக்கு சர்வாலங்காரம் செய்து பார்க்கணும். அடடா! கண்கொள்ளாக் காட்சி நவரத்ன கிரீட ஜொலிப்பும், வைர மணி மாலேயின் மின்னலும், தங்கக்கவசத்தின் தகதகப்பும் கண்ணேப்பறிக்கும்; சொல்லமுடியாது ..!

யாத்-2 :- ஐயர்வாள்! அபிஷேக ஆராதனே செய்து சர்வா லங்கார தரிசனங்காண ஆவலாயிருக்கிறது. அதற்கு ஏற் பாடு செய்யுங்கள். சாமி காரியத்தில் எவ்வளவு ஆனலும் பரவாயில்லே.

அர் :–அதற்கொன்றும் ஆட்சேபனேயில்லே, ஆனல் ரொம்ப அகாலம்...பஞ்சாயத்தார் அனுமதி பெறணும்...

யா-3 :–அந்த புண்யாத்மாக்களேக் காணவேண்டுமே! அவா ளிடம் சொல்லி இந்த தேவகாரியத்திலே நம்ப கைங்கர்ய மும் சேர அனுமதி பெறவேணும்.

அர்ச் :–அதற்கென்ன......தங்கள் இதயபூர்வமான விருப் பத்தை ஆண்டவன் ஏற்றுக்கொள்வார். கிலேசம் வேண் டாம்... எனக்கல்லவோ அந்தப் பொறுப்பு; நான் ஆராத னேக்கு ஏற்பாடுசெய்கிறேன். தாங்கள் எல்லோரும் கொஞ் சம் விசிராந்தியா இருங்கள்; அடே மணி! வந்திருக்கவாளே கவனிடா! பால் பழம் கொஞ்சம் தருவி. பஞ்சாயத்தாருக் கும் சொல்லி அழச்சுவா......

## திருப்புக் காட்சி.

●

(ஆராதனை நடைபெறுகிறது...)

அர்ச் :— (மந்திர முணுமுணுப்பு)

யாத்-1 :— பாடல் :

சாதிமதம் சமயமெனும் சங்கடம்விட் டறியேன்
சாத்திரச்சே ருடுகின்ற சஞ்சலம்விட் டறியேன்
ஆதியந்த நிலையறியேன் அலையறியாக் கடல்போல்
ஆனந்தப் பெரும்போகத்து அமர்ந்திடவு மறியேன்
நீதிநெறி நடந்தறியேன் சோதிமணிப் பொதுவில்
நிருத்தமிடும் ஒருத்தர்திருக் கருத்தை யறிவேனே
ஏதிலர்சார் உலகினிடை எங்ஙனம்நான் புகுவேன்
யார்க்குரைப்பேன் என்செய்வேன் ஏதுமறிந் திலனே.

பஞ் :— (பாடுபவரிடம்) ஐயா! கொஞ்சம் பொறும்... பூஜை வேளையில் காடி விடலாமா?

யாத்-2 :— ஏனய்யா ?

பஞ் :— ஐதீகப்படி நடக்கவேண்டாமா...? தேவபாஷையில் அர்ச்சனை நடக்கும்போது பண்டாரப்பாட்டு பாடுவதா ?

யாத்-2 :— அப்ப இந்த மொழி சாமிக்குப் புரியாதோ ...?

யா-3 :— என் அப்பனே! ஒப்பிலா மணியே! ஈசா! கைலாச வாசா! கிருஷ்ணா! முகுந்தா! முராரீ! என்னை ஆட்கொள் என்னை ஆட்கொள். (மூலஸ்தானத்துக்குள் புகுதல்)

அர்ச் :— அங்கேயே நில்லையா...!...நீபாட்டுக்குக் கண்ணை மூடிக்கொண்டு மூலஸ்தானத்திலே போய் முட்டிக்குவாய்ப் போலிருக்கே...!

யாத்-2 :— பக்தியின் பரவசம் அப்படி இழுக்குது......

அர்ச் :— ஜாதி, ஆசாரம் கீசாரம் வேண்டாம் போலிருக்கு, நாய் பூந்த அம்பலமா...?

யாத் :—எலி ஏறி இறங்கலாம் ; பெருச்சாளி சுரண்டலாம்; கரப்பான் வண்டு மொய்க்கலாம் ; பூச்சி புழு நெளியலாம் ; வெளவால் புழுக்கை போடலாம்: ஆறறிவு படைத்த மனிதன் உள்ளே வந்தாலாகாதோ? அதிலும் பக்தியால் வந்தால் பாதகமா ...?

பஞ் :— இதென்ன பயித்தியக்காரக் கூட்டமாயிருக்கு...... காரியம் மிஞ்சுதே... காரியம்...! (காரியக்காரனிடம்) ம் ...

காரி :— யாத்ரீகர்களே ! உங்கள் பக்தி ரொம்ப முத்திப் போச்சு...போதும்...ஆண்டவனருளை அளவுக்குமேல் நீங்கள் மட்டுமா அனுபவிப்பது ? மற்றவாளுக்கும் கொஞ்சம் மிச்சம் மீதி இருக்கட்டும்....வந்தபாதைய பாருங்க !...ம்...

(யாத்ரீகர்கள் ஆயுதபாணிகளாதல்)

நரித் :— மறவர்காள் ! ஆண்டவன் திருத்தொண்டு ஆரம்பமாகட்டும்...!...புலிக்கண்ணு ! வலையிற் சிக்கிய பறவைகள் தப்பாமல் கண்ணி கோல். வட்டிக்கு வட்டித் தொடர் வட்டி வாங்கி, பல குடியைக் கெடுத்த பாவத்தைப் போக்க, திருப்பணி செய்த திருவாளர் ! சிலையாக நிற்கிறார். ஆலய நிர்வாகத்துக்கு பரம்பரைப் பாத்யம் பேசும் பஞ்சாயத்துக்

காரனே! என்ன முழிக்கிறாய்!... ஆண்டவனுக்கு வார்சு உரிமைகள் பேசும் கோயிற் பூனைகளைப் பிடித்துக்கட்டுக...! பரம்பொருளுக்கும், பக்தருக்கும் இடையில் நிற்கும் தரகரே! பதறாதீர்! வீரியம்பேசிய காரியக்காரனையும் கவனி... பகற்கொள்ளை அடித்த சொத்து, பகிரங்கமாக உறிஞ்சப் பட்ட பணம், வகை வகையான நகைநட்டுக்களாக மின்னுகின்றன! அவற்றை எல்லாம் வாரி மூட்டை கட்டுங்கள்...! ஏசுநாதர் இதனைக் கள்ளர் குகை என்றார்; நம் தேசீயத் தந்தை காந்தி மகான் வேசியர் மனை என வர்ணித்தார். பரமனின் அருளை விற்பனைசெய்யும் பாதகர்களின் பாசறை அல்லவா இது! கல்லைப் பிளந்தது, காரை இடித்தது, சிற்பம் செதுக்கியது யார்? கறையான் புற்றில் பாம்பு குடிபுகுந்த கதைபோல, காரியத்திற்கு ஏழைத் தொழிலாளி... உட்புகுந்து ஆதிக்கம் செலுத்த பிறவி முதலாளியா? ஊரைக் கொள்ளையிடும் உத்தமபக்தர்கள் உள்ள வரையில் மக்களின் வேதனை தெரியாத மகாதேவனுக்கு நட்டமில்லை. பஞ்சாயத்தாரின் சாவிக்கொத்தை எடுத்து பண்டார அறையைச் சோதனைசெய்யுங்கள்...! (ஏளனமாக) பழசு போனால் புதுசுவரும்!...சண்டாளாபிஷேகம் முதல், மகா கும்பாபிஷேக மண்டலாபிஷேகம் வரைச் செய்ய செல்வந்தர்கள் காத்திருக்கிறார்கள்...ம்!..,காரியம் ஜரூராக நடக்கட்டும்...!

புலி :— பொடியனொருவன் ஓடப் பார்க்கிறான்...

நரி :— விடாதே பிடி...

புலி :— (சிறுவனை இழுத்து வருகையில் வேடம் கலைகிறது) மாறுவேடத்தில் மங்கை...!

நரி :— தொடாதே! அழைத்துவா...ஏன் இந்த வேடம்..?

**கன்னி :—** ஆபத்து நேராதிருக்க...(கண்ணீர் விடல்)

**நரி :—** கலங்காதே...யாம் வீர மறவர்....இங்கு சோரம் நடவாது ... உன் விருப்பப்படி அனுமதிக்கின்றேன். எங்கே போகவேண்டும்...?

**கன் :—** கால் போன வழி ...!

**நரி :—** ஏன் ? நீ யார் ?

**கன் :—** பெற்ற தாய் நோய்க்கிரையானுள் ; உடன் பிறந்த அக்காள் ஜமீன் அக்கரமத்தால் பலியானுள். அப்பனே பழிதீர்த்து விட்டு பறந்து விட்டார்...!...ஆதரவற்ற ஏழையானேன்...(தேம்பல்)

**நரி :—** என்ன ! ம்...அழாதே ! எங்கள் தலைவன் ஏழையர் தோழன், உன்னை இந்நிலையில் கண்டால் நிச்சயம் உதவுவார் ; ஆதரிப்பார் ; எங்கள் பின்னே வருகிருயா......? இந்தக் கோரச் செயல்களைக் கண்டு அஞ்சாதே ! எங்களுக்கும் மனித உணர்ச்சி உண்டு.

**கன் :—** நல்லது... தங்கள் விருப்பப்படியே ஆகட்டும்...

**நரி :—** சரி.. ம்....நடங்கள் !

## களம் 13.

இடம் :— சீர்திருத்த வேதியர் வீடு

காலம் :— நள்ளிரவு

மாந்தர் :— அமரன், கமலம்

● பால்போல நிலா காய்கிறது ; உலகமே பேரமைதியில் மூழ்கிக் கிடக்கின்றது ; துடிக்கும் இரண்டு உள்ளங்கள் போராடிக்கொண்டு இருக்கின்றன.

அமர :—என்னை எதற்கு இந்நேரத்தில் எழுப்பி வந்தீர்கள் ?

கம :—என் கண்கள் சொல்லவில்லையா ? காதல் தெய்வமே !

அம :— வேண்டாம் ! இது விபரீத நினைவு. நான் தாழ்ந்தவன்... ஏழை ... ! அதிலும் அன்னியன். தங்கள் குலத்திற்கு இழுக்கு ; குடிக்கு அவமானம். வேண்டாம் ... ! வேண்டாம்... !

கம :— காதல் உள்ளம் கடல்போல் கொந்தளிக்கின்றது. அந்த அன்பு வெள்ளத்தை, ஆர்வப் பெருக்கை ஜாதி, மத பேத அணையால் தேக்கி நிறுத்த முடியுமா ?

அம :— நீதியன்று... நீதியன்று...

கம :— ஒத்த பருவம்-உத்தம வாலிபன்...பத்மினி ஜாதிப் பெண்ணின் சித்தத்தில் இடம்பெறுவது நியதி அல்லவா...?

அம :— ஒழுங்கு மீறலாமா... ? மாட்டேன். உண்ட வீட்டிற்கு ரெண்டகமா ?

கம :—ரெண்டகம் வேண்டாம்...? இரண்டறக் கலப்போம். உன்னை ஆதரிக்கும் எங்களுக்கு உதவிசெய்யக் கடமைப் பட்டிருக்கிறாய்......

அம :— ஆமாம் அதற்காக...?

கம :— அவ்விருத்த வேதியரின் மகள், அவரது வாரிசு, உன்னை உரிமை கொண்டாடுகிறாள். தன்னை உனக்கு அளிக்கத் தயாராகிவிட்டாள். தட்டாதே...ஏற்றுக்கொள்!

அம :— முடியாது...! முடியாது...

கம:— இரக்கமில்லையா ...! பெண்பாவம்... நீ ஆண் பிள்ளை தானே !... அணையா வேட்கை ; அடங்கா உணர்ச்சி ; மட்டற்ற ஆசை ; கட்டித்தழுவ துடிக்கின்றது. விலகலாமா...?

(கண் கலங்கல்)

அம :— தாங்கள் ரசித்து மறந்ததும், சுவைத்துத் துப்பியதும் தானே அந்தக் காதல்.

கம :— இல்லை...இல்லை...சொல்லவா... ம்... காதல் தெரியாத கன்னிப் பருவம், பேதம் புரியாத பெதும்பை நிலை. வயது வராத வனிதையாக இருந்தேன். முதிர்ந்த கிழவனுக்கு என்னை மூன்றாந்தாரமாக முடிச்சுப் போட்டார்கள். சோதிட சாட்சியும், சாஸ்திரத் தீர்ப்பும், தரகர்களின் சதியும் என் தலைவிதியை நிர்ணயித்தன. வரதட்சணைக் கொடுமைக்கு இரையாக்கப் பட்டேன். தாத்தாவும், பேத்தியும் தம்பதிகளானோம். பொன்னாலும், மணியாலும், புது வண்ணப் புடவைகளாலும் அவர் என் உடலைப் போர்த்தி அலங்கரித்தார். ஆனால், என் உள்ளத்தில் எழுந்த உணர்ச்சித் தீயை அணைக்கும் சக்திக்கு எங்கே போவார்? விலைக்கு

வாங்கக்கூடிய பண்டமா ஆண்மை... இரவல் பெறக்கூடிய பொருளா உணர்ச்சி... சக்திபெற நித்தம் முயற்சித்தார். தின்னாத மருந்தில்லை; தேடாத வைத்தியரில்லை; பருவ உணர்ச்சி என்னை உள்ளூர அரித்தது; வாழ்க்கையில் சலிப்பும் தோன்றியது. அவரோ சிங்காரச் சிலையாக மதித்து சிறைகாத்திருந்தார். காலதேவன் அவரது கணக்கைத் தீர்த்தான். அதற்கு நானா பொறுப்பு. என் இளமையா பலி...என் வனப்பு வீணாக வேண்டுமா? மஞ்சளை மறந்தேன்...பூவை இழந்தேன். பொட்டையும் விட்டேன்... பொன்னணிகளைத் தொடுவதுமில்லை. ஆனாலும் என் அழகு மாறவில்லை... உணச்சி போகவில்லை... உயிர் துடித்தது... ஒழுங்கை நிலைநாட்ட எண்ணி, சமூகக் கட்டுப்பாட்டை மதித்து, என்னை மறந்திருக்க முயற்சித்தேன்; பக்தி நூல்களைப் படித்தேன்...பக்தருக்கருளும்பரமனின் தெய்வீகத் திருவிளையாடல்கள் என் சிந்தையைக் கிள்ளிவிட்டன... அந்தோ!...இளம் விதவை...என் செய்வேன். எம்பிரானைப் புகழும் இன்னிசைப் பாடல்கள் என் கதியை வர்ணிப்பதாகவே இருக்கின்றன. உணர்ச்சி பொங்கி வழிந்தது. உள்ளத்தில் புரட்சிதலைவிரித்தாடியது...நாளடைவில் மங்கி மடிந்து நீறுபூத்த நெருப்புப் போல கிடந்தது....உனது உடற்கட்டு; உள்ளப் பொலிவு; ஒளிவீசும் முகம்; கள்ளமற்ற வாழ்க்கை என்னை வசீகரித்தது. அடங்கிக் கிடந்த பசியை எழுப்பிவிட்டது! ... அனுபவித்தறியாத ருசியைச் சுவைக்கத்தூண்டியது...அது என் குற்றமா ...? இயற்கையை மீறும் சக்தி என்பால் இல்லை...மறுக்காதே!...ஏற்றுக் கொள். கெஞ்சி சோர்ந்து காலடியில் விழுகிறாள்)

அம:—பொல்லாத சமூகம்!...என் செய்வது ..! எப்படி சீர்திருத்துவது? (சோகம்) தாயே! எழுந்திருங்கள்!...

**கமல :—** கண்ணே...! என்று அழைத்தால், என் காது குளிருமே!

**அம :—** எழுங்கள் பேசுவோம்...

**கம :—** (எழுந்துகொண்டே) உறுப்புக்கள் ஒன்றொன்றும் துடிக்கின்றனவே...!

**அம :—** உணர்ச்சி என்பது உள்ளக் கிளர்ச்சி....

**கம :—** அதன் வளர்ச்சியே காதல்... இன்றேல் சாதல்...!

**அம :—** உணர்ச்சிப் பெருக்கால் என்னை அணைத்துக் கொண்டால் உலகம் பழிக்காதா....?

**கம :—** வெளியில் தெரிந்தால் தானே...

**அம :—** காட்டிக் கொடுக்கப்பட்டால்...

**கம :—** யாரால்?

**அம :—** உன் கருவில் உதிக்கக்கூடிய சிசுவால்...... அதனை சிதைத்துவிட விரும்புவாயா ...?

**கம :—** மாட்டேன்.... ஒருநாளும் செய்ய மாட்டேன்...

**அம :—** உலகம் என்ன சொல்லும் தெரியுமா?

**கம :—** என்ன ..?

**அம :—**விபசாரிப் பட்டம் சூட்டும்...சிசுவைச் சிதைத்தால், கருச்சிதைத்த காதகி என்று கதைக் கட்டும்; குழந்தையைக் கொன்ற கொலைக்காரி என்ற குற்றம்சாட்டும்.

**கம ;—** பெற்று வளர்த்தால்...

**அம :—** சமூகம் ஜாதியில் தள்ளி ஒதுக்கி வைக்கும்...

**கம :—** ஒதுங்கி வாழ்ந்தால்......

அம:— யாருக்கு நட்டமில்லை... ஆனால்... இந்த இந்து சமூகம் இழித்துக் கூறும். பழித்துப்பேசும்.

கம:— வெகுதூரம் சென்றுவிட்டால்......?

அம:— உன் ஒருத்திக்கு உய்வு. உள்ளன்போடுகூடிய உணர்ச்சிக்கு வாழ்வு. ஆனால்......

கம:— என்ன ?

அம:— உன்போன்று ஒடுக்கப்பட்ட உத்தமிகட்கு, நசுக்கப்பட்ட நங்கையர்க்கு, வாழ்வு பாழாக்கப்பட்ட வனிதாமணிகளுக்கு மீட்சியுண்டா? உரிமை கிடைக்குமா? ஆணுக்கு ஒரு அமரன் அகப்படுவானா? சிந்தித்துப்பார். விலங்கினும் கேடாய் தெருவில் அலையும் நாடோடிகளை எண்ணிப்பார். வாழ்க்கைச் சோதனையில் சாதலுடன் போராடும் நாட்டில் காதலா ? தன்னலத்திற்கு உழைத்தால் பொதுநலம் புகைந்து போகும் உன்போன்ற எண்ணற்றப் பெண்களின் மீட்சிக்காகப் போராடு. உன் தனி இன்பத்தை, பலர், இன்புறும் முயற்சிக்காகத் தியாகம் செய். உன் காதல் மாசற்றதானால், வலிமையுள்ளதானால், தியாகத் தீயில் குதி. தயங்காதே.

கம:— போரும். வீரியம்பேசி காரியத்தில்...... ஒரு விதவை என்பதற்காக...

அம:— பின்வாங்கவில்லை... என் எண்ணம் ஈடேறும் வரை எந்தவித சுகத்தையும் அனுபவிக்க விருப்பமில்லை.

கம:— இது தட்டிக் கழிக்கும் தந்திரப்பேச்சு.

அம:— இல்லை. என் சொல்லை நம்பு. உன் மனதை

மாற்றிக்கொள். சிந்தனையை சிதற விடாதே! என் லட்சியம் வேறு.

கம:— லட்சியத்தின் பேரால் என் காதலை அலட்சியம் செய்கின்றாய்.

அம:— காலம் விடை தரும் (போய்விடுதல்)

(கமலம் தனிமையில் பாடல்)

பல்லவி

வாடினனே—உலகில்—வாடினனே

அநுபல்லவி

வான்முகம் காணாத—வண்ணமலர்க்கொடிபோல் (வாடி)

சரணங்கள்

பருவமெனும் இன்பப் பயிர்தனை வளர்த்தே
உருவினிற்பயனை உலகினிலடையாமல்
கருவினோடு அதைக் களையும் கைம்பெண் என்னும்
மறுவினால் சாத்திர மடமையினால் இன்று (வாடி)

எல்லா உயிர்கட்கும் எழில்மிகு பருவம்
அல்லால் அதற்கிணை ஆகுமோ இன்பம்!
சொல்லால் என் துயரம் சொல்ல இயலுமோ
துச்சமாம் சாத்திர நச்சரவினால் யான் (வாடி)

## திருப்புக் காட்சி.

இடம் :— மலைச்சாரல்
காலம் :— விடியற்காலம்
மாந்தர் :— தூருவளி, மறவர்கள், கன்னி.

[மலைவாணர்கள் தலைவனிடம் சென்று கொள்ளைப் பொருள்களை ஒப்புவிக்கின்றனர்,]

தூரு:— நரித்தலையா ! வெற்றிகரமாக காரியம் நடந்தேறியதா?

நரி:— எல்லாம் திட்டப்படியே நிறைவேறின. இதோ

(பொருள்களை எடுத்துவைத்தல்)

தூரு:— முத்துவடம்! த்சு....த்சு... நெடுங்கடலில் கொடுமீன்களுக்கிடையில் தன் மூச்சை அடக்கி எடுத்து வந்த ஏழை ஜாதி உகுக்கின்ற கண்ணீர் முத்துக்கள் எவ்வளவு ! ரத்தினமாலை ! ம்... மண்ணோடு மண்ணாய் கிடந்த உங்களை தோண்டிஎடுத்து புத்துயிரளித்த சமூகம் பட்டைதீட்டி வளம் செய்த பாட்டாளிக்கூட்டம் ரத்தக் கண்ணீர் சொட்டுகின்றனரே! என்னே உலகம்! என்னே உலகம். எதிர்ப்பு அதிகமோ? விருவிருப்புத்தானே!

நரி:— இல்லை. எதிர்ப்பே இல்லை. ஆனால் ஓர் ஏழைக் கன்னியின்கண்ணீர் எங்கள் வேகத்தைத் தடுத்துவிட்டது.

தூரு:— என்ன ?

நரி:— ஆம்! ஓர் ஏழைச் சிறுமி பரிதாபகரமான சம்பவங்களால் மனமொடிந்தவள். வழிப்போக்கில் பிரகாரத்தில் பசியோடு உறங்கிக் கிடந்தாள்.

தூரு:— அவளது கதி ?

நரி:— அழைத்துவந்திருக்கிறோம். இனி தங்கள் ஆணை !

(முன்னிருத்தல்)

தூரு:— மகளே ! நீ யார் ?

கன் :—அனாதை.

தூரு:— தாய் தந்தை !

கன் :— தாய் தெய்வ லோகத்தில். தந்தை சிந்தை கலங்கி பெரிய உலகத்திரளில் கலந்துவிட்டார்.

தூரு:— கலங்காதே ! வீரமறவர்கள் ஈரநெஞ்சம் படைத்தவர்கள். இனி நீ என் செல்வப்பெண். பெண்ணில்லாக் குறையைப் போக்கவந்த தெய்வக்கன்னி. கவலையை விடு. என் குலச்செல்வமே ! வா பிறகு உன் கதையை சாவகாசமாகப் பேசலாம்.



## களம் 14.

இடம் :— தர்பார்

காலம் :— பிற்பகல்

மாந்தர் :— ராஜசிம்மசேனன், பிரதானியர், பெருமக்கள்.

● அலங்கார மாளிகை; ஆடம்பரக் கூடம்; அரசனின் கொலுமண்டபம்; தந்த சிம்மாசனத்தில் வேந்தன் சிம்மசேனன் வீற்றிருக்கின்றான் ஒய்யாரமாக; பெண்கள் கவரி வீசுகின்றனர்; வீராதி வீரர்கள் வாளேந்திக் காவல் புரிகின்றனர்; பிரதானியரும் பெருமக்களும் உரிய இடங்களில் அமர்ந்திருக்கின்றனர்; நாட்டிய சுந்தரியின் ஆடல் பரவசப்படுத்துகின்றது: இசை அலைகாற்றில் மிதக்கின்றது.

அர:-- நாட்டியம் மிகமிக அருமை! அருங்கலை இன்னும் வளரவேண்டும், நிதிவாண! பெருநிதி வழங்குக!

கலைவாணன்:-- அரசே! ஒரு விண்ணப்பம். கலை நிலையானது கருத்திற்கு விருந்தளிப்பது. ஆனால் அதன்நிலை இன்று அனுதாபத்திற்குரியதாயிருக்கிறது. கலைகளில் பல மறக்கப்பட்டு விட்டன, சில மறைக்கப்பட்டிருக்கின்றன. அதன் வளம் நாளுக்குநாள் மங்கிவருகிறது காரணம் போற்றுவாரில்லை. அதனையே தொழிலாகக் கொண்டு வளர்க்கும் அறிஞர்களுக்குப் போதிய ஆதரவு இல்லை. வறுமை அவர்களின் வாழ்வை அரிக்கின்றது. அந்த நிலையிலும் ஏதோ கொஞ்சத்திற்குக் கொஞ்சமாவது உயிர்

கொடுத்து அழியாது காப்பாற்றி வருகின்றனர், கலைத் தொழிலை மேற்கொண்ட மக்கள் குலத்தில் குறைந்தவ ராக மதிக்கப்படுகின்றனர். அந்த நிலை மாறவேண்டாமா? கலையில் வல்லவர்களுக்கு வாழ்வளிக்கவேண்டும். ஆகவே கலையைப் போற்றி வளர்ப்பதே தங்களைப்போன்ற பேரரசர்க்கு அழகாகும். அதுவே நமது நாகரீகமுங்கூட. என்றாலும் கலையை விலைகொடுத்தா வாங்குவது? விலைப் பொருள் விரயமாகும். ஆதலின் அத்துடன் அழியாப் புகழ் நிலவ 'நடன மயில்' என்ற பட்டமும் வழங்கல் நலமெனக் கருதுகிறேன்.

அர:— பெருமக்களே! தங்கள் கருத்தென்னவோ?
பெருமக்கள்: தங்கள் சித்தம் எங்கள் பாக்கியம்

அர:— மதிவாண! ராஜமுத்திரை பொறித்த தங்கப் பதக்கமும் வழங்குக.

(வீரர்கள் கைதிகளை கொண்டுவருதல்)

தளபதி:— அரசே! இந்த அதிகப் பிரசங்கி பொதுமக் களை கூட்டிவைத்துக்கொண்டு மாட்சிமைதங்கிய அரசாங்க நடவடிக்கைகளை இழித்துப் பேசினான்.

அர:— ம்... என்ன அகந்தை. அவ்வளவுக்கு மிஞ்சி விட் டதா?

தள:— பொதுமக்களைத் தூண்டும் புல்லர்களை பொசுக்க வேண்டும். இவ் ஏழைக்குறும்பனுக்கு கடுங்காவல் விதிக்க வேண்டும்.

அர:— பெருமக்களே!

பெ. ம:— தங்கள் சித்தம் எங்கள் பாக்கியம்.

அர:— நிறைவேற்றுக !

தள:— ம் ... (வீரர்கள் கைதியை இழுத்துச் சென்றதும். அடுத்த கைதியை சிலர் இழுத்துவருதல்). அரசே ! இந்தப் புத்தகப்பூச்சி நம்முன்னோர்கள் எழுதிவைத்தக் காவியங்களைக் காலத்திற் கேற்றதல்ல, கருத்துக்கு ஒவ்வாதது, விஞ்ஞானத்திற்குப் புறம்பானது என்றெல்லாம் கண்டித்து எழுதியுள்ளான். இவன் எழுத்தில் புரட்சிவாடை வீசுகிறது. இவனுக்கு ஆயுள்தண்டனை விதித்தல் நல்லது.

அர:— பெருமக்களே !

பெ. ம:— தங்கள் சித்தம் எங்கள் பாக்கியம்.

அர:— அப்படியே ஆகட்டும்.

(வீரர்கள் இழுத்துச் சென்றதும் சிலர் வேறொருவனை பலவந்தமாகத் தள்ளி வருதல்)

தள:— இப் பஞ்சைப்பயல் அரச ஆணையை மீறினான்.

அர:— சிறுவனே ! என்ன துடுக்கு !

அம:— அதிகார வெறிபிடித்த ஆணவப்பேய்கள் பிடித்து இழுத்து வந்தது துடுக்கா ? இவர்கள் கையில்சிக்கி கைதியாகி நிற்பது துடுக்கா ?

தள:— வாலிபனே ! எங்கிருக்கின்றோம், யார் முன்னிலையில் பேசுகின்றோம் என்பதை எண்ணிப்பார்.

அர:— இவன் யார் ?

தள:— தத்துவ சாஸ்திரி விருத்த வேதியரின் வளர்ப்புப் பயல்.

அர:— என்ன நடந்தது ?

தள:— ராஜாங்கத்திட்டப்படி வாலிபர்களை கட்டாய ராணுவப் பயிற்சிக்கு அழைத்தோம். இப்பட்டிப்பயல் வர மறுத்தான். வாது செய்து வம்பு அளந்தான்,

அர:— என்ன ஆணவம் ?

அம:— அண்டை நாட்டை ஆக்கிரமிக்கத் திட்டமிடுவது அரசநீதி. அதற்கு உடன்பட மறுப்பதா ஆணவம் ?

பெ.ம:— அரச ஊழியம் செய்ய அவனுக்கு பாக்யமில்லை.

அம:— மன்னவன் சேவையைவிட மக்களின் சேவை உயர்ந்ததென்று மதிக்கின்றேன்.

தள:— வேதியப் பையன். தர்ப்பைப் பிடிக்கும் தாசனுக்கு வீர வாளேந்தும் வலிமை ஏது ?

அம:— ஐயா உம் நாவை அடக்கும். தாசனல்ல. மறக்குடி மகன். உம் குதர்க்க வாதத்திற்கு நேரடியாகப் பாடம் புகட்டவேண்டும். ஆனல் சந்தர்ப்பம் சரியில்லை. கூண்டிலுள்ள சிம்மத்தை குச்சியால் குத்துவது ஆண்மையா ?

தள:— நாட்டுமக்கள் மன்னவன் ஆட்சிக்கு உட்பட்டவர்கள். அவர்களில் நீயும் ஒருவன். கட்டுப்பாட்டிற்கு உட்படவேண்டும்.

அம:— மக்களுக்காக மன்னனு? மன்னனுக்காக மக்களா?

பெரு. 1:— அரசு தெய்வீக உரிமை. அது பாம்பரைச் செல்வம். ஏழைச் சிறுவனே! என் வாதம்.

பெரு. 2:— கெடுமதி கண்ணுக்குத் தோன்றுதப்பா! அரசு அன்றே கொல்லும்

அம:— இயற்கை என்றும் கொல்லும் என்பதை நினைவு படுத்திக்கொள்ளுங்கள். முடி சார்ந்த மன்னருக்கும் முடிவு உண்டு. மன்னர்களும் மனிதப் பிறவிதானய்யா யான் ஏழையாக இருக்கலாம். ஆனுல் கோழையல்ல. !

அர:— கைதியே! எம் செங்கோலில் என்ன பழுது கண்டாய்?

அம:— உத்திரவன்றி இழுத்துவருவது; விசாரணையின்றி சிறையில் வைப்பது; மக்களின் விருப்பத்தை மதியாது தன் மனப்படி ஆள்வது; அண்டை நாட்டின்மீது வீணில் சண்டை தொடுப்பது.

பெரு. 1:— 'யாகாவாராயினும் நாகாக்க'

பெரு. 2;— பூலோக வாழ்க்கை பிடிக்கவில்லைபோலும்.

கலைவாணன்:— எரிகின்ற நெருப்பில் எண்ணெயை ஊற்றலாமா?

தள:— விதியோடு விளையாடுகின்ருன் சதிகாரக் கும்பலின் பிரதிநிதி. இவனைச் சிறைவாழ்வுதான் சீர்திருத்தும்.

அம:— என்னைச் சிறையில் தள்ளலாம். ஆனுல் என் சிந்தனையை? கை கால்களில் விலங்கிடலாம். ஆனுல் என்

உள்ளத்தை ? என் உடலை வருத்தலாம். ஆனால் என் உணர்ச்சியை ?

அர:— சதிகாரக் கும்பலுக்குப் பாடம் புகட்டவேண்டும் ராஜத் துவேஷக் குற்றத்திற்காக இவனை நாடு கடத்துக !

தள:— போதாது ; தண்டனை போதாது ! தலையை நறுக்கவேண்டும்.

அர:— பெருமக்களே !

பெரு:— தங்கள் சித்தம் எங்கள் பாக்கியம்

கலை:— வெந்த புண்ணில் வேலை நுழைப்பதா ? வயப் புலியை வாலுருவி விடாதீர்கள்

அம:— ஏகாதிபத்யத்தின் ஏவற்பிண்டங்களே ! நீங்கள் சாகாவரம் பெற்று வந்தவர்களோ ?

தள:— அமரா ! நாளைக்காலை ஞாயிறு எழுவதற்குள் இந் நாட்டெல்லையைக் கடந்து விடவேண்டும்.

அம:— அரசே ! உலகம் மிகவும்பெரிது. உங்கள்சிறு நாடு தவிர மற்றப்பெருநிலப் பரப்பைகடல் விழுங்கிவிடவில்லை.

தள:— வீரர்காள் ! பித்த முதிர்ச்சியால் பிதற்றுகிறான். இழுத்துச் சென்று தூரத்துங்கள்.

அம:— நீங்கள் ஒவ்வொருவரும் ஒருநாள் இவ்வுலகத்திலிருந்தே விரட்டப் படுவீர்கள் என்பதை மறக்க வேண்டாம் கொடுங்கோல் மன்னன் வாழும் நாட்டிலும் கடும்புலி வாழும் காடு நன்று. புரட்சி ஓங்குக !

(வீரர்கள் அமரனை இழுத்துச் செல்கின்றனர்)

## களம் 15

இடம் :— மரகத மலைச்சாரல்

காலம் :— காலை

மாந்தர் :— அமரன், மலைவாணர்கள்.

● இளமை ததும்பும் முகம். கட்டமைந்த உடல். அறிவு விளங்கும் பார்வை. அன்பு கனிந்த உள்ளம் அமைந்த அமரன், தவக்கோலத்தில் அரசமர நிழலில் பாடிக்கொண்டு அமர்ந்திருக்கின்றான். அருகே ஓடும் அருவியில் சிந்தை சென்றுள்ளது. மறவர் சிலர் அவனை சந்திக்கின்றனர்.

புலிக்கண்ணன் :— அடே தம்பி! அதோ பார். அரச மரத்தடியில் புது நாற்றம். (சைகை)

சிங்கன் :— ஆமாண்ணா! வேத்துக் காத்து வீசுது.

புலி:— அருகிலே போய் பார்க்கலாம். (அருகில் வந்து)

தம்பி; மகான்டா! சாட்சாத் தம்பிரான் மாதிரி இருக்கு.

சிங்:— பரிவாரம் மடாலயம் ஒன்றுங்காணோமே! ஒரு வேளை பொண்டாட்டி புள்ளையோடு சண்டைபோட்டுகிட்டு பொறப்பட்ட ஆசாமியோ? ஏண்ணே இப்பதான் பொளப்பத்த பசங்களுக்கெல்லாம் இது ஒரு புது வழியா இருக்கே.

புலி:— அடே! கொரச்சுப் பேசாதே! ஞானதிருஷ்டியால தெரிஞ்சு சபிச்சுடுவார். ஜாக்கிரதை! சாமிய கும்பிட்டு வரங் கேட்போம்.

சிங்:— சாமி ரொம்ப கும்பிடுரேனுங்க! எனக்கு வெகு நாளா ஒரு ஆசை அதுக்கு சரியான சாமியா இதுவரை கிடைக்கில. எங்க அப்பன், பாட்டன் செய்த புண்ணியத்திலே நீங்க வந்திருக்கிங்க.

புலி:— ஆமாங்க! ஒரே ஒரு வரந்தான் வேணும்.

துறவி:— ஐயா! வரங்கொடுக்கும் சக்திவாய்ந்த பெரும் துறவியல்ல. இளைஞன். அதிலும் புதிது.

புலி:— ரொம்பப் பெரியவாளெல்லாம் அப்படித்தான் சொல்வாங்க. இவனுக்குக் கொஞ்சம் கல்யாணப் பித்துத் தான் உண்டு.

சிங்:— நல்ல பொண்ணு மோகினியாட்டம் இல்லாட்டி பூலோக ரம்பையாட்டம் இருக்கணும் ஆமா.

துறவி:— சஞ்சலம் மறந்து சாந்தியாக சிந்தையை ஒரு வழிப்படுத்த வந்தேன். வீண் தொந்தரவு செய்யாதீர்கள்.

புலி:— அந்த வரம் ஒண்ணுமாத்திரம் தந்திடுங்க. போயிடுரோம்.

துறவி:— நையாண்டி போதும், உங்கள் வேலையைப் பாருங்கள்.

புலி:— சாமிக்கு இதெல்லாம் என்ன பிரமாதம் கடல கலக்கி கையால அள்ளி ஒரே வாயில் குடிச்சிடுவிய, தெர்ப்பைய கிள்ளிப்போட்டு பயலா மாத்திடுவிய, செத்த வன எல்லாம் சாகடிச்சிடுவிய, இல்ல பொழைக்க வச்சிடுவிய, எண்ணிணு அந்தரத்திலேயே புது உலகம் உண்டாயிடும், உங்க பரம்பரை சாமானியமா? தெய்வங்களெல்லாம் உங்கள் ஏவலுக்குக் காத்திருக்கும், ம்....

சிங்;— அந்த வரம் மாத்திரம் தந்திடுங்க போதும்.

துறவி:— சூதும் வாதும் வேதனை செய்யும்.

புலி;—(பதட்டமாக) ஆமாம் நீங்கள் செய்வது சூது. நாங்கள் பேசுவது வாது. அடே பால சந்யாசி எழுந்திரு. எத்தனை பேர் இப்படி கிளம்பியிருக்கிறீர்கள்.

அம:— (திடுக்கிடல்)

புலி:— என்ன? பயித்தியக்கார விழி விழிக்கிறாய்? நீ சந்தேகப் பேர்வழி. மரியாதையோடு வா.

துறவி:— மறுத்தால்......?

புலி:— இந்த இருப்புக்கரங்கள் உன் பிடரியில் விளையாடும்.

துறவி:— அது வரை என் கை பூவா பறிக்கும்...?

புலி:— அடே! முண்டனுக்கு ரெண்டாள்.

சிங்:— அண்ணா! துறவியைக் கேவலமாகப் பேசாதே! (நெருங்கி) சந்நிதானம் எழுந்தருளட்டும்.

துறவி:— எங்கே?

சிங்:— மடாலயத்திற்கு சக்தி பூஜை நடத்த...

துறவி: — (தலையசைத்து வரமறுத்தல்)

சிங்:... அட வாடா சாமின்னா... (இழுத்துச் செல்லல்).

# திருப்புக் காட்சி.

●

(துறவியை சூருவளியின்முன் நிறுத்துகின்றனர்)·

சூரு:— துறவியே! என்ன? உலக இன்பம் கசந்து விட்டதா? எண்ணியபடி ஏதும் நடக்கவில்லையா? சகாவரம் பெறத் தவக்கோலம் பூண்டீரா? அல்லது மூன்று லோகத்திற்கும் ஏகச் சக்ராதிபதியாகும் நோக்கமா? என்ன? மௌனம் கலையட்டும்.

துறவி:— இல்லை. வாழ வகைதெரியாத கோழையல்ல. பாழும் உலக அவதியில் சிக்கிச் சிதைய விருப்ப மின்றி இயற்கையோடு குலவி காலத்தை கடத்தக் கானகம் வந்தேன்.

சூரு:— தங்கள் பூர்வாஸ்ரமம்?

துறவி:— மனிதப் பெருவெள்ளத்தில் ஒரு சிறு துளி. மறந்த கதையை மீண்டும் நினைக்க மனம் வெறுக்கின்றது.

சூரு:— அதைத் தெரிந்தாக வேண்டியது ஒன்றும் இல்லை. ஆனல் தாங்கள் எந்த நாட்டு ஒற்றரோ? உண்மையைச் சொல்லும்.

துறவி:— இல்லை, இல்லை. நாடு கடத்தப்பட்டக் குற்றவாளி.

சூரு:— அது அரசியல் தந்திரம். அண்டை நாட்டார் சந்தேகிக்காதிருக்க பொய்க்குற்றம் சாட்டி போலி விசாரணை நடத்தி துரத்தி அடிப்பது:

துறவி:— உண்மையாகச் சொல்லுகிறேன். நம்புங்கள்.

புலி;— நம்ப வழியில்லை. சந்தேகப் பேர்வழி சந்தேகப் பேர்வழிதான்.

சூரு;— இந்த முறை இன்று நேற்று ஏற்பட்டதல்ல. சரித்திர காலத்திற்கு முற்பட்ட நாளில் நம் தாய் நாட்டைக் கால்டிபடுத்த விரும்பிய ஆரியர், விந்தியத்தைக் கடந்தது ரிஷி வேஷத்தில்தான்; பல்லவ ராட்சியை சீர்குலைக்க புலிகேசி புத்த பிட்சுக்களைத் தான் அனுப்பினான். நீலகேசியின் சூழ்ச்சி காபாலிக் சந்யாசக் கோலத்தில்தான் தமிழ் நாட்டை தாழ்த்தியது. இந்நாளில் தானென்ன? வியாபாரம் செய்ய வந்த வெள்ளையர் இந்திய நாட்டை வெள்ளாட்டியாக்கிக் கொள்ள அருந்தொண்டு புரிந்த ஐந்தாம் படை பாதிரிக்கோலத்தில்தான் படையெடுத்தது. பால சந்யாசியே! கடைசி சந்தர்ப்பம்; தவறினால் தலை தரையில் உருளும். ம்...

துறவி;— உயிர் எனக்கு வெல்லமல்ல! வீரனுக்கு ஒரே சாவுதான். இனி உங்கள் விருப்பம்.

சூரு:— உன் நாட்டிற்கு நீ நல்ல தேசபக்தன். ஆனால் எங்கள் நிலவரம் அறியவந்த அன்னிய ஏகாதிபத்தியத்தின் கையாள். நரித்தலையா! ...ம்.

(நரித்தலையன் துறவியை பிடித்து இழுத்து வந்து சவுக்காலடித்தல்)

நரி;— அடே பால பரதேசி! எதற்காக மலைச்சாரலுக்கு வந்தாய்? ம்... உண்மையைச் சொல்லமாட்டாயா? (அடி):

துறவி:— நிரபராதி. நிரபராதி.

சூரு;— அவன் வேடத்தைக் கலையுங்கள்! (இருவர் துறவியின் வேடத்தைக் கலைத்தல்)

புலி:— அட! இதுஒண்ணும்புதுசல்ல. ரொம்ப அடிதின்ன மேனி. பட்டைப் பட்டையாத் தளும்பேறிக்கிடக்கே.

நரி:— (தொடர்ந்து அடித்தல்)

[அமரன் (துறவி) களைத்து விடுகிறான். அந்த சமயம் சுனையிலிருந்து தண்ணீர் குடம் ஏந்திவந்த சில பெண்களுடன் கன்னியும் சேர்ந்துகொண்டு வேடிக்கை பார்க்கிருள்.

நரி:— டேய்! இவன் பலே ஆள்- பெரிய சர்கசக்காரன் போலிருக்கு!

புலி;— நெஜமாகவே மயக்கம் போட்டாப்லேல்ல கிடக்கிருன்.

கன்:— கொஞ்சம் தண்ணீரை கொடுத்து தெளியவச்சு அடிச்சா போவுது.

புலி:— கொண்டா, குடத்தை எறக்கு.

(தண்ணீர் எடுத்து முகத்திலடிக்க, அமரன் மயக்கம் தெளிந்து எழுகிருன்).

(நரித்தலையன் அடித்தல்) கன்னி 'ஆ' [என்றலறி ஓடித்தேக்குதல். யாவரும் திகைத்தல்]

கன்:— என் அமரன்! என் அமரன்!

சூரு:— மகளே! என்னபேதமை மாற்ருன்மீது கருணையா?

கன்:— நம்மவன், நம்மவன், நம்பலாம்.

சூரு:— துறவியே! மறு பிறவி பெற்றுவிட்டாய். உன் வாழ்வின் மர்மத்தைச் சொல். மனங்கலந்து வாழ்வோம்.

# களம் 16.

இடம் :— அந்தரங்க மன்றம்

காலம் :— முற்பகல்

மாந்தர் :— அரசன், பிரதானியர்.

[அரசனும் பிரதானியரும் புரட்சிக்காரர்களை ஒடுக்க திட்டமிடுதல்]

மதிவாணன் :— அரசே! நிலைமை நாளுக்கு நாள் மிஞ்சுகிறது. தேசத்தின் அமைதி குலையும்படி புரட்சிவாடை எங்கும் வீசுகிறது. ஏழை எளிய மக்களிடம் ஏற்பட்டிருக்கும் புதிய உணர்ச்சியை மதித்துச் செயலாற்ற வேண்டும்.

தளபதி ;— தேசத்தின் அமைதியை குலைக்கும் சதிகாரர்களைத் தொலைத்துவிட்டால் எல்லாம் சரியாய்விடும்.

கலைவாணன் :-- புரட்சிப்பூனைக்கு மணிகட்ட அதிகார வர்க்க எலியால் ஆகுமா?

மதி:— ஆயுதபாணிகளான மலைவாசிகளின் திடீர்த் தாக்குதலைச் சமாளிக்கப் போதிய சக்திதேவை. நம் படையிலோ கூலிப் பட்டாளங்களே மிகுதி. அவற்றை நம்புவதற்கில்லை. சமயத்தில் காலை வாரிவிட்டாலும் விடும்.

கலை:— பொதுமக்களின் ஆதரவு புரட்சிக்காரர்களின் பக்கமே இருக்கிறது.

தள:— நண்பர் மந்திரியார் போதிய சக்தி தேவையென மறைமுகமாக என் நிர்வாகத்தை இடித்துக் கூறுகிறார்.

அம்மலை எலிகள் நேரடியாக அணிவகுத்து எதிர்த்துப் பார்த்தால் தெரியும்.

அர:— அம்மலைவாசிகளை நம்குடிமக்கள் ஆதரிப்பதேன்?

கலை:— அரசே! நல்ல சந்தேகம். தெளிவு பெற வேண்டிய ஒன்று. அம்மலைவாசிகள் யார்? ராஜத் துரோகிகள் என நம்மால் நாடு கடத்தப் பட்டவர்கள். வரிச்சுமையிலிருந்து தப்ப வழியின்றி ஓட்டம் பிடித்தவர்கள். அரசாங்க ஊழியர்களின் அதிகார வெறிக்கு இரையானவர்கள். எதிர்ப்பு சக்தியாக உருவெடுத்திருக்கிறார்கள். ஆனால் தேசத்தில் வறுமையின் சின்னமாக வாடும் மக்களின் நலத்தை நாடுகின்றனர். சகிக்க முடியாது ஓடியவர்கள் மிகக் குறைவு. அப்படி ஓடாது நாட்டில் நலிபவர்கள் தொகை மிக மிக அதிகம். எல்லாம் விதிப்படி நடக்கின்றது என்ற வேதாந்த நம்பிக்கை அற்றுவிட்டது. மதிவலியால் இழந்த உரிமைகளைப் பெற முயற்சிக்கின்றனர. அதற்காக எவ்வித துன்பங்களையும் தாங்க தயாராகி விட்டனர். இந்த நிலையில் அவர்களின் ஆதரவை அரசாங்கம் எதிர்பார்க்கமுடியுமா?

அர:— என்ன செய்யலாம்?

மதி:— இனி எதிர்த்து அடக்கி மடக்கி விடுவதென்பது முடியாத காரியம். மக்களுக்குத் திருப்தி ஏற்படும்படியாக ஆட்சி முறையை மாற்றி அமைக்கவேண்டும். சிறையிலே வதங்கும் பொதுநலத் தொண்டர்களை விடுதலை செய்யவேண்டும். சூறுவளிப் படை மறவருடன் சமரசம் செய்துகொள்ளவேண்டும்.

தள:— மந்திரியாரின் கருத்துக்கள் ராஜாங்க கௌரவத்தையே பறிகொடுப்பதாக இருக்கின்றன.

கலை:— தளபதி அவர்களே! ராஜாங்க மதிப்புக் குறையாத வகையில் ஒரு நல்ல த்திட்டதைச் சமர்ப்பிக்கட்டுமே.

தள:— வேண்டுமானால், தற்காலிகமாககுருவளிப்படைஞருடன் சமரசம் செய்து கொள்வது. பிறகு சந்தற்பத்திற்கு ஏற்ப நடவடிக்கை எடுக்கலாம்.

அர:— எமக்கும் அதுவே நலலதாகத் தோன்றுகிறது. அதற்கான திட்டங்களை வகுத்து நடத்தும் பொறுப்பை தளபதி அவர்களே மேற்கொள்ளட்டும்.

தள:— இது மாதிரியான காரியங்களில் மற்றைய சகாக்களின் ஒத்துழைப்பு ரொம்பவும் தேவை.

அர:— அதற்குத் தடை என்ன இருக்கிறது...

மதி:— நாட்டின் நன்மைக்கான காரியங்களில் ஒத்துழைக்கக் கடமைப்பட்டிருக்கிறோம்...



## களம் 17.

இடம் :— மலைச்சாரல்
காலம் :— பிற்பகல்
பாத்திரர் :— சூருவளி, மலைவாணர்,
சந்திரவதி—தளபதி.

[சந்திரவதி அரசாங்கத் தளபதி வெள்ளைக் கொடி பிடித்து சூருவளிப்படையுடன் ஒப்பந்தத்திற்கு வருதல்.]

தள :— தலைவ! வணக்கம். எமது மன்னவன் மனமுவந்து அனுப்பிய திருமுகத்தையும் கையுறைகளையும் ஏற்றருள்க!
(கொடுத்தல்)

சூருவளி :— மிக்க மகிழ்ச்சி!... தளபதி அவர்களே! இக் காட்டுவாசிகளால் ஆகவேண்டியது என்னவோ...?

தள:— தலைவ! சந்திரவதி அரசன் சிம்மசேன மகாராஜா தங்கள் நட்பைப் பெரிதும் விரும்புகிறார். சந்திரவதி அரசாங்கம் தங்கள் ஆதரவை நாடுகிறது. மரகதமலை வீரமறவர்களுக்கும், சந்திரவதி அரசிற்கும் அரசியலுறவு ஏற்படுத்தும் பொறுப்பினைத் தாங்கி வந்திருக்கிறேன்.

சூரு :— மலங்காட்டு மறவர்கள், குகையில் பதுங்கி வாழும் காட்டுவாசிகள் கட்டுப்பாடற்ற முரடர்கள் என்பது தாங்கள் அறியாததா...பரந்த நிலம், படைவரிசை. குடிவளம், ஆட்சி நலம் யாவும் சிறப்பாகப் பெற்றுள்ள பரம்பரை அரசுடன் உறவுகொள்ள எந்த வகையிலும் தகுதியற்றவர்களே!

தள :— தாங்கள் அப்படிச் சொல்லலாமா? தங்களை எவ்வளவோ பெரிதாகமதித்து எங்களரசர் உறவுகொள்ள விரும்

புகிறார். எல்லைப்புற கிராமங்களை தங்கள் வசம் விட்டுக் கொடுக்க சம்மதித்திருக்கிறார். மலைவாணர் படைவரிசை ஒன்றின் செலவையும் ஏற்றுக்கொள்ள முன்வந்திருக்கிறார். ஆனால் தங்களிடம் பெறவிரும்புவது நட்பு ஒன்றுதான்.

தூரு:— மறவர் திலகங்களே! உங்கள் கருத்து என்னவோ?

நரி;— எதையும் எண்ணித் துணிவதும் நல்லது...

அம;— எதனையும் சமாளிக்கும் திறம்பெற்ற வீர மறவர் நட்பை நிராகரித்தனர் என்ற பழிக்கு ஆளாகா வண்ணம் இருப்பதே மேல்.

புலி:—என் கருத்தும் அதுவே!

சிங்:— நான் ஒண்ணும் கருத்துமில்ல. செவத்துமில்ல... ஊதுற சங்கை ஊதுறெ விடியறப்போ விடியுது,

தூரு:—தளபதி அவர்களே! நல்லது. ஒப்பந்தம் செய்து கொள்வோம். அதன்படி நடக்க ஒருவருக்கொருவர் கடமைப்பட்டிருக்கிறோம். எங்களை ஒருபொருட்டாக மதித்து அரசியல் உறவு பூண்டு பெருமையளித்த மன்னர் பிரானுக்கு மனமார்ந்த நன்றி.

தள;— எல்லாம் இறைவனின் கருணை ; அவன் விதிப்படி நடப்பது நமது கடமை.

சிங்:— அது காராக்கருணையை விட பெரிசுபோலிருக்கே.

தூரு:— ஐயே! மலைபடு பொருள்களை ஏற்றருள்க. மன்னவன் போன்பிற்கு இச்சிறு பொருள்கள் எம்மாத்திரம்.

தள:— மறவர் தலைவ! இவ்வருடம் மன்னர் பிறந்த நாள் விழாவிற்கு அழைப்பனுப்புகின்றோம். தோழர்கள் சூழ முன்னதாக வந்திருந்து விழாவினைச் சிறப்பிக்க வேண்டுகிறோம். தங்களை நேரிற் பார்த்துப் பழக எம்மன்னனுக்கு மட்டற்ற ஆசை. அரசனிடம் தங்கள் பெருந்தகவை எடுத்துக் கூறி தங்களை சிறப்பாக வரவேற்பதற்கான ஏற்பாடுகளை செய்யப் போகின்றேன்...

தூரு:— தளபதி! அவ்வளவிற்குத் தகுதியுடையவனல்ல. ஆடம்பரம் எதற்கு? சந்தர்ப்பம் எப்படியோ...? தங்கள் விருப்பத்தை நிறைவேற்ற முயற்சிக்கின்றேன்

சிங்:— ஐயா வந்தாலும் வராட்டாலும் நான் முன்னதாகவே வந்து சேர்ந்துடுவேன்னு...

தள:— நல்லது, விடை பெற்றுக்கொள்கிறோம்

சிங்:— அது புத்துக்குள்ளேல்ல...



## களம் 18.

காலம் :— மலைச்சாரல்

மாந்தர் :— மாலை

இடம் :— கன்னி, அமரன்

(இளங்காளை அமரனும் பெண் மயில் கன்னியும் மலைப்பாங்கரில் சந்திக்கின்றனர்)

● தனிமையில் இருக்கும் அமரனை மரத்தின் மறைவிலிருந்து கொண்டு கன்னி மலரால் அடிக்கிறாள்.

அம:— என்ன பூங்கணை பாய்கிறது, யாரது? ஒருவேளை அம்மன்மதனின் திருவிளையாடலாக இருக்குமோ... அப்படி இருப்பதற்கில்லை... அவனைத்தான் சுட்டெரித்து விட்டனரே. மரத்திடுக்கிலிருந்து அடிப்பது வேறு யாராக இருக்க முடியும்? மனைவியைப் பறி கொடுத்த ராமன் மதிமயங்கி வாலியைக் கொன்ற கொள்கையன்றோ? அவனுந்தான் திரேதாயுகம் பேர்வழி யாச்சே! இல்லை... இந்த வனதேவதையோ?... ஏ! வனமோகினியே! மன்னிக்கவும்... ஏழையேன் என்ன தவறு செய்தேன்.

கன்:— (மறைந்து நின்றபடியே) மனதைப் பறிகொடுத்த மங்கையின் மலரடி தாங்க முடியவில்லையோ? கன்னியர் கருத்தைக் கவரும் கட்டழகு பெற்றிருப்பது தவறல்லவா..?

அம:— ஓகோ...ம்...

கன்:— பெண்ணுள்ளத்தைக் களவாடல், அவர் மனத்தை அனுமதியின்றி ஆக்ரமித்தல், ஆகிய பெருந் தவறுகளை

செய்திருக்கும் குற்றவாளி நீ... இயற்கை விதிக்கும் தண்டனையை அனுபவித்தாக வேண்டும்.

அம:— என்னையும் அறியாமல் நிகழ்ந்த பிழைகளாக இருக்கலாம். பொருத்தருள்க. தண்டனையைத் தாங்கசக்திஇல்லை.

அமரன்:—பாட்டு ரா:— கானடா. தா. ஆதி

பல்லவி

என்னை வருத்தலாமோ மலர்கொண்டு —(என்னை)

அனுபல்லவி

மின்னிடை மதிமுகம் இருகயல் விழியொடு
மேகமும் யாழிசை புரைகுயில் மொழியொடு-(என்னை)

சரணம்

கன்னியிக் கானகத் தேவதையே எனைக்
கைவிடல் நீதியோ காமன்மலர்க் கணை
என்னுடல் நேம்பிட எறிவதும் ஏதோ?
இன்புடன் உனதுளம் அறிவது தீதோ? —(என்னை)

கன்:— பக்தனே! குற்றத்தை உணர்வதற்காக மகிழ்கிறேன். தேவையான சக்தியை அருளுகின்றேன். பெற்று மகிழ்க... (முன் வருதல்)

அம:— வனதேவதையே! வந்தனம்.

கன்:— (புன்னகை புரிதல்)

அம:— பகைவருக்கு அஞ்சா என்னை உன் புன்னகை பணியச் செய்து விட்டதே...

கன்:— கைதியே! எச்சரிக்கை. இனியும் இது போன்ற தவறுகளை வேறு எங்கும் செய்யமுடியாது. உன்னை சிறை செய்திருக்கின்றேன்.

அம:— வீரர்கள் பழிக்குப் பழி வாங்குவார்கள்.

கன்:— ஏ குருவிகளே! என்ன? என் சிறைக் கூடத்திற்கு காவல் கட்டு ஒன்று மில்லை என்று எண்ணுகிறீர்களா...?

அம:— அதைவிட வலிமை வாய்ந்த இதயச்சிறையில் தள்ளி அன்பு விலங்கு பூட்டி, ஆர்வத்தைக் காவல் வைத்திருக்கி றோம்... தெரியுமா...?

கன்:— அடி அருவி! நின்று பேச நேரமில்லையா ...

அம:— ஆம் அவள் காதலன் கடலழகன். அவளது வரு கைக்காகக் காத்திருப்பான்

கன்:— ஏ பறவைகளே! என்ன எங்களைப் பரிகாசிக்கின் றீர்களா.

அம:— இல்லை... வாழ்த்துகின்றன...

கன்:— எதற்காக?

அம:— அவைகளின் தொழிலை நாமும் மேற் கொண்டிருப் பதற்காக...

கன்:— என்ன தொழில்?

அம:— அதுவா....கடலைவிட ஆழமானது. உலகத்தைவிடப் பெரியது. வானத்தைவிட உயர்ந்தது. சூரிய சந்திரர் திசை மாறினும் மாறுபடாதது. வானிடிந்து வீழினும் கலங்காதது...

கன்:— பெயர்?

அம:— காதல்...

கன் ;— யார் கற்றுக் கொடுத்தது ?

அம :— பருவம்...

கன் :— அது எப்படிப்பட்டது ?

அம ;— நம்மைப் போன்றது... (சிந்தனையில் ஆழ்தல்)

கன் :— என்ன ? யோசனை பலமா நடக்குதே...

அம :— இல்லை... பழைய நினைவுகள் குறுக்கிட்டன.

கன் :— ஓகோ... அந்தப் போலீஸ் ஸ்டேஷனில்...

அம ;—இல்லை.... ஜமீன் தோட்டத்தில் ஆடும் நீயும்...

கன் ;— அது கிடக்கு.... தந்தை எப்போ வருவாரோ ?

அம :— அரண்மனை விருந்து லேசா...! அதற்குள் எப்படி திரும்ப முடியும் ?

கன் .— அப்ப... தாங்களும் சென்றிருந்தால்...

அம :— அதென்ன ? இந்தக் காதல் விருந்தைவிடச் சிறந்ததா...? எங்கே கொஞ்சம்... இசை...

## கன்னி பாடல்.

ராக —ஹம்சானந்தி                                    தா :—ஆதி

பல்லவி

அடைந்தேன் வாழ்விலே ஆனந்தம்     —(அடை)

அனுபல்லவி

மடைதிறந் தோடிடும் நீரினிற் கந்தம்
மதிப்பிலைக் காதல! எனக்கது சொந்தம்—(அடை)

சரணம்

கடலோடு புவியும் வானமும் சிறிதே
காதலும் அன்பும் யாவினும் பெரிதே
உடலோடு மோட்சமும் உண்மையில் உண்டோ
ஒன்றிய அன்பினில் யானதைக் கண்டே—(அடை)

## களம் 19.

இடம் :— சந்திரவதி நகரம்

காலம் :— காலை

மாந்தர் :— தூருவளி, புலி, சிங், தளபதி, அரசன்

[கூடாரத்திலிருந்து தளபதி தூருவளியை அழைத்துச் செல்லுதல்]

சூரு:— (சுற்று முற்றும் பார்த்தல்) என்ன! விழாவிற்கான அறிகுறிகள் ஒன்றுங் காணேமே...

தள:— நாள் தள்ளி வைக்கப்பட்டிருக்கிறது...

சூரு.— ஏன் ?

தள:— சாஸ்திரிமார் விவாதத்தில் பஞ்சாங்கத் தவறு அம்பலமாகியது. அடுத்த சுபயோக சுபதினத்தில் நிச்சயம் நடைபெறும்...

தூரு:— அப்படியானல்...?

தள:— தாங்கள் அதுவரை அரசாங்க விருந்தினராக தங்கி இருக்க வேண்டும்...

தூரு:— நெடுநாள் தங்குவதென்பது இயலாத காரியம் நகர வாசம் எங்களுக்கு ஒத்துக் கொள்ளாது. அரசரைக் கண்டு நன்றி செலுத்தி விட்டு விடை பெற்றுக்கொள்கிறோம்...

தள:— வந்தவிருந்தினரை அவ்வளவு சீக்கிரமாக திருப்பி அனுப்புவோமா...?

தூரு:— உங்கள் அன்பு மிகவும் அதிகம்...

★ ★ ★

## திருப்புக் காட்சி.

●

(தர்பாரில் சூருவளி அரசனைக் காணல்)

தள:— அரசே! மலைக்காட்டுப்புலி, மாட்சிமை தங்கிய மன்னர் பிரான் பேட்டிக்கு வந்திருக்கிறது...

அர:— ஓ...கோ...! அந்த சூருவளியா...!

(வரவேற்காததால் சூருவளி வெளியேறத் திரும்பல்)

அர:— இந்த எலிதான் நம் மண்டிலங்களைக் கிழறுத்ததோ

சூரு:— (வெகுட்சி) நல்ல ஆண்மை. நல்ல ஆண்மை... விருந்திற்கழைத்து நரித்திறம் புரிதல்.

தள: – ராஜ தந்திரங்களில் இதுவும் ஒன்று...

சூரு:— நயவஞ்சகப் பசப்பு மொழிகளை நம்பி ஏமாந்தோம். வாளாண்மை செல்லாயிடத்து, வாயாண்மை காட்டுகின்றீர்... நன்று நன்று உங்கள் விருந்து முறை.

அர:— ரணகளத்தில் அணிவகுத்து எதிர்த்தலன்றோ சுத்தவீரனுக்கு அழகு...பருந்துப் பாய்ச்சலில் கொள்ளை முறையைக் கையாளுதல் எத்திறமே ...?

சூரு:— போர் முறைகளில் அதுவும் ஒன்று. எதிரியை நேரடியாகத் தாக்க சமபலமில்லாத நிலையில், பதுங்கிப் பாய்வது, பக்கங்களில் சாடுவது. சுழன்று அடிப்பது... ஆனல் பேடித்தனமாக வஞ்சகத்தால் வீழ்த்துவதல்ல...

அர:—எம் அரசாங்கத்தின்மீது மறவர்களின் மாற்சரியத்திற்கு காரணம் என்ன ?

சூரு:— ஆச்சரியம் தங்கள் ஆதிக்கத்தால் நசுக்கப்பட்டவர்கள், தேசத்துரோகிகள் என துரத்தப்பட்டவாகள், முதலாளித்வ முதலைவாயிலிருந்து தப்பியவர்கள் மலைக்காட்டில் தஞ்சம் புகுந்தனர்; மரகதமலை தஞ்சமளித்தது. அவர்கள் வஞ்சம் தீர்க்கின்றனர்.

தள:— ராஜத் துரோகிகளின் அட்டகாசம் சகிக்க முடிய வில்லை. அவர்கள் கொட்டத்தை அடக்கும்முயற்சியில் முதல் வெற்றி· இச்சூறுவளிக் கைதி...

சூறு:— உங்கள் ஆதிக்கத்திற்கு அழிவுக்காலம் கிட்டி விட்டது. மீளாப்பகையைத் தேடிக் கொண்டீர்கள் உடலில் உயிர் இருக்கும் வரையில் ஒவ்வொரு மறவனும் வெறி கொண்டு போராடுவான். அவ் வீர மணிகளின் சாகசத் திற்கு நீவிர் எம்மாத்திரம். உளுத்துப் போனக் கட்டுப் பாட்டில், அதிகாரச் சின்னங்களை தந்திரச் சேற்றால் குழைத்து உருவாக்கப்பட்டிருக்கும் உமது ராஜீயக் கோட் டை இடித்துத் தகர்த்துத் தரை மட்டமாக்கப்படும். அர சனை தெய்வீகப் பிறவி, என்று மதித்த காலம் மலையேறி விட்டது. மக்கள் ஒரு காலத்தில் விட்டுக் கொடுத்த உரி மைகளைப் பெற்றே தீருவார்கள். அவர்கள் செய்கின்ற கிளர்ச்சியால், எழுப்புகின்ற உணர்ச்சியால் ஓங்கும் புரட் சித்தீயில் உங்கள் ஆணவம் பொசுங்கிவிடும் ஆட்சி குலைந்து விடும். அதிகாரம் பறிக்கப்படும். மலையைத் தலையால் மோதி தகர்க்க முனைவது போல் ஜனசக்தியை நசுக்க கனவு காண்கிறீர்கள். பலிக்காது. மக்கள் இவ்வுலகத்தை மறந்து மறு உலகத்திற்கான பக்தி முயற்சியில் நேரத்தையும், நினை வையும் செலவழித்த காலம் சென்று விட்டது தாங்க முடியாத தொல்லைகளால் தட்டி எழுப்பப்பட்டிருக்கிறார் கள். தன்னம்பிக்கையோடு விழித்திருக்கிறார்கள்.

புலி:— மறவர்களின் ஒப்பற்ற தலைவனை, கைது செய்து விட்டதாக மனப்பால் குடிக்க வேண்டாம். அவர் மயிர்க் காம்பில் ஒன்று உதிர்ந்தால் மன்னவா உன் குருதி மண் ணிற் சிந்தும்.

அர:— தளபதி! அடிப்பட்ட நாய்கள் குரைக்கின்றன. பாதாளச் சிறையில் தள்ளிப் பாடம் புகட்டுக!

# களம் 20.

இடம் :— சந்திரவதிக்கோட்டை

காலம் :— அந்தி

மாந்தர் :— அமரன், சிங்கன்

[அமரனும் சிங்கனும் மாறு வேடத்தில் தலைச்சுமையுடன் கோட்டைக்குள் நுழைகின்றனர்]

**கோட்டை—காவலன்-1:**— டேய் கூடை !

**கோ-கா-2:**— எங்கே? அந்திப்பட்டு இந்நேரத்திற்குமேல்?

அம:— அரமணைக் குதிரைக்குக் கொள்ளு... கொண்டு போரோம்...

கா-1:— சர்க்கார் கோழி முட்டையோ !

கா-2:— அப்ப சரி போ போ...

சிங்:— இல்லாட்டி நின்னுடவா போறோம்...

திருப்புக் காட்சி

★

நள்ளிரவில் சிறைச்சாலையின் மேல் தளத்தில் இரண்டு முகமூடி வீரர்கள் சுற்று முற்றும் பார்க்கின்றனர். கத்தியை வாயில் கவ்விக்கொண்டு நூலேணி வழியாக உட்புறம் (அமரன்) ஒரு உருவம் இறங்குகிறது. சிறைக்காவலன் தூங்கி வழிந்து கொண்டு கையில் விளக்குடன் ரோந்து

வருகிறான். அமரன் அவனைத் தாக்கி, விஷ மூலிகையை மூக்கில் காட்ட அவன் மயங்கி விழுகிறான். அமரன் அவனது உடைகளைக் கழட்டித் தானணிந்து கொண்டு சிறைச் சாவியை எடுத்து வந்து, தலைவனையும் புலிக் கண்ணனையும் வெளிப்படுத்தி, சிறைக் காவலனை உள்ளே தள்ளி பூட்டி விட்டு வெளி யேறுகின்றனர். வேறு வழியில்லாமல் கோட்டை வாயிலுக்கு வருகின்றனர். இன்னும் பொழுது விடியவில்லை யாதலால் கதவு அடைக்கப்பட்டிருக்கிறது. அமரன் கதவு திறந்து விடுமாறு காவலனை வேண்டுகிறான்.

புலி:— அண்ணே எழுந்து கதவைத் திற ...

கா:— யாரைய்யா... சூரியன் தலை காட்டுமுன் தொந்தரவு செய்ய வந்திட்டியே!

புலி:— அவசர ஜோலி. அசலூர் போகணும் ... திட்டி வாசலத் தெறந்தா போதும்...

கா:— அதெல்லாம் இப்ப முடியாது....நல்லா விடியட்டும்....

புலி:— ஐயா! துட்டு வேணுனாலும்...

கா:— அட! பெரிய காசுக்காரன் போலிருக்கு... பிச்சக் காசு வாங்கிற எச்சப் பொறுக்கின்னு நெனச்சே...(எழுந்து உட்காருதல்)

சிங்:— அப்படி யாரு நெனைச்சா ... சும்மா சொல்லிப் பாத் தோம்....

அம:— என்ன உறக்கமா...? சர்க்கார் வேலை எழுந் திரு....ம்....

கா:— (கண்ணைக்கசக்கிப் பார்க்கிறான் (அமரன்) அரசாங்க உடையிலிருப்பதால் நம்பிக்கை கொண்ட காவலன் அமர னிடம் சாவியைக் கொடுத்து)

வெள்ளி முளைச்சிடுச்சாண்ணே!... இந்தா சாவி .. திட் டிக்கதவ தெறந்து பூட்டெ அதிலேயே பூட்டிட்டு சாவிய இப்படி போட்டுட்டுப் போண்ணே (படுத்துக்கொள்ளுதல்)

(அமரன் கதவைத் திறக்கிறான் சூறாவளி, சிங்கன் புலிக்கண்ணன் ஆகியோர் வெளியேறுகையில் சில வீரர்கள் 'விடாதே பிடி' 'விடாதே பிடி' என அலறிக்கொண்டு ஓடி வருதல். அதற்குள் அமரன் கதவைப் பூட்டி விட்டு கூட்டத்தில் கலந்த வண்ணம் நகருக்குள் ஓடி விடுதல். வெருண்டு எழுந்த காவலாளிகள் தூக்க மயக்கத்தாலும் இருளாயிருந்ததாலும் தெரியாமல் ஒருவரை ஒருவர் திருடனென்று இருக்கி பிடித்துக்கொள்ளல். தீவட்டியுடன் வந்த வீரர்கள் காவலர்கள் கட்டிப் புரள்வதை வெளிச்சத்தில் பார்த்துவிட்டு)

வீரர்கள்:— எங்கே? எங்கே? நிறுத்துடா நிறுத்துடா.... அவர்கள் எங்கே?

கா:—(சண்டையை நிறுத்தி விட்டு ஒருவருக்கொருவர் திகைப்படைகின்றனர்) ஐயோ!...

வீர:— அடே! கைதிகள் எங்கே?

கா:— கைதிகளா! அவன்களே உங்க ஆள்தானே திறந்து விட்டான்.

வீர:— அடடா அவன்தான் கைதி... அந்தப் பயலுமா?

1-கா:— இல்ல இல்ல அதோ ஓடுறான் அதோ ஓடுறான்....

2-கா:— எங்க சாவியும் போச்சே!

1-கா:— ஏண்ணெ ஔறே... பூட்டு கதவிலே இருக்கு... இங்க வந்து தானே அவன் தெறக்கணும் அப்ப புடிச்சுடுவம்...ம்...

2-கா.— தம்பி! கதவும் பூட்டிருக்கு.... அவன் வெளியே எப்புடி போமுடியும்? நிச்சயம் சிக்கிக்குவான்.

1-கா:— சரி... பயப்படாமயிரு... புடிச்சுடுவோம்...

## திருப்புக் காட்சி

★

(அமரன் வழியிலுள்ள குடுகுடுப்பைக்காரன் குடிசைக்குள் ஒளிதல்)

குடுகுடுப்பைக்காரன்:— யாரடா இம்மா பதட்டமா பூர்ச்சது? எங்காவது மூட்டை வச்சிருக்கவன் வீடாபாருடா...

அம;— ஆபத்து! ஆபத்து! காப்பாத்தணும் ஜக்கம்மா மீது ஆணை. நானும ஏழைதான்.

குடு:— அட எழவே! சாமிய வேறு இழுத்து தொலைக்கிறியே!

வீரர்கள்:—(அவ்வழியாக)இந்தப் பக்கம்தான் ஓடு ஓடு... நிக்காதே!

வீர;— (கடைசியில் மெதுவாக ஓடுபவன்) காலங் காத்தால காலும் ஓஞ்சுப் போச்சு...

(குடு குடுப்பைக்காரன் தன் உடைகளைத் தந்து மாறு வேடத்திற் செல்ல உதவுதல்... அமரன் குடுகுடுப்பை அடித்துக் கொண்டு வெளி வருகிறான்)

அம:— மயான ருத்ரா... மாமுண்டி ஐயா, தொட்டியத்துச்சின்ன, ஒட்டி, மலையாளம, ஒன்பது கம்பளம... ஜல் ஜக்கம்மா தேவி ஓடிவாடி... ஓடிவாடி... ஒரு சேதி சொல்லு... ஒரு சேதி சொல்லு...(குடு) ராஜாங்க விருந்து சதாரா நடத்தி தந்திரமா பிடிச்ச பறவை பறந்திடுச்சு... பறவை பறந்திடுச்சு... காலங் காத்தால காவலர்க்கு வேலை... காவலர்க்கு வேலை... தேடிப்பிடிக்க தெருவெல்லாம் சுத்துராங்க...! தெருவெல்லாம் சுத்துராங்க... உதிரக் கருப்பா ஓய்யாரக் கருப்பா உருமாறிப் போச்சுடா... உருமாறிப் போச்சுடா...

(வீரர்கள் சோர்ந்து குறுக்கிடல்)

அதிகார வர்க்கம் அமுலா வருது.. அமுலா வருது... உத்தியோகப் பட்டம் ஒசந்து வருது... ஒசந்து வருது... ஜல் ஜக்கம்மா நல்ல வாககு சொல்லடி நல்ல வாக்கு சொல்லடி... அதிகாலை நேரம்... இல்லேங்காம, ஏதாவது போடுங்க எஜமான மாறே எஜமான மாறே... ஏழுமினியா... எளைய மினியா ஏங்காத மினியா... தூங்காத மினியா... (வீரர்கள் போய் விடுகிறார்கள்) போவோம் மேலே... போவோம் மேலே...

## களம் 21.

இடம் :— அமர பவனம், ஆஸ்ரமம்

காலம் :— காலை

பாத்திரர் :— அமரன், கமலம், மாணவிகள்

[(கமலம்)—பவனத்தலைவியும் மாணவிகளும் காலைவணக்கம் செய்து கொண்டிருக்கின்றனர்)

வணக்கப் பாடல்

(அமரன் அவ்வழியாக வருதல்) —தன் பெயர் எழுதிய பலகையை நோக்கி—

அம:—படபத்ர காளி ... ரணபத்ர காளி ...பச்சைக்காளி —பவளக்காளி—ஓங்காரக்காளி — ரீங்காரக் காளி— ஒய்யாரக்காளி—ஜல் ஜக்கம்மா — நல்ல சேதி சொல்லடி... நல்ல சேதி சொல்லடி—பார்த்த முவந்தான் (கமலம் கவனிக்கின்ருள்) பளகின முவந்தான்—முன்னபின்ன நடந்ததெல்லாம் ஒண்ணொண்ணுத் தெரியுது .. ஒண்ணொண்ணுத் தெரியுது .. நல்ல வயசுப் பிள்ளை—ஆனல் வளர்ப்புத்தான்—ராசாங்க துரோகின்னு நாடு கடத்தினுங்க— கால வித்தியாசம் இப்ப கோலம் மாறி வந்திருக்கு— கோலம் மாறி வந்திருக்கு—

கம:— அமரனு !

அம:— ஆம். ஆபத்து !

கம:— ம்— உள்ளே வா—வேற்று மனிதர் யாருமில்லை பயமில்லாமல் தங்கலாம்—

(அமரன் உள்ளே நுழைந்து சாதுக் கோலத்துடன் வெளிவருதல்)

அம:— இதெல்லாம் என்ன புதுமை ?

கம;— ஆம்! எல்லாம் தங்கள் கருணைத்திறம்தான்.

அம;— அப்பாவும்—இங்குதானே ?

கம :— கடைசி நேரத்திலும் தங்கள் பெயரைச் சொல்லிக் கொண்டேதான் உயிரை விட்டார்—

அம:— இறந்துவிட்டாரா? அவரது வயோதிகப் பருவத்தில் உடனிருந்து தவக் கொடுத்துவைக்க வில்லையே !

கம:— சதா தங்கள் பேச்சுத்தான்

அம:— அவர் இந்த துன்ப உலகிலிருந்தே விடுதலை பெற்றுவிட்டார். அவர் ஆத்மா சாந்தி அடையட்டும்; (கைகுவித்தல்)

கம: –தாங்கள் என்னை மன்னிக்கவேண்டும். அப்பொழுது தான் என் மனம் நிம்மதி அடையும்—

அம:— அப்படி என்ன தவறு செய்துவிட்டாய்? தக்க சமயத்தில் தஞ்சமளித்த உனக்கல்லவா நன்றி செலுத்த கடமைப்பட்டிருக்கிறேன்.

கம:— இல்லை--அன்றிரவு—தங்கள் அறவுரைகளை மதிக்காது என் உணர்ச்சி வெறியில் ஏதேதோ பேசிவிட்டேன்

அம:— அட பயித்தியமே !

கம;— பிறகு, தங்கள் போதனை என்சிந்தையைத் தெளிய வைத்தது. தங்கள் நினைவாகவே இந்தபவனத்தை ஏற்படுத்தி ஏதோ தொண்டு செய்து வருகிறேன்.

அம;— நல்ல சேவை ; மாசற்ற தொண்டு. பிள்ளைகளுக்கு என்னென்ன பயிற்சி தரப்படுகிறது ?

கம:- இயல், இசை, கூத்து முதலியன . . .

(ஒரு மாணவி பழத்தட்டுடன் வந்து விருந்தினரை உபசரித்தல்)

கம :- தங்களை உபசரிக்க இந்த பவனம் என்ன புண்ணியம் செய்ததோ !

அம:- (பழங்கொணர்ந்த மாணவியைப் பார்த்து) உன் பெயர் என்னம்மா ?

மாணவி:— வாணி.

அம:— அழகான பெயர் ; பாடத் தெரியுமோ ?

வாணி:— ஓ ! நன்ருகப் பாடுவேன். ஆடக்கூடத் தெரியுமே !

அம:— என்னென்ன பாட்டுத் தெரியும் ?

வாணி:- பாரதியார் பாடல், பாரதிதாசன் பாடல். வேதநாயகம் பிள்ளைக் கீர்த்தனை —

அம .- தமிழிசை மாத்திரம்தான் சொல்லிக்கொடுக்கிருப் போலிருக்கு . .

கம;- பின்னை என்னவாம்? அர்த்தம் தெரியாமல் இசைத் தட்டு மாதிரி ஓசையை மாத்திரம, சொல்லக் கற்றுக் கொடுக்க வேண்டுமோ ?

அம ;- அவைகளில் எவ்வளவோ விஷயம் இருப்பதாக சொல்வாங்க ! ராகம் தாளம் எல்லாம் சாமான்யமா ? வேற்று மொழி என்பதற்காக விட்டுவிடலாமா ? (புன்னகை)

கம;- ராகத்திற்காக என்ருல் ஆர்மோனியம், பிடில், நாதசுரம், இதெல்லாம் வாசித்தால் விளங்காதா?—ராக தாள உணர்ச்சியும் இருக்கத்தான் வேண்டும். அதோடுகூட பொருளுணர்ச்சி ரொபப ரொம்ப முக்யமல்லவா? வைகின்ருளு ? வாழ்த்துகின்ருளு என்பது தெரியாமல் என்ன இசை வேண்டியிருக்கு ?

அம:— இயல் துறையில் எப்படியோ ?

கம:— குறள் சங்க நூல்கள்.

அம:— அதெல்லாம் இளம் பிள்ளைகளுக்குப் புரியுமா?

கம:— சொல்லிக் கொடுப்பதில் இருக்கு... அவர்களுக்கு தெரிந்த விஷயத்தை முதலில் எடுத்துச் சொல்லி, பிறகு பாட்டில் வந்திருக்கும் செய்தியை தொடர்பு படுத்திக் காட்டினால் புரிந்து கொள்ளுகிறார்கள். பின்னர் அந்தப் பாடலை இசையோடு சொல்லும் போது, நன்றாக ரசிக்கிறார்கள். கடைசியில் பதம் பிரித்துச் சொன்னால் எளிதாகக் கற்றுக் கொள்ளுகிறார்கள்.

அம:— புராண இதிகாசங்களில் மாதிரிக்கு ஏதாவது...

கம:— கிடையாது... அதெல்லாம் பிள்ளைகளின் தன்னம்பிக்கையை இழக்கச் செய்வதோடு கடவுளே இவ்வளவு பெரிய தவறுகளையெல்லாம் செய்திருக்கிற பொழுது நாம் செய்தால் என்ன? என்கிற வகையில் தீய நினைவுகள் வளர இடமாகிவிடும்.

அம:— சீர்திருத்தக்காரரின் மகளல்லவா!...... மிகவும் நல்ல முறைகளைக் கையாளுகிறாய். இந்தக் குருகுலம் பேரும் புகழும் பெற்று சிறந்து விளங்கும்.

கம:— எல்லாப் பெருமைகளும் தங்களுக் குரியதே! அதிருக்கட்டும்... தங்கள் இடைக்கால வாழ்க்கை எவ்வாறு சென்றது....?

அம:— மரகதமலை புகலளித்தது. புரட்சி வீரன் சூறுவளியின் போராதரவு கிடைத்தது... தலைவர் என் வருகையைப் பெரிதும் எதிர்பார்த்திருப்பார். இன்றிரவு, எப்படியாவது சென்றாக வேண்டும்.

கம:— அதெல்லாம் முடியாது. அடிகள் சில நாளாவது அதிதியாகத் தங்கித்தான் செல்ல வேண்டும் வரப் போகிற ஆண்டு விழாவிலும், பங்கெடுத்துக் கொள்ள வேண்டும்

அம:— அதற்கென்ன! இனி அமரபவனம் நம் சுதந்திரக் கோட்டையாக விளங்கும்...

●

# களம் 22.

இடம் :— மரகத மலைச்சாரல்

காலம் :— மாலை

மாந்தர் :— மலைவாணர்

தூரு:— மறவர்காள்! அவ்வஞ்சகப் பதர்களை நினைத்தால் நெஞ்சம் குமுறுகின்றது. பழி தீர்க்கப்படும் வரை என் விழி துயிலாது. அவர்களின் கொக்கரிப்பும் கோலகாலமும் குலைக்கப்பட வேண்டும். அத்துரோகி தளபதியைச் சித்ர வதை செய்யவேண்டும். ராஜ தந்திரம் பேசினன். ராஜ தந்திரம். கொடுவாளினை எடுங்கள்! அக் கொடுங்கோல ரின் உயிர் குடிப்போம். புரட்சித் தீயினை மூட்டுங்கள்! அப்புல்லர்கள் பொசுங்கட்டும். அப் பணப்பேய்களின் பிணங்களை நாயும் நரியும் ருசி பார்க்கட்டும். பெருகும் உதிர வெள்ளத்தில் நீந்தி விளையாடலாம். ஏழைகள் உழைப்பின் உரத்தால், துயரக் கண்ணீரால் தழைத்த சர்வாதிகாரத்திற்குச் சாவு மணி அடிப்போம்...

சிங்:— மணி அடிக்க நானிருக்கேன். கவலைய விடுங்க.

அம:— தலைவ! மன்னிக்க வேண்டும். இளையேனின் கருத்தை சிந்தித்துப் பாருங்கள். நமக்கும் சந்தர்ப்பம் கிடைக்கும். தக்க சமயத்தில் பாடம் புகட்டுவோம். அரசாங்க நிர்வாக யந்திரத்தின், அச்சாணியை முறித்து, ஆட்சியைக் குலைத்து முடிஅரசிற்கு ஓர் முடிவு கட்டு வோம். அதற்கானத் திட்டங்களை வகுத்திருக்கின்றேன்.

அதை நிறைவேற்றுவதற்கான, முன்முயற்சிகளைத் திறம்பட்ச் செய்வோம். தலைநகரில் நம் காரியங்களை நடத்த அமரபவனத்தை உபயோகப்படுத்திக்கொள்ளலாம்.

சிங்:— ஆஸ்ரமமா! நான் பிரமச்சாரியாச்சே வர்லாமோ?

நரி:— அரசாங்கத்தின் பார்வை அங்கு செல்லாதா?

அம:— அது சோலையிலே உள்ள ஒரு சாதாரணக் குடிசை.

புலி:— தக்க பாதுகாப்புள்ள இடமாகப் பார்க்கவேண்டும்.

அம:— ஆஸ்ரமம் என்ற பெயரே பெரிய பாதுகாப்பு. அங்கிருந்துகொண்டு எவ்வளவு பெரிய ரகசியத் திட்டங்களையும் நடத்தலாம். யாரும் சந்தேகிக்கமாட்டார்கள். உண்மையிலேயே கலை நிலவும் இடமாதலால் அந்தக் கொலைவெறியர்களின் கவனம் அங்கு செல்வதில்லை. நான் அங்குத் தங்கி நிலைமையைப் புரிந்துகொண்டுதான் வந்திருக்கின்றேன்.

சூரு:— செய்யவேண்டிய காரியங்கள் என்னவோ?

அம:— சமீபத்தில் அங்கு ஆண்விழா நடத்த இருக்கிறது. அதில் நாம் பங்கெடுத்துக்கொள்ளவேண்டும். பிறகு, நம் சந்தர்பத்திற்கேற்ப, நம் லட்சியத்திற்கான காரியங்களைச் செய்யவேண்டும்,

சூரு:— நல்லது! அமரன் திட்டப்படியே முயற்சிப்போம் முடியாத நிலையில் இருக்கவே இருக்கின்றது தோளும் வாளும்.

# களம் 23.

இடம் :— அமர பவனம்

காலம் :— பிற்பகல்

மாந்தர் :— பவனத்தார், பொதுமக்கள்,
விரிவுரையாளர்கள்.

● அமரபவனத்தில் ஆண்டுவிழா நடைபெறுகிறது. சூருவளி கிழவேடத்தில் தலைமை தாங்குகிருர். அமரன் துறவிக்கோலத்தில் இருக்கிருன் கன்னியும் விழாவில் கலந்து கொள்கிருள். கூட்டம் நிறைந்திருக்கின்றது.

தமிழ் வாழ்த்து

(வாணி வாழ்த்துப் பாடுதல்)

இராகம்-காபி] [தாளம்-ஆதி

பல்லவி

ஈடிலா உயர் வாழ்க்கையி லேயே
இன்பந் தருபவள் செந்தமிழ்த் தாயே (ஈடிலா)

அனுபல்லவி

கோடி நூலெமக் கீந்தவள் நீயே
கூறிடில் இயலிசை இனிக்குமெம் வாயே (ஈடிலா)

சரணம்

சிலம்பொடு மேகலை சிந்தாமணியே
திருக்குறள் முதலாம் எந்தாய் அணியே
நிலம்பெயர்ந் தாலும்நெறிபிற ழாதவள்
நேர்மையும் வீரமும் எமக்களித் தாளவள் (ஈடிலா)

(விமலா வரவேற்புப் படிக்கின்ருள்)

விமலா:— பெரியோர்களே! வணங்குகின்றேன். எங்கள் அமரபவன ஆண்டுவிழாவிற்கு நீங்கள் எல்லோரும் வந்திருப்பதற்காக மகிழ்கின்ருேம். தலைவர் அவர்களுக்கு அன்பின் அறிகுறியாக இந்த மலர்மாலையைச் சூட்டுகிறேன் ஐயா அவர்கள் விழாவைச் சிறப்பாக நடத்தி வைப்பார்கள். நாமெல்லோரும் அமைதியாக இருந்து கேட்போமாக! (வணங்குதல்)

தலைவர்;— என் தாய்நாட்டு மக்களே! வணக்கம். இந்த விழாவிற்குத் தலைமை தாங்கும்படியான பெருமையைத் தந்த பவனத்தார்க்கு என் மனதுவந்த நன்றியை உரிமைப் படுத்துகின்றேன். வருங்காலப் பெருமக்களாகிய இளங்குழந்தைகளின் அன்பு மொழிகளை இதுவரைக்கேட்டு இன்புற்ருேம். வயதுமுதிர்ந்த கிழவனுகிய நான் என் பழைய நினைவுகளில் சிலவற்றைச் சொல்ல விரும்புகின்றேன். அந்தக் காலத்தில் இன்றுபோல் உயர்ந்த கட்டிடங்களில் கலாசாலைகள் இல்லை. திண்ணைப் பள்ளிக்கூடம் தெருக்கள்தோறும் உண்டு. ஆனல் இன்றுபோல தற்குறித்தனம் தாண்டவமாடவில்லை. அழகான அச்சுப்புத்தகங்களைப் பார்த்ததில்லை. பனை ஓலைதான்.—இருந்தாலும் எண்சுவடிமுதல் இலக்கிய வரிசைவரை அநேகமாக ஒவ்வொருவரும் கற்றிருந்தனர். ஊருக்கு ஊர் ஆசிரியர்கள் இருந்தனர். அவர்களுக்கு அபார மதிப்பு. அவர்களின் குடும்பச்செலவு முழுவதையும் கிராமத்தாரே கவனித்தனர். ஆனல் இப்பொழுதோ, வயிற்றுக்குப் போதாத ஊதியத்திற்கும் உழைக்கின்றனர். இந்த நிலையில் கல்வி எப்படி வளமாக இருக்கமுடியும்? பிள்ளைகள் தேகபலத்தில் திடமாகவும், வீர உணர்ச்சி உள்ளவர்களாகவும் இருந்தனர். இப்பொழுது வீரம் எங்கே இருக்கிறது தெரியுமா? மருந்

துக் கடையில். அன்று அறிவிற்காகப் படித்த சமூகம் இன்று வாழ்க்கைப் பாட்டிற்காகப் படிக்கின்றது என்னவோ கிழவன் பழமை பேசுகிருன் என்று எண்ணு கிர்கள். உங்கள் ஊரில் ஓடும் நதியைப்பற்றி பிள்ளைகள் படிக்கின்றனரா? வேறு கண்டத்திலோடும் ஆறுகளைப் பற்றி விரிவாகக் கற்கின்றனர். நமது ஊரில் நடந்த சரித்திரம் தெரியாது. வெகுகாலத்திற்குமுன் வேறு தேசங்களில் நடந்த செய்திகளை விளக்கமாகப் படிக்கின் றனர். தினசரி வாழ்க்கைக்குத் தேவையான செய்தி களைத் தெரிந்துகொள்வதில்லை. பள்ளிக் கணக்கு புள் ளிக்கு உதவாது என்ற பழமொழிக்கு இலக்காக படிப்பு முறை இருக்கிறது, அப்பழிமொழியைப் போக்க இது போன்ற குருகுலங்கள் பல தோன்றிச் சேவை செய்ய வேண்டும், இந்த மகத்தானத் தொண்டினை மேற் கொண்ட அமரபவனம் சிறந்து விளங்க யாவரும் ஆத ரிக்க வேண்டுகிறேன். (வணங்குதல்), அடுத்தபடியாக துறவி அமரானந்தர் பேசுவார்,

அமரா:— வணக்கம்! நம் நாடு புண்ணிய பூமி. பொன் விளையும் நிலம். வற்ருத ஜீவநதிகள் வளங் கொழிக் கின்றன. நாட்டு மக்களோ தருமசீலர்களின் பரம்பரை. நமது மதங்களோ அன்பினை அடிப்படையாகக் கொண்ட டவை. ஆனல் தெய்வங்கள் திருவிளையாடல் புரிந்த திவ்ய தேசத்தில் தெருக்கள்தோறும் சட்டியும் கையு மாகக் கஞ்சிக்குக்கெஞ்சி நிற்கின்றனரே! அழுக்கேறிய பொத்தல் கந்தை அணிந்த அரை நிர்வாணிகள் வீதி களில் நடமாடுகின்றனரே. பலர் மாக்கட்டைபோல் மண்ணில் உருண்டு கிடக்கின்றனரே! அங்க ஹீனர் களின் கோரக் காட்சிகள் சகிக்கக் கூடியனவா? அவர் களும் மனிதப் பிறவிகள்தானே! இந்நாட்டிற்கு உரிய வர்களல்லவா? ஏன் இந்தக் கதி? இந்தப் பரிதாப

கரமான நிலை மாற்றி அமைக்கப்பட வேண்டாமா? அரசு சரிவர நடக்குமானல் இந்தமாதிரி இழிநிலைக்கு இடமுண்டா? தருமச் செலவிற்கென விடப்பட்ட மூல தனங்கள் தனி மனிதர்களின் கையில் முடங்கிக்கிடக் கின்றனவே! மதத்தின் பெயராலும் தெய்வங்களின் பெயராலும் ஒதுக்கப்பட்ட மானியங்களை ஒரு சிலர் உண்டு கொழுக்கின்றனரே! அரசாங்கம் விரும்பினல் கணக்கெடுத்து அதன் வருவாயை ஒருவழிப்படுத்தி இவைபோன்ற அவதிகளைப் போக்கப் பயன்படுத்த முடி யாதா? மார்க்கமுண்டு. ஆனல் மனதில்லை. என்ன? முறை இருக்கின்றது ஆனல் முயற்சியில்லை — என்ன? அரசாங்கத்தை இடித்துக் கூறுவதாக எண்ணுகிறீர் களா? சிந்தித்துப் பாருங்கள். சீர்திருத்தங்களை அர சாங்கம் செய்யத் தயங்கினல் அரசாங்கத்தையே சீர் திருத்துவோம். வணக்கம்.

சூரு:— துறவிக்கு வேந்தன் துரும்பு என்ற முறையில் பேசக் கேட்டோம். அடுத்தபடியாக பெண்மையின் நில கும் திருமதி கன்னி அவர்கள் பேசுவார்கள்.

கன்னி:— தோழர்களே! வணக்கம். ஆண்டு விழாவிலே கலந்துகொள்ள சந்தர்ப்பம் அளித்த அன்பர்கட்கு நன்றி. நமது ஏடுகளிலே பெண்மையின் பெருமை விரிவாகப் பேசப்பட்டிருக்கிறது. ஆனல், சமுதாயத்தில் பெண்க ளுக்குள்ள இடம்யாது? ஆணுக்கு ஒரு நீதி! பெண்ணுக்கு ஒரு நீதி! நமக்குச் சொத்துரிமையில்லை. சுதந்திரமாவது உண்டா? விலங்கினுங் கேடாகத் தாய்க்குலத்தை நடத்து கின்றனர். பெண்ணின் உடம்பிற்கும், புடவை நிறத்திற் கும் பொருத்தம் பார்க்கின்ற அளவில் கொஞ்சமாவது மணமக்களின் மனப் பொருத்தத்தைப் பார்க்கின்றனரா? எந்த வாலிபனவது கிழவியை மணந்திருக்கிறுனு?

ஆனால், ஆயிரக்கணக்கான இளங்குமரிகள் கிழவர்களின் விளையாட்டுப் பொம்மைகளாக்கப்படுகின்றனரே! ஒரு ஆடவன் ஒருத்தி இருக்கும்போதே பலரை மணந்துகொள்ளலாம். ஆனால் கணவனை இழந்த கட்டிளம்மங்கை வேறொரு காதலனைக் கைபிடித்தல் தவறென சாஸ்திரம் பேசுகின்றனரே! கற்பென்பது, பெண்களுக்கு மட்டுந்தான் பேச வேண்டிய ஒன்று? ஆண்களுக்கு அது விதிவிலக்கா? என்னே அநீதி! இந்த நிலைமையை மாற்றி அமைக்க வேண்டாமா? பெருமக்களே! பெண்ணடிமை தீருமட்டும் இந்நாட்டிற்கு முன்னேற்றம் என்பது முயற்கொம்புதான். பெண்மைக்குரிய மதிப்பளிக்கப்பின்வாங்காதீர்கள். பெண் குலமே! நீவிர் நலம்பெற, ஆவனசெய்ய முன்வாருங்கள். வணக்கம்.

சூரு:—தாய்க்குலத்தின் வீரமுழக்கம் கேட்டோம். ஆட்சியின் அவலத்தை அறிஞர்கள் உரைக்கக் கேட்டோம். அதற்கான வகையில் ஒன்றுபட்டுழைக்க உறுதிகொள்வோமாக! இந்த அளவில் விழா இனிது நிறைவேறுகிறது.

கம:—விழாவினை வெற்றிகரமாக நடத்திக்கொடுத்த அறிஞர்களுக்கும், வந்திருந்து சிறப்பித்த பெருமக்களுக்கும் எங்கள் மனமார்ந்த நன்றி......



## களம் 24.

இடம் :— தர்பார்

காலம் :— முற்பகல்

மாந்தர் :— அரசன், பிரதானியர்

அர:— பிரதானிகளே! அன்று அம் மலை எலிகள் மறைந்த மாயம் மிகவும் விந்தையே! என்னே நம் காவல் கட்டு. கோட்டைக் கொத்தளம். நம் திட்டமெல்லாம் குட்டிச்சுவரானதே! நாம் ஆளப்பிறந்தோம். அடங்கி நடக்கும் புத்திகெட்ட பொருமைப் பேய்கள் குற்றம் சாட்டுகின்றார்கள். மன்னன் மகாவிஷ்ணுவின் அம்சம் என்ற மகோன்னத உண்மையை உணராத காலிகள், என் பரம்பரை உரிமையில் பங்கு கேட்கிறார்கள். என்னே காலம். பொதுமக்களைத் தூண்டும் அதிகப்பிரசங்கிகளை நசுக்க வேண்டும். ராஜபக்தியற்ற துரோகக்கும்பலை ஒடுக்கவேண்டும்.

தள:— முளையிற் கிள்ளவேண்டியதை வளரவிட்டாயிற்று. சாம பேத தான தண்டோபாயங்களைக் கையாளத் தயங்கக்கூடாது.

அர:— அப்புல்லர்களின் நடவடிக்கைகளை ஜாக்ரதையாகக் கவனித்து வரவேண்டும்.

தள:— அரசே! அதற்காகத் தாங்கள் பெரிதும் மனம் தளர்வது ஏன்? தங்கள் உப்பைதின்று உடல்வளர்க்கும் என்போன்றார் பொறுப்பல்லவா அது?

மதி:— அரசே! மன்னிக்கவும், அமைச்சனென்ற முறையில் சில உண்மைகளைக் கூறவேண்டியவனாக இருக்

கிறேன் அடக்குமுறையால் ஒரு நாட்டை நெடுங்காலம் அமைதியாக ஆளமுடியாது. என்றேனும் ஒருநாள் எதிர்ப்புசக்தி வெளிப்பட்டு எதேச்சாதிகாரத்தைக் குலைத்து விடும். அதனை எந்தவித உபாயங்களாலும் தடுத்து நிறுத்திவிட முடியாது. மக்கள் அல்லல்பட்டு ஆற்ருது அழுகின்ற கண்ணீரே அரசுகளைத் தேய்க்கும்படை. நமது மதிப்பைவிட மக்களின் நலமே பெரிது தேசத்தை ரணகளமாக்கவேண்டாம். பொறுப்பாட்சி ஏற்படுத்திஞல் எல்லாம் சரியாகிவிடும். நன்ருக சிந்தித்து முடிவு செய்யுங்கள். அவசரம் வேண்டாம்.

தள:— இதெல்லாம் கையாலாகாதவர்கள் கையாளும் முறை. நம்பீரங்கித் துப்பாக்கிகளுக்கு ஏதாவது வேலை கொடுக்கவேண்டாமா? அவைகளை சும்மா துருப்பிடிக்க விடுகிறோம் என்பதற்காக அரசியல் கிளர்ச்சிக்காரர்கள் அறியாத பாமர மக்களைத் தூண்டி பலியாக்க முயற்சிக்கிருர்கள்.

கலை:— அரசே! தளபதி அவர்களின் திட்டப்படி குண்டு மருந்தால் குடிமக்களைத் தொலைத்து விட்டு, குட்டிச்சுவர்களை ஆள்வதா? என்ன விபரீத நினைவு! ஏர்முனையில் எழுகின்ற கிளர்ச்சிகள் போர்முனைப் புரட்சியாக உருவெடுத்தால் நிலைமை என்னவாகும்? அதஞல் பல நாடுகளின் கதி மாற்றி அமைக்கப்பட்டிருப்பதை சரித்திரம் பேசுகின்றதே! சோவியா நாட்டின் மாறுதலை நினைத்துப் பாருங்களேன்.

அர:— சிந்தனைக்குரிய ஒன்றுதான்!

தள:— முயற்சி திருவினையாக்கும். பிரித்தாளும் முறையினைக் கையாண்டால்?

அர:— எப்படி ?

தள:— ஒரு சில பிரமுகர்களுக்குப் பொருளாசை காட்டி நம் பக்கம் இழுப்பது. பொதுஜன செல்வாக்குள்ள வேறு சிலருக்கு, உயர்ந்த பதவிகளைக் கொடுத்து, எண்ணத்தை மாற்றுவது. நமது விளம்பர இலாகாமூலம் மதவெறியை ஊட்டி வேற்றுமையை வளர்ப்பது. இப்படியாக மக்களின் ஐக்கியத்தைக் குலைத்து விட்டால் பின்னர் எளிதில் சமாளித்து விடலாம்.

கலை:— மக்கள் மன்றத்தில் நமக்கு மன்னிப்பே கிடைக்காது. பதவிப்பித்தும் தலைக்கேறிய அதிகார வெறியர்கள் என்ற குற்றச்சாட்டுக்கு ஆளாகவேண்டும். மக்களின் உரிமைகளை மறுக்க இதுபோன்ற மதியீனமான முறைகளைக் கையாள்வதா ? நரித்திறங்கள் நம்மை சரித்திரத்தில் கறைப்படுத்திவிடும். அரசே ! இந்த நிலையில் இனி அரசாங்கத்தின் அங்கமாக இருக்க என் மனச்சான்று இடந்தரவில்லை. நான் விலகிக் கொள்ளவே விரும்புகின்றேன்.

அர:— அமைச்சர் கூறியவை ஒப்புக்கொள்ளத் தக்கனவாகவே இருக்கின்றன. மேற்கொண்டு நன்குயோசித்து முடிவுக்கு வருவோம். கலைவாணரே பொறும்.

(தளபதி முகம் சுளித்தல்)

# களம் 25.

இடம் :— தளபதியின் மாளிகை

காலம் :— நள்ளிரவு

மாந்தர் :— தளபதி, (வேலையாள்) அமரன் பெருமக்கள்

தள:—பெருமக்களே! எவ்வளவு பெரிய திடீர் மாறுதல்; இப்படியே விட்டுவிட்டால் நிலைமை என்னவாகும்? அதற்காகவே இந்த நள்ளிரவில்......

பிரபு:—நல்லது! நல்லது! அரசன் இப்படி அந்தர் பல்டி அடிப்பாரென்று நினைக்கவேயில்லை.

ஜமீன்:—எதிர்பாராத போக்கு. மந்திரிகளின் திட்டம் நமமையெல்லாம் பொதுஜனமாக்கிவிடும்.

தள:— ம்... சிந்திக்கவேண்டிய தொன்றும்... மாடமாளிகையும் மண்குடிசையும் ஒன்ருவதா? சமத்துவமாம்... சமத்துவம். பன்னெடுங்காலப் பழக்கவழக்கங்களைப் பழிக்கும் பேச்சு... சமதர்மமாம்...சமதாமம...என்ன அதர்மம்?

மடாதிபதி:—அவனவன் செய்த பாவ-புண்ணியத்தைப் பொறுத்த நியதியை மாற்றி அமைப்பதா?

வணிகன்:— மனம் பதருகின்றது.

ஜமீன்:— எல்லோரும் பல்லக்கேற விரும்பினல் சுமப்பதற்கு ஆள் வேண்டாமா?

தள:— அரசனையும் இந்தப் புதுநோய் பற்றிக் கொண்டதே!

பிர:— எப்படியாவது மன்னனை நம் வழிக்கு இழுத்தாக வேண்டும்.

ஜமீ:— இல்லாவிட்டால் நம் சுகபோக வாழ்வு அஸ்தமித்துவிடும்.

தள:- மன்னனின் புதுமோகம் மாறாது என்றே தோன்றுகிறது. அந்தக் கலைவாணனின் சொல்லினிமையில் தம் சொந்த புத்தியைப் பறிகொடுத்துவிட்டார்.

வணி:— அப்படியானால் நம் உயர்வுகளை எப்படிக்காப்பது?

தள.— அதற்கு ஒரே ஒரு வழிதான் இருக்கிறது.

மடாதி:— என்ன ? என்ன ?

தள;— எதற்கும் மனம் தளரக்கூடாது. தொல்லைகள் அதிகம்.

பிர:— அதனால் எவ்வளவு தொல்லைகள் ஏற்பட்டாலும் சரி, பரவாயில்லை.

ஜமீ, வணி:— எப்படியாவது உரிமைகளை பாதுகாத்தாகணும்.

தள:— எல்லாம் உங்கள் ஒத்துழைப்பைப் பொறுத்துத் தான் இருக்கிறது.

பிர:— மனப்பூர்வமாக உடன்படுகிறோம்.

மடாதி:— இந்த விஷயத்தில் தங்கள் வாக்கே எங்களுக்கு வேதம்.

தள:— ரொம்பவும் யோசித்து இந்த முடிவுக்கு வந்தேன்.

ஜமீ:— தயங்க வேண்டாம். காலதாமதம் கூடாது.

தள;— அதி ரகஸ்யம். இதோ பாருங்கள்.

(திட்டம் வரைந்த கடிதத்தைக் காண்பித்தல்)

ஜமீ:— பேஷ் பேஷ்! பாதி வெற்றி இப்பொழுதே அடைந்த மாதிரிதான்.

மடாதி:— நல்லது நல்லது. இறுதி வெற்றி நமக்கேதான்

வணி.— நல்ல யோசனை. மிக ஜாக்கிரதையாக நிறை வேற்றவேண்டும்.

தள:— நமது அந்தரங்க வேலையாள் மகாசமர்த்தன். காரியவாதி. நம்பிக்கைக்கு உரியவன். அவன் வசம் தான் இதனை...... அமரேசா! இந்தா.

(கடிதத்தை அமரனிடம் கொடுத்து ரகசியமாக காதில் சொல்லுதல்)

பிர;— எல்லாம் உன் சாமர்த்தியத்தைப் பொறுத்து தான் இருக்கிறது.

அம:— என் உயிரே போனாலும் உண்மை போகாதுங்க... காரியம் பலிச்சிட்டா... நம்ம ராஜாங்கத்துலே... தளபதி வேலைய எனக்கு...

தள:— ஆமாண்டா போடா!

ஜமீ;— வழியில் அரசாங்க ஒற்றர் குறுக்கிட்டால்?

தள:— அதற்கென்ன இந்த முத்திரை மோதிரத்தை உபயோகித்துக்கொள். (மோதிரம் தருதல்)

அம:— (அதை வாங்கிப் போட்டுக் கொண்டு) நல்லது. சென்று வருகிறேன்.

பிர:— வெற்றிகரமாகத் திரும்பவேண்டும.

மடாதி:— அஞ்சாமற் செல். வெற்றி நமதே!

(அமரன் போய் விடல்)

தள;— அடிக்கடி நாம் இங்கு சந்தித்து நிலைமையை பரி சீலனை செய்யவேண்டும்,

பெரு:— (யாவரும்) தங்கள் சித்தம் எங்கள் பாக்கியம்.

## களம் 26.

இடம்:— அமரபவனம்

காலம்:— நள்ளிரவு

மாந்தர்;—கமலம், கன்னி, சூருவளி, அமரன் அமைச்சர்கள்

கன்:— தளபதியின் அந்தரங்கக் காரியதரிசியார் ரொம்பப் பரபரப்பாகக் காணப்படுகிறாரே!

கம:— ஏதாவது விசேஷம் இருக்கும்.

சூரு:— ஆள் எந்த நிலையில் இருக்கிறான்?

அம:— இதோ பாருங்கள் (கடிதத்தைக் கொடுத்தல்)

சூரு:— என்ன! நாட்டையே காட்டிக்கொடுக்க முனைந்து விட்டானே நாசக்காரன்.

கன்:— சதிக்கு நீரும் உடந்தை தானே? (அமரனை)

கம:— குற்றவாளியார் கையுங் களவுமாக, மாட்டிக் கொண்டிருக்கிறார்.

சூரு:— அதை அம்பலப்படுத்தி, அந்தச் சொரணைகெட்ட சோற்றுப் பிண்டத்திற்கு பாடம் புகட்டவேண்டும்.

அம:— சரி வாருங்கள். அமைச்சர்களைத் தனிமையில் கண்டு கலந்து பேசுவோம்.

●

திருப்புக் காட்சி (மந்திரி மாளிகை)

அம:— அமைச்சரே! உமது சகா தளபதியாரின் திட்டத்தைப் பார்த்தீர்களா?

கலை:— துரோகி!

மதி:— நாளைய தர்பாரில் சரியான புத்தி கற்பிப்போம்.

கலை:— எவ்வளவு பெரிய மனக்கோட்டை கட்டியிருக்கிறான் மண்ணாசைப் பிடித்த பேயன்.

சூரு:— மேற்கொண்டு நாம் செய்யவேண்டியது என்ன?

மதி:— நாளை தர்பார் வேளையில் தயாராக இருப்போம். அமரேசனைக் கைதியாகக் கொண்டுவரச்செய்து அரசன் முன்னிலையில் சதியை அம்பலப் படுத்துவோம்.

# களம் 27.

இடம் :— தர்பார்

காலம் :— முற்பகல்

மாந்தர் :— அரசன், பிரதானியர், மல்லவாணர்கள்

மதி:— அரசே! காட்டாற்று வெள்ளத்தால் பாதிக்கப் பட்ட கிராமவாசிகள் வரிவஜா கோரி விண்ணப்பம் செய் திருக்கின்றனர்.

அர:— கவனிப்போம்!

கலை:— அரசாங்கம் நிவாரண முயற்சியும் எடுத்தாக வேண்டும்.

தள:— புதுவித யுத்ததளவாடங்களை தருவிக்கவும் சிறைக் கூடங்களைப் புதுப்பிக்கவும் நிதி ஒதுக்கியாகவேண்டும்.

அர:— நிதிநிலை இடந்தருமானல் கவனிக்கலாம்.

மதி:— வரிப்பணத்தை இந்த வருடம் அதிகமாக எதிர் பார்ப்பதற்கில்லை. ஆதலால் நிர்வாகச் செலவுகளைக் குறைத் தாக வேண்டும்.

அர:— எந்தெந்த வகையில்?

மதி:— உயர்ந்த அதிகாரிகளுக்குத் தாப்படும் மிகுந்த ஊதியத்தில் ஒரு பகுதியைக் குறைத்துவிட்டால், செலவில் கால்வரிசை ஈடாகிவிடும். சிறையில் வதங்கும் பொது நலத் தொண்டர்களை விடுதலை செய்தால், சிறை நிர்வாகச் செலவில் பாதிக்குமேல் குறையும்.

கலை:— மதத்துறையில் வழங்கப்படும் மான்யங்களில் ஓரளவு நிறுத்திவிட்டால், இந்த ஆண்டின் வரவுசெலவை சரிக்கட்டி விடலாம்.

தள:— அரசியல் கைதிகளை விடுதலை செய்வதானது, சர்க்காரே அமைதியைக் குலைப்பதாகும்.

மதி:— இல்லை. அவர்களை உள்ளே வைத்திருப்பதுதான் ஆபத்திற்கு வித்து.

தள:— இதுவரை அரசாங்கம் எடுத்த நடவடிக்கைகள் சரியல்ல வென்று மறைமுகமாக மந்திரியார் கூறுகிறார்.

மதி:— தளபதியாரின் விபரீத வியாக்யானங்கள் நமக்குப் புரிவதில்லை.

கலை:— தேசத்துரோகிகளுக்கு இடம் தர்பார். தேச பக்தர்களுக்கு இடம் சிறையா?

(அமரனை கைதாக்கி சில வீரர்கள் இழுத்து வருதல்)

வீரர் தலைவன்:— அரசே! வணக்கம். இவனை சந்தேகத்தின்பேரில் பிடித்து வந்தோம்.

மதி:— கைதியே! நீ யார்?

தள:— ஆளைப்பார்த்தால் சந்தேகப் பேர்வழியாகத் தெரியவில்லையே!

வீ. 1:— கல்நெஞ்சன். உண்மையை மறைக்கின்றான் சாகசக்காரன்.

தள:— சந்தேகத்திற்கிடமானவனை உடனே சிறையில் தள்ளிவிடுங்கள்.

கலை:— நிரபராதியாக இருந்தாலும் இருக்கலாம். விசாரித்து முடிவு செய்வதே நல்லது.

அர:— ஏன் வாயடைத்திருக்கிறான்?

வீர:— இவன் எவனோ ஒரு ஐந்தாம்படைப் பேர்வழியின் கையாளாகத் தெரிகிறது.

தள:- ஒருவேளை ஊமையாக இருக்கலாம். அடித்துத் துரத்துங்கள். வரவு செலவு திட்டத்தைக் கவனிப்போம்:

வீ. 1;- ஆமாம் இங்கு வந்ததிலிருந்து ஊமையாகத்தா னிருக்கிறான்.

கலே:- அரசே! தளபதியாரை சற்று நிதானமாய் இருக் கச் செய்யுங்கள்.

மதி;— அடே! உண்மையைச் சொல். உன் எஜமானனை யாவது யாரென்று சொல்லிவிடு.

கலே:— எஜமானத் துரோகம் செய்ய அஞ்சுகிறாயோ?

வீ. 1:— உதைச்சால்தான் உள்ளது வெளி வருங்க.

மதி:— ம்... (வீரன் கையை ஓங்கல்)

அம;— இல்லே. சொல்லி விடுகிறேன்.

(உண்மை வெளியாகிவிடும் என்று அச்சங்கொண்ட தளபதி உடனே அமரனை சுட்டுவிடல். சபையில் பர பரப்பு. அமரன் விழுந்து கிடக்கிறான். வீரர்கள் தள பதியைச் சூழ்தல்)

மதி:— என்ன தளபதியாரே! உமது குறுக்குமூளை ரொம்பவேலே செய்திருக்கிறதே!

தள:— இதுபோன்ற துரோகிகளைச் சுட்டொழிக்கத் தான வேண்டும்.

கலே:— ஒழிக்கப்படவேண்டிய துரோகி யார்? ஒரு அம ரனை சுட்டுவிட்டால் உங்கள் சதித்திட்டம் வெளிப்படா தென்ற நினைவா? அரசனைக் கைப்பொம்மையாக ஆட்டிப்படைக்க நினைத்தாய். மன்னவன் உன் வலேயில் விழவில்லே என்பதற்காக மண்டிலத்தையே காட்டிக் கொடுக்கத் திட்டமிட்டிருக்கிறாய். என்னே உன் விபரீத புத்தி மன்னவையில் ஒரு மாசற்றவனை சுடுமளவிற்கு மமதை தலேக்கேறி விட்டதே!

அர;... என்ன!

மதி:—ஆம் அரசே! அன்றொருநாள் பட்டாளத்தில் சேர மறுத்ததற்காக நாடுகடத்தப்பட்டப் பாட்டாளி மகன் (தளபதியைப் பார்த்து) நயவஞ்சகனின் கூட்டாளியாக நடித்து, குள்ளநரிச்செயலே வெளிப்படுத்திய வீரன். பல்

லாண்டாக அரசாங்கம் விளைத்த தொல்லைகளை சமாளித்து அல்லும் பகலும் அடிமைவாழ்வை ஒழிக்கப் பாடுபட்ட உத்தமன்; மனிதருள் மாணிக்கம். தேச சேவையின் காரணமாக தன் வாழ்வையே தியாகம்செய்து கிடக்கிறான். சூறாவளிப் படையின் திலகமாக விளங்கிய வீர அமரன் இவன்தான்.

வீர:— இதோ! கடிதம் ஒன்று இவன் பைக்குள் இருக்கிறது. (அமரனது பையிலிருந்து எடுத்துக்கொடுத்தல்) பெருமக்கள் நழுவ முயற்சித்தல்...

வீர:— என்ன? ஜரிகைக் குல்லாய்களே! நழுவப் பார்க்கின்றீர்கள். (சில வீரர்கள் வளைத்துக் கொள்ளுதல்)

கலை:— (கடிதத்தைப் படித்தல்...) ஆணவகிரி வேந்தன் பொன்னடிகட்கு, சந்திரவதி அரசின தளபதி சமர்ப்பிக்கும் வேண்டுகோள். அரசே! எம்மன்னவனுக்குக் கெடுமதி கண்ணுக்குத் தோன்றவில்லை. பொதுஜன சக்தி, பொறுப்பாட்சி என்றெல்லாம் பிதற்றுகிறார். அரசியல் சீர்திருத்தங்கள் வழங்கயிருக்கிறார். இப்படியாக, இவர் செய்வாரானால், இததொத்துநோய் தங்கள் நாட்டையும் பற்றுமல்லவா...? எவ்வளவு எடுத்துக் கூறியும், பயனில்லை. வருமுன் காவதன்றோ சிறப்பு. ஆதலின் தாங்கள் புராதன அந்தஸ்தைக் காப்பாற்றும் பொருட்டு சந்தர்வதி மீது படையெடுத்து வரவேண்டும். நான் எதிர்ப்பவன்போல நடித்து அரசை வீழ்த்தி விடுகிறேன். இவ்வூர்பெருமக்களும் என்பக்கம்தான். பிறகு தங்கள் கொடிநிழலில் ஏவலனாக அடங்கியிருக்கக் கடமைப் பட்டிருக்கிறேன். மற்றும் தங்கள் ஆணை. இப்படிக்கு சந்தரவதி தளபதி,

அர:— அட நன்றிகெட்ட நாயே! நயவஞ்சகா! அடுத்து கெடுக்க முனைந்த துரோகி!

தள:— இல்லை. சுத்தக் கட்டுக் கதை. நம்பவேண்டாம்.

பெரு:— அரசே! இதில் எங்களுக்கு நம்பிக்கையில்லை

கலை:— மேனி பெருத்தவர்களே! உங்களுக்கு இனி நம்பிக்கை எங்கிருந்து வரும்? அரசே! தளபதியாரின் முத்திரை மோதிரம் எங்கே என்று விசாரியுங்கள்.

பெரு:— மாளிகையிலேயே வைத்து வந்திருப்பார்.

மதி:— இல்லை, அவர் கட்டிய மனக்கோட்டையில் வைத்திருக்கிறார்.

வீர:— இதோ இதுவா? (அமரன் கையிலிருந்துஎடுத்துக் காட்டுதல்).

அர:— (அதை வாங்கிப்பார்த்துவிட்டு) ஆம்! சந்தேகமில்லை. சீ! உன் முகத்தைப் பார்க்கவும கூசுகின்றது. தாய் நாட்டை மாற்றானிடம் காட்டிக் கொடுக்க முனைந்த மாமிசப்பிண்டமே! உன் சொல்லில் எவ்வளவோ மதிப்பு வைத்திருந்தேன். அன்னியனை வரவேற்கும் ஐந்தாம் படைஎனபதை யறியாமற்போனேனே. என்மனச்சான்று என்னை அறுக்கின்றது. உன் பேச்சை நம்பிப் பொது நலத் தொண்டர்களை எவ்வளவோ அவதிக்காளாக்கினேன். அந்தோ! சூறாவளிப் படையை விரோதக்கும்பலாக மதித்தேன். அந்த வீரமறவர்களில் ஒருவனன்றோ இன்று நாட்டின் மானத்தைக் காத்தான். அத்தியாக சிகரம சூறாவளிக்கு இழைத்த அவமானம் கொஞ்சமா? எல்லாம உன்னால்தானடா. இவ்வஞ்சப் பேயை இழுத்துச் செல்லுங்கள் சதி கொலை ஆகிய குற்றங்களைச் செய்த பாதகனை பகிரங்கமாக நிறுத்திச் சுடுங்கள். ம... சதிகாரக் கும்பலின் சொத்துக்கள் பறிமுதலாகட்டும். (பெருமூச்சு) (அமரனைப் பார்த்து) வீர விளக்கே! தியாகச் சுடரே! வஞ்சனையால் வீழ்த்தபபட்டாய்! ம... (அமரனை சிலர் தூக்கிச் செல்லல்) என் நெஞ்சம் வெடித்துவிடும் போலிருக்கிறதே! அவ்வண்ணல் சூறாவளியைப் பார்த்து மன்னிப்புக கேட்டால் அன்றி என் மனம் தேறாது.

கலை:— அரசே! இதோ அப்பெருமகன் (சூறாவளியை அழைத்துவந்து காட்டல்)

அர:— சூறாவளியா!

கலை:— ஆம் அரசே! அமரபவனத்தில் தங்கி மறைமுகமாக அரசியல் சேவை செய்துவருகின்றனா.

அர:— பெரியீர்! என் ஆட்சியின் அவலத்தை மறந்து மன்னித்து விடுங்கள். (அரசனும் சூருவளியும் தழுவிக் கொள்கின்றனர்)

சூரு:— வேந்தே! காலச்சுழலில் நடந்தவற்றை நினைந்து மனமொடிய வேண்டாம். ஒரு சில அதிகார வெறியரின் ஆணவச் செயல்களால் அரசுகள் அல்லற்பட்டதுண்டு. அதற்கு நம் சந்திரவதியும் இரையானது. பாதகன் பொதுமக்களின் பச்சை ரத்தத்தைப் பரிமாறி நாட்டைப் பாழ்படுத்த நினைத்தான். சோதனைக் கடந்துவிட்டோம். தேச சேவையில் தியாகத் தழும்பேற்ற செம்மலின் சரிதை பொன்னெழுத்துக்களால் பொறிக்கப்பட வேண்டும். குண்டடிபட்ட அந்த வீரமகன் பிழைத்தெழ ஆவன செய்யக் கடமைப் பட்டிருக்கின்றோம்,

(சிகிச்சைசெய்ய மருத்துவ கூடத்திற்கு எடுத்து செல்லப்படுகிறன்.)

அர:— தோழர்களே! இதோ முடிதுறந்து விட்டேன், இனி, நான் மன்னனல்ல... மக்களில் ஒருவன், தனி ஒருவனுக்கு இந்நாடு சொந்தமல்ல. நீங்கள் எல்லோரும் இந்நாட்டு மன்னர், பிற்போக்கு சக்திகளுக்கு இனிஇட மில்லை. மகத்தான பொறுப்புகளைத் தாங்க முன்வாருங்கள், ஆக்க வேலைக்கு ஆவன செய்வோம். சமதர்மம் தழைத்தோங்கட்டும்.

# களம் 28

இடம் :— அமரபவனத்தில் ஒரு குடில்

காலம் :— காலை

மாந்தர் :— கன்னி, அமரன்

கன் :— (பழங்கொடுத்தல்) இதைமட்டும் வாங்கிக்கொள்ளுங்கள்.

அம :— போதும்.

கன் :— ஏன் புளிக்கின்றதா ?

அம :— உன் கையால் கொடுக்கும்போது புளிக்குமா ?

கன் :— தின்றால்தானே தேறலாம்

அம :— உனது அன்பு ஒன்று போதுமே அதற்கு !

கன் ;— எவ்வளவு புழுக்கம் ? நமது சாரலில் உள்ள குளுமை வருமா ? (விசுறுதல்)

அம :— இப்படி ஓயாமல் விசிறிக்கொண்டே இருந்தால் கை நோகாதா ?

கன் :— அந்தக் குண்டுக் காயத்தை விடவா ?

அம :— அதெல்லாம் உன் நேயத்திற்குமுன் எம்மாத்திரம் !

கன் :— அதனால்தான் அவ்வஞ்சகனின் குண்டுகளையும் தாங்கிக்கொண்டீரோ ?

அம :— அட பயித்தியமே !

கன் :— அடிபட்டவுடன் சித்தங்கலங்கி இந்த உலகத்தையே மறந்து கிடந்தது நான்தான்.

அம :— உலகத்தையே மறந்தாலும் உன்னை மறந்திருக்க மாட்டேன்.

கன் :— அது கிடக்கு, அந்தப் பெரிய ஜகஜாலப் புரட்டன் உம்மை எப்படி நம்பினான் ?

அம:— அத்துரோகிக்கு மண்ணாசை கண்ணை மறைத்து விட்டது.

கன்:- என்ன இருந்தாலும் நீரும் அவனுக்கு ஒத்துழைத்த வரல்லவா ?

அம:— எப்படி ?

கன்:— அவன் நாட்டுக்கு துரோகம் நினைத்தான். நீர் அவன் நம்பிக்கைக்கு துரோகம் செய்தீர்.

அம:— அவனிடம் கற்ற வித்தையை அவனிடமே திருப் பிக் காட்டினேன்.

கன்:— குரு தட்சணையோ ?

அம:— இல்லாவிட்டால் உன் தயவு கிலைக்குமா ?

கன்:— நாழியாகிறது. மருந்து கட்டுகிறேன்.

அம:— அதெல்லாம் போதும். நீதான் எனக்குச் சாவா மருந்து.

(பிரார்த்தனை மணி ஒலிக்கின்றது)

(யாவரும் பாடுமிடத்தில் கூடி நிற்கின்றனர். கன்னி பாடுகிருள்)

மதி:— பெருமக்களே ! வணக்கம். நம் சுதந்திர விழா கொண்டாடவேண்டிய நிலையில் இருக்கின்றோம். அதற்கு முன்னதாக, சமதர்ம வாழ்விற்கான சட்ட திட்டங்களைக் கொண்டு நடத்தவேண்டும் சக்திக்கேற்ற உழைப்பு, தேவைக்கேற்ற ஊதியம் என்பதே நியதியாகும். மனிதன் மனிதனுக வாழவேண்டும். பலர் எலியாகவும், சிலர் புலி யாகவும் வாழ இனி இடமில்லை. பிறப்பினுல் உயர்வு தாழ்வு பேசுவது இயற்கையை அவமதிப்பதாகும். தனி உடைமைத் தத்துவம் தகர்க்கப்பட்டுவிட்டது. நாடு நமக்கு சொந்தமென்ற நினைவைவிட்டு நாட்டிற்கு நாம் சொந்தம் என்ற அளவில் சொத்துரிமை தேச உடைமையாக்க வேண்டும். இம்மகத்தான காரியங்களை திறம்பட நடத்தவல்ல பெருமக்கள் அரசியலில் பங்கெடுத்துக் கொள்வார்களென நம்புகின்றேன், நலம்.

சூரு:— தோழர்களே! நம் எண்ணம் இவ்வளவு எளிதாக ஈடேறுமென, யாரும் எதிர்பார்த்திருக்க முடியாது இன்னல்களைத்தாங்கவும், இரத்தம் சிந்தவும், உயிரைத் தியாகம் செய்யவும், தயாராக இருந்தோம். தளபதியாரின் வஞ்சகம் புரட்சி போராட்டம் யாவற்றிற்கும் ஒரு முற்றுப் புள்ளி வைத்தது. அந்த வகையில் நன்றிசெலுத்த வேண்டியதுதான் நம் மன்னவனின் மனப்பாங்கை மாற்றி அமைத்த முழுப் பெருமையும் மதிவாணர்க்கும். கலைவாணர்க்குமே உரித்தது மக்களின் போக்கறிந்து தன் மணிமுடியை விட்டுக்கொடுத்த மன்னரின் பெருந்தகவு பாராட்டற்குறியது இந்த பெரிய மாறுதலுக்கு கருவியாக நின்று அருந்தொண்டு புரிந்த அமரனை மறக்க முடியுமா! அவ்வீரனது வாழ்வு செழிக்க என் அருமை மகள் கன்னியைத் துணைப்படுத்துகின்றேன். (இருவரையும் கை கோர்த்துவிடல்) என் கண்மணிகாள்! நீவிர் காதலிற் சிறந்து கருத்து ஒருமித்து ஆதரவுடன் வளம்பல பெற்று நலமாக வாழ்க! வாழ்க!!

யாவரும்:— அமரன் வாழ்க!
கன்னி வாழ்க!

| | | | |
|---|---|---|---|
| மதி:— | சமதர்மம் | (யாவரும்) | ஓங்குக! |
| | அமைதி | ,, | நிலவுக! |
| | அன்பு | ,, | வெல்க! |

நலம்

## [illegible]லர்ச்சி வெளியீடுகள் !

"எரிமலை" ஆசிரியர் A. K. வேலன் தீட்டிய

- இராவணன் ... ரூ. 1-12-0
- சிலம்பு ... (அச்சில்)
- பெரியார் ... (அச்சில்)

★

**அடுத்து வெளிவருபவை:**

- மேகலை ... ...
- எரிமலை ... ...
- இலட்சியவாதி ...
- கட்டபொம்மன் ...

முதலிய நாடகச் சித்திரங்களை எதிர்பாருங்கள் !

## செந்தமிழ்ப் பாசறை,

கரந்தை. :: தஞ்சாவூர்.

கதிரேசன் பதிப்பகம், 702. கீழலங்கம், தஞ்சை